சத்தியவசனம் வெளியீடு

# அநுதினமும் தேவனுடன்

'என் இரட்சிப்பின் தேவனுக்குக்
காத்திருப்பேன்.
கர்த்தர் எனக்கு
வெளிச்சமாயிருப்பார்!'
(மீகா 7:7,8)



ஜூலை
ஆகஸ்ட்
செப்டெம்பர்
**2009**

வருடம் - 37 தீபானம் - 3

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

### ஜூலை

| திகதி | காலை | | மாலை | |
|---|---|---|---|---|
| 01 | 2நாளா | 21,22,23 | அப். | 7:41-60 |
| 02 | 2நாளா | 24,25 | அப். | 8:01-25 |
| 03 | 2நாளா | 26,27,28 | அப். | 8:26-40 |
| 04 | 2நாளா | 29,30 | அப். | 9:01-25 |
| 05 | 2நாளா | 31,32 | அப். | 9:26-43 |
| 06 | 2நாளா | 33,34 | அப். | 10:01-22 |
| 07 | 2நாளா | 35,36 | அப். | 10:23-48 |
| 08 | எஸ்றா | 1,2 | அப். | 11 |
| 09 | எஸ்றா. | 3,4,5 | அப். | 12 |
| 10 | எஸ்றா. | 6,7 | அப். | 13:01-13 |
| 11 | எஸ்றா. | 8,9 | அப். | 13:14-39 |
| 12 | எஸ்றா. | 10 | அப். | 13:40-52 |
| 13 | நெகே | 1,2,3 | அப். | 14 |
| 14 | நெகே | 4,5,6 | அப். | 15:01-18 |
| 15 | நெகே | 7,8 | அப். | 15:19-41 |
| 16 | நெகே | 9,10 | அப். | 16:01-24 |
| 17 | நெகே | 11,12 | அப். | 16:25-40 |
| 18 | நெகே | 13 | அப். | 17 |
| 19 | எஸ். | 1,2 | அப். | 18 |
| 20 | எஸ். | 3,4,5 | அப். | 19:01-22 |
| 21 | எஸ். | 6,7,8 | அப். | 19:23-41 |
| 22 | எஸ். | 9,10 | அப். | 20:01-16 |
| 23 | யோபு | 1,2,3 | அப். | 20:17-38 |
| 24 | யோபு | 4,5,6 | அப். | 21:01-26 |
| 25 | யோபு | 7,8,9 | அப். | 21:27-40 |
| 26 | யோபு | 10 - 13 | அப். | 22 |
| 27 | யோபு | 14,15,16 | அப். | 23 |
| 28 | யோபு | 17 - 20 | அப். | 24 |
| 29 | யோபு | 21,22,23 | அப். | 25 |
| 30 | யோபு | 24 - 28 | அப். | 26 |
| 31 | யோபு | 29,30,31 | அப். | 27:01-20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதினமும் தேவனுடன்

## சத்தியவசன வெளியீடு

**(DAILY DEVOTIONS)**

## ஜூலை - ஆகஸ்ட் - செப்டெம்பர்

## 2009

BACK TO THE BIBLE®


நிர்வாக இயக்குனர்

திரு. மயுக பெரேரா

தமிழ்ப்பணி பொறுப்பாளர்

திரு. நீரியஸ் பெர்னான்டோ

தபால் முகவரி:
சத்தியவசனம்
த.பெ. 1012, கொழும்பு
இலங்கை.

நேரில்:
120A. தர்மபால மாவத்தை
கொழும்பு 7
இலங்கை

TEL: 011-2695441, FAX: 011-2698843

Email: svsl@backtothebible.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்.*
*கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது!'*
*(சங்கீதம் 138:8)*

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த வருடத்தின் மூன்றாவது வெளியீடாக வெளிவரும் இந்த அனுதினமும் தேவனுடன் சத்தியவசன தியான நூல் ஊடாக உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

காலையில் எழுந்திருக்கும்போது பலவிதமான பாரங்கள் மற்றும் அதிகமான வேலைப்பளுவின் மத்தியில் "நான் இதை இன்று எப்படி செய்து முடிப்பேனோ" என்ற கலக்கத்தோடு, கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருந்து, அவருடைய வார்த்தையை தியானிக்கும் போது நிச்சயமாகவே, '*கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்*' என்ற நம்பிக்கையை நாம் ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்கிறோம். ஆம், அந்தவகையில் இம்முறையும் இத் தியானங்கள் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வுக்கு ஆசீர்வாதமாய் அமைய ஜெபத்தோடு வெளியிடுகின்றோம். தியானங்கள் எந்த விதத்தில் உங்கள் நாளாந்த வாழ்வில் ஆசீர்வாதமாக அமைந்தது என்பதைக் குறித்த உங்கள் சாட்சிகளையும் கருத்துக்களையும் தவறாமல் எமக்கு எழுதித் தெரிவியுங்கள்.

இம்முறை ஜூலை மாதத்திற்கான தியானங்களை '23ம் சங்கீதம் கற்றுதரும் பாடம்' என்ற தலைப்பில் சகோதரன் வஷ்னீ ஏனர்ஸ்ட் அவர்களும், ஆகஸ்ட் மாத தியானங்களை 'தேவனுடனான ஐக்கியம்' என்ற தலைப்பில் சகோதரி சாந்திபொன்னு அவர்களும், செப்டெம்பர் மாத தியானங்களை 'சீடத்துவம்' என்ற தலைப்பில் சகோதரி தர்ஷினி சேவியர் அவர்களும் எழுதியுள்ளார்கள்.

நமது ஆண்டவரின் தெய்வீக பாதுகாப்பும் ஆசீர்வாதமும் உங்கள் அனைவரோடும் எப்போதும் இருப்பதாக!

இப்படிக்கு

நீரியஸ் பெர்ணான்டோ

கர்த்தரின் பணியில்
(சத்தியவசனம் - தமிழ்பணி பொறுப்பாளர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை

**1**

*புதன்*

வாசிப்பு: உபாகமம் 32:9-14

# தேவனுடனான உறவு

'கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்.'
(உபாகமம் 32:12)

தமது சாயலிலே மனிதனைச் சிருஷ்டித்த தேவன், அவனை அப்படியே விட்டுவிடவில்லை. அவனுடன் உறவாடவேண்டுமென வாஞ்சித்தார். ஆகவே, அவர் அவனைத் தேடி வந்தார். ஏதேனிலே, பகலின் குளிர்ச்சியானவேளையிலே ஆதாம் ஏவாளுடன் தேவன் உலாவினார் (ஆதி.3:8) ஆயினும், தன் இஷ்டப்படி சென்ற மனிதன் பாவத்தில் வீழ்ந்தபோது, தேவனுடனான அன்பின் உறவில் விரிசல் ஏற்பட்டது. எனினும், தேவன் அவர்களைக் கைவிடவில்லை. தொடர்ந்தும் தேடினார். இவ்விதமாக தேவன் தாம் சிருஷ்டித்த பிள்ளைகளைக் கைவிடாமல் தேடிவந்த உறவானது, ஒரு மேய்ப்பனுக்கும் மந்தைகளுக்குமான உறவு போல இருப்பதைக் காண்கிறோம். இந்த மேலான உறவையே "23ம் சங்கீதம்" மிக அழகாக நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது. இதுதருகின்ற படிப்பினைக் குறித்து இனி நாம் தியானிக்கப் போகின்றோம்.

தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த உறவு பாவத்தினால் விரிசலடைந்தது. இது, நல்ல மேய்ப்பனின் கரிசனையினால் மாத்திரமே மீண்டும் அது சரிசெய்யப்பட்டது. அதாவது, பாவத்தின் விளைவுகளை நீக்க, கிறிஸ்து தாமே மனுஷனாக புவிவந்து, பாடுபட்டு, மரித்து, உயிர்த்தெழுந்து பிரிவினை என்ற நடுச்சுவரைத் தகர்த்தார். மாத்திரமல்ல, பாவத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நம் ஒவ்வொருவரையும் உணர்த்தி, நல்வழிப்படுத்துகிறார். தேவன் அருளிய இலவச ஈவான பாவத்திற்கான மன்னிப்பைப் பெற்ற தேவபிள்ளைகளாகிய நாம், தேவனோடுள்ள உறவை சரியாகப் பேணாமல், வழி தவறிச்செல்லுகின்ற ஆடுகளைப்போல இன்னமும் ஜீவிப்பதுதான் பரிதாபத்திற்குரிய விடயமாகும்.

இன்றைய வாசிப்புப் பகுதியிலே, தேவன் தமது பிள்ளைகள்மீது வைத்திருக்கும் கரிசனை, ஒரு கழுகு தன் குஞ்சுகளில் வைத்திருக்கும் கரிசனைக்கு ஒப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். "கழுகு தன் கூட்டைக் குழப்பி, தன் குஞ்சுகளுக்கு மேலாக வட்டமிட்டு, தன் செட்டைகளை விரித்து, அவைகளைத் தன் சிறகுகளில் ஏந்திக்கொண்டு சுமந்துசெல்வதுபோல், அவர் அவர்களைப் பராமரித்தார்" என இப் பகுதியை ஒரு தமிழ் மொழிபெயர்ப்பு விபரிக்கிறது. எமது வாழ்விலே தேவன் எவ்வளவு அக்கறையாக இருக்கின்றார் என்பதை இவ்வசனம் தெளிவாக விளக்குகிறது. மேலும், தேவன், "அவனைத் தமது கண்மணியைப் போலக் காத்தருளினார்" என இஸ்ரவேல் மக்கள் கேட்கத்தக்கதாக மோசே பாட்டாக பாடியதையும் காண்கிறோம். தேவன் எமது வாழ்க்கையையும் கவனிக்கின்றார். அனுதினமும் பேணிப் பாதுகாத்து வருகின்றார். ஆனால் நாம் எப்படி வாழுகிறோம்? தேவனோடுள்ள உறவில் வளர அனுதினமும் பிரயாசப்படுகிறோமா? அல்லது, எமது இஷ்டப்படி வாழ எல்லைகளைத் தாண்டுகின்றதான ஒரு மந்தையாக இன்னமும் இருக்கின்றோமா?

"நல்ல மேய்ப்பனே, உம்மோடுள்ள உறவில் நான் அனுதினமும் வளர்ந்து உம் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்க எனக்குப் போதித்தருளுவீராக. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: யோவான் 10:11-17

ஜூலை
2
வியாழன்

# நல்ல மேய்ப்பன்

'நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கின்றான்.' (யோவான் 10:11)

பழைய ஏற்பாட்டிலுள்ள பல தேவமனிதர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரோடு நெருங்கிச் சஞ்சரித்துள்ளார்கள். ஏனோக்கு, தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்ட ஆபிரகாம், சிநேகிதனோடு பேசுவதுபோல பேசிய மோசே என தேவனோடுள்ள மனிதருடைய உறவானது கட்டியெழுப்பப்பட்டாலும் அது கிறிஸ்து இயேசுவினாலேயே பூரணமாக்கப்பட்டது. ஆம், அதைத்தானே இரட்சகர் எமக்காக சிலுவையில் நிறைவேற்றினார். 'நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கின்றான்" என்று இயேசு கூறியதை யோவான் எழுதி வைத்துள்ளார். அவர் எமக்காக சிலுவையில் பாடுபட்டு சிந்திய இரத்தத்தினாலே நாம் அவரை எமது இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர் அருளிய மன்னிப்பை ஈவாகப் பெற்றுக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

இயேசுவானவர் தன்னை ஒரு நல்ல மேய்ப்பனாக அடையாளப்படுத்தியதோடு நிறுத்திவிடாமல், அப்படியே செயற்பட்டதையும் நாம் நற்செய்தி நூல்களிலே வாசிக்கிறோம். அப்படிப்பட்ட நல்ல மேய்ப்பனை அறிந்த நாம், அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கிறோமா? "என்னுடையவைகளை நான் அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன். ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" என்று இந்த உலகிலே ஒரே ஒருவர் மட்டுமே ஆணித்தரமாகக் கூறியுள்ளார். அவரே எம் இரட்சகராகிய இயேசு. அவரின்றி வேறு நல்ல மேய்ப்பர்கள் இவ்வுலகிலே கிடையாது.

ஆண்டவர் இயேசுவை நல்ல மேய்ப்பனாகவும், ஆடுகளுக்கு உற்ற காவலனாகவும் மாத்திரமல்லாமல், அதற்கும் மேலாக யோவான் எமக்கு அவரை வெளிப்படுத்தியுள்ளார். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோவான் 1:12). அப்படியானால் நாம் அவருடைய மந்தைகள் மாத்திரமா? இல்லை, அதைவிட மேலான உரிமையுள்ளவர்கள் அல்லவா. உண்மையில், அவரை ஏற்றுக்கொண்டவர்களானால், நாம் அவருடைய சொந்தப் பிள்ளைகள் அல்லவா? நாம் தேவனுக்குப் பிள்ளைகள் என்ற அதிகாரம் வேறு எங்கே கிடைக்கும்? பழைய ஏற்பாட்டு பக்தர்களுக்குமே கிடைக்காத அரிய பாக்கியம் எமக்குக் கிடைத்திருக்க, நாம் எமது தந்தையோடு உறவைப் பேணுவது அவசியமன்றோ! அந்த உறவைக் கட்டிக்காப்பதும் தொடர்ந்து பேணுவதும் எவ்வளவு முக்கியமானது என்பதை உணருகிறோமா? அவருடைய சத்தத்தைத் தானும் நம்மால் கேட்க முடிகிறதா?

"ஆண்டவரே, நீர் என்னுடைய நல்ல மேய்ப்பன்; உமக்கு நானோ செல்லப் பிள்ளை. உம்மோடுள்ள இந்த உறவில் நான் அனுதினமும் வளர்ந்து, உமது வழியிலே நடக்க எனக்கு உதவிசெய்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
3
வெள்ளி

வாசிப்பு: 1பேதுரு 5:1-5

# பிரதான மேய்ப்பன்

...பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். (1பேதுரு 5:3,4)

இன்று இருவகை கிறிஸ்தவர்கள் உள்ளனர். ஒருசிலர், இயேசு கிறிஸ்துவை தங்களின் மீட்பராக அறிந்துள்ள பொழுதிலும் தங்கள் பாரத்தைத் தாங்களே சுமக்கின்றனர். இதனால் நாளடைவில் மனக்கசப்படைந்து சோர்வடைந்துவிடுகின்றனர். மற்றவர்களோ, இயேசுவை தங்களின் மீட்பராக அறிந்து, அவரையே தங்களின் வாழ்க்கைக்குரிய மேய்ப்பனாகவும் கொண்டுள்ளனர். நேற்றைய தியானத்திலே, இயேசுவானவர் தன்னை ஒரு நல்ல மேய்ப்பனாக அடையாளப்படுத்தியதின் முக்கியத்துவத்தை தியானித்தோம். இன்றைய நாளின் வாசிப்புப் பகுதியிலே அவரே "பிரதான மேய்ப்பன்" என பேதுரு சுட்டிக்காட்டுவதைக் காண்கிறோம்.

இங்கே, பலவருடங்களுக்கு முன்பு தேவன் செய்ததைப்பற்றிய ஒரு வரலாற்று உண்மையை அல்லது அடுத்து வரப்போகும் தலைமுறையினருக்கு அவர் என்ன செய்யப்போகின்றார் என்பதைப் பற்றியதான வரைபடத்தை பேதுரு கூறவில்லை. மாறாக நல்ல மேய்ப்பனாக சித்தரிக்கப்படும் நம் ஆண்டவர் நமக்கு என்னத்தைச் செய்ய விரும்புகிறார் என்பதையும், நல்ல மேய்ப்பனான இயேசு ஒருவரே ஆடுகளுக்குரிய பாதுகாவலனாக இருக்கிறார் என்பதையுமே வெளிப்படுத்துகின்றார். அப்படியானால் கள்ள மேய்ப்பர்கள் இருக்கின்றார்களா என நாம் கேட்கக்கூடும். ஆம், அவர்கள் மந்தைகளைக் குறித்த வாஞ்சையில்லாதவர்களாக கடமைக்காக அவற்றை கண்காணிப்பு செய்பவர்கள். வேதவசன போதனைகளைக் கொடுக்காமல், பிரசங்கமேடைகளை தவறாக பயன்படுத்துபவர்கள். கொள்ளையிடுபவர்கள். ஆதாயத்திற்காக பதவிவகிப்பவர்கள். இத்தகைய கள்ள மேய்ப்பர்கள் மந்தைகளை வஞ்சிப்பது ஒருபக்கமிருக்க, மறுபக்கம் ஆடுகளை ஏமாற்றும் ஓநாய்களின் தொல்லைகளும் தேவபிள்ளைகளை வழி தவறச் செய்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் ஒருநாள் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது இவர்கள் நிச்சயமாக வெட்கப்பட்டுப் போவார்கள்.

மேய்ப்பருக்கெல்லாம் பிரதான மேய்ப்பர் நமக்குண்டு. அவர் நம்மைப் பாதுகாப்பார். அவர் கரங்களுக்குள் இருக்கும்வரைக்கும் நம்மை எதுவும் ஒன்றும் செய்யமுடியாது. நாம் மெய்யாகவே அவருடைய மந்தைகளானால், அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவருக்கு மாத்திரம் கீழ்ப்படிந்திருப்போம். மனத்தாழ்மையை அணிந்திருப்போம். வாடாத மகிமையுள்ள கிரீடம் ஒன்று நமக்காக உண்டல்லவா! இறுதியில் அதைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால், பிரதான மேய்ப்பரின் மேய்ச்சலில் கீழ்ப்படிவுள்ள உள்ளத்தோடு அமர்ந்திருப்போமாக.

"ஆண்டவரே, நீர் பிரதான மேய்ப்பனாக வெளிப்படும்போது, உமது சத்தத்திற்கு கீழ்ப்படிந்தேன் என்ற சந்தோஷத்தோடு உம்மைச் சந்திக்கத்தக்கதாக இன்றே என்னை நல்வழியிலே நடத்தியருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: 1இராஜாக்கள் 22:13-18

ஜூலை
4
சனி

# கர்த்தர்

'கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்.' (சங்கீதம் 23:1)

"தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்" என அழைக்கப்பட்ட (1சாமு. 13:14,22) தாவீதினால் எழுதப்பட்ட 23ம் சங்கீதமானது "கர்த்தர்" என்ற வார்த்தை யுடனேயே ஆரம்பமாகிறது. கர்த்தர், அவர் ஆண்டவர்; ஆளுகை செய்கிறவர். ஆளுகையின் தேவனாகிய அவரே நமது மேய்ப்பராகவும் இருக்கிறார். இது என்ன பெரிய பாக்கியம். இதனை தாவீது தனது அனுபவமாகக் கொண்டிருந்தார் என்பது இந்த சங்கீதத்திலிருந்து விளங்குகிது.

மிகாயா தீர்க்கதரிசி, இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து உரைத்த தீர்க்கதரிசனத்தில், கர்த்தர் சொன்னதை மாத்திரமே மிகாயாவும் சொன்னதைக் காண்கிறோம். மிகாயா தன்னைக்குறித்து எப்பொழுதுமே தீமையாக தீர்க்க தரிசனம் உரைப்பவன் என்று இஸ்ரவேல் ராஜா கருதியபோதும், "சீரியருடன் யுத்தத்திற்குப் போகலாமா?" என்பதைக்குறித்து மிகாயாவையே அழைப்பித்து, தேவ சித்தத்தைக் கேட்கின்றான் ராஜா. அவனும், "போம், உமக்கு வாய்க்கும். கர்த்தர் அதை ராஜாவின் கையிலே ஒப்புக்கொடுப்பார்" என்று கூறிவிட்டு, "இஸ்ர வேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப் பட்டதைக் கண்டேன்" என்றும் சொன்னான். தலைவன் இல்லாத மக்களின் நிலைமை பரிதாபகரமாக இருக்கப்போகின்றது என்பதையே மிகாயா வெளிப்ப டுத்தினான். இன்று நமது வாழ்விலும், நம் மேய்ப்பனின் நடத்துதல் இல்லா விட்டால் நாமும் சிதறிப்போவது உறுதி.

மேய்ப்பன் இல்லாத ஆடுகளின் நிலைமையை சிந்தித்துப்பாருங்கள். அரவணைப்போ, அன்போ, பாதுகாப்போ எதுவுமே அற்ற ஒரு சூனியமான நிலை மைதானே அது. கர்த்தர் எம்முடன் இல்லாவிட்டால், இஸ்ரவேலின் மக்களைப் போன்று ராஜா அற்ற நிலைமையே எமக்கும் ஏற்படும். யார்தான் அவ்வாறு இருக்க விரும்புவார்கள்? கிறிஸ்து இல்லாத வாழ்க்கையில் எப்பொழுதுமே அபாயகரமான நிலைமையே இருக்கும். ஆபத்தில் அவர்களைக் காப்பது யார்? இரட்சிப்பு கர்த்தரிடமல்லவா இருக்கின்றது. ஆம், இன்றும் எம்மை ஒருவர் கவனிக்கிறார், பராமரிக்கிறார், எம் தேவைகளையெல்லாம் அவரே சந்திக்கிறார் என்பதை ஆடுகளாகிய நாம் உணர்ந்தவர்களாக, மேய்ப்பனான கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து இருக்கும்போதே ஆசீர்வாதம் நிலைபெற்றிருக்கும். மேய்ப்பனுடன் இருக்கின்ற ஆடுகள் எவ்வளவு சுதந்திரமாக, சுயாதீனமாக, பாதுகாப்பாக இருக்கிறதோ அவ்வாறாகவே நாமும் இவ்வுலகில் வாழமுடியும். எமக்கு இன்று நல்ல மேய்ப்பனாக கிறிஸ்து இருக்கின்றார். எம்மை சத்தியத்தின் பாதையிலே நடத்துகிறார். நித்திய ஜீவன் தரும் நல்ல மேய்ப்பன் நம்மோடிருக்கையில் நமக்கேன்தான் இவ்வுலகில் வீண் கவலை?

"இயேசுவே, ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு நிமிடமும் நீரே என்னை ஆளுகை செய்கின்ற மேய்ப்பராக இருக்கவேண்டும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
**5**
ஞாயிறு

வாசிப்பு: எரேமியா 50:4-7

# என் மேய்ப்பர்

'கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்.' (சங்கீதம் 23:1)

23ம் சங்கீதத்தின் முதலாம் வசனத்தின் அடுத்த சொல்லான "என்" என்பது முக்கியமானதொரு சொல்லாகும். இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்னர், மற்றவர்களுடைய வாழ்க்கையில் மேய்ப்பனாயிருக்கும் இயேசு ஒரு மேய்ப்பனைப்போல நம்மையும் அரவணைத்திருப்பதை உணர்ந்திருக்கிறோமா? இன்று அநேக கிறிஸ்தவர்கள், ஆண்டவரின், "மேய்ப்பனைப் போன்ற அரவணைக்கும் தன்மையை" மற்றவர்களில் கண்டு இரசிக்கிறார்கள். ஆனால், இயேசுவை தங்களின் மேய்ப்பனாக ஆக்கிக்கொள்ளாதபடியினாலே இன்னமும் பயத்திலும் விரக்தியிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள வெகுசிலர் மட்டுமே கவலையற்ற வாழ்வு என்றால் என்ன என்பதைப் புரிந்துவைத்துக் கொண்டுள்ளனர். இயேசு நமது இரட்சகர் மட்டுமல்ல, அவர் நமது சொந்த மேய்ப்பராகவும் இருக்கிறார்.

இன்றைய வாசிப்புப் பகுதியிலே 'யூதா புத்திரரும் ஏகமாய் அழுது, நடந்துவந்து, தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று எரேமியா சொன்னதை வாசித்தோம். யார் யார் தேவனை உண்மையாய் தேடுகிறார்களோ, அவர்களாலேயே தேவனுடைய அன்பின் அரவணைப்பை உணரமுடியும். கர்த்தர் பிறருக்கு மீட்பராக இருந்து நமக்கு என்ன வரப்போகிறது என்பதல்ல. அவர் எனக்குக் கர்த்தரா என்பதே கேள்வி. எவர்கள் தேவனின் இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ, எவர்கள் அவரை விசுவாசிக்கிறார்களோ அவர்களால் மாத்திரமே ஆண்டவரை "என்" மேய்ப்பர் என்று உரிமைபாராட்டவும் முடியும்.

உலகத்தைப் படைத்து அதைத் தன் கைகளிலே ஏந்திக்கொண்டு இருப்பவரும் இருக்கிறவருமான தேவனை சொந்தம்கொண்டாடுவது எவ்வளவு பாக்கியமானது. எல்லா அன்பும் வல்லமையும் கனமும் படைத்த மீட்பரை அறிந்துகொள்வது எத்தனை ஆச்சரியமானது? "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது" (மத்.28:18) என்று இயேசு கூறினார். அவர் சாத்தானை சந்தித்தபொழுது எவ்விதமாய் அவனை மேற்கொண்டாரோ, அதேபோல தமது பிள்ளைகள் ஒவ்வொருவரையும் எதிர்க்கின்ற எதிரியையும் மேற்கொள்ள நல்ல மேய்ப்பனாகிய அவரே வல்லவராயிருக்கிறார். நாம் தம்மை நமது மேய்ப்பனாக்கிக்கொள்ள வேண்டுமென்று காத்து நிற்கிறார். ஏனெனில், நமக்கு வரக்கூடிய ஆபத்துக்களை முன்கூட்டியே அறிந்தவர் அவரே. அவரே நம்மைக் காப்பாற்றுகிறவர். இந்த தேவனை "என் மேய்ப்பரே" என்று அழைக்க நம்மால் கூடுமோ!

"கர்த்தாவே, பரலோகத்திலும் பூலோகத்திலும் உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு. என் நேசரே, என் மேய்ப்பரே என்னையும் உமது மந்தையாய் பிள்ளையாய் அரவணைத்துக்கொள்ளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: சங்கீதம் 68:4-6

ஜூலை
6
திங்கள்

# நான் தாழ்ச்சியடையேன்

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்."
(சங்கீதம் 23:1)

தேவன் தம்முடைய ஒவ்வொரு பிள்ளைகளையும் கவனிக்கின்றவர். தகப்பனாய் நின்று பாதுகாக்கின்றவர், தேவை ஏற்படும்போது நீதியாய் நியாயம் விசாரிப்பவர். இதுபோன்ற பல சத்தியங்களை இன்றைய வாசிப்புப் பகுதியாகிய தாவீதின் சங்கீதத்திலே நாம் காண்கின்றோம். இச் சத்தியங்களை தாவீது தனது வாழ்நாள் முழுவதும் நன்றாக அனுபவித்து உணர்ந்துகொண்ட படியினாலேயே "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்" என்று கூறி தனது வாழ்விலே தேவனின் கரிசனை வெளிப்படுவதை சுட்டிக்காட்டுகிறார். உண்மையில் தேவன் எமது மேய்ப்பராக இருக்கும்போது, அவரது பராமரிப்பில் ஒருகுறையும் ஏற்படுவது இல்லை. ஏனென்றால், மேய்ப்பனானவர் ஒவ்வொரு தேவையையும் சந்திக்கிறவர். தேவை எதுவோ, அதனை மேய்ப்பனானவரே தீர்த்தும் வைக்கிறவராக இருக்கிறார்.

விசேஷமாக மனமொடிந்துபோயிருப்பவர்களுக்கு, ஆண்டவர்தாமே மிக அண்மையில் இருக்கிறார். தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்திக் கொடுக்கின்றார். கட்டுண்டவர்களை விடுதலையாக்குகின்றார். ஆம், "நொருங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" (சங்.34:18). மேலும், கர்த்தர் நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அனைத்திலுமிருந்து அவனை விடுவிப்பார். ஆம், இயேசு ஒருவரே, மனமொடிந்திருப்பவர்களைத் தேற்றி, வாழ்க்கைப் புயலில் அலைமோதுகின்ற ஒவ்வொருவருக்கும் அதன் மத்தியில் சமாதானத்தை அருளுகிறவர். அன்று சீஷர்களோடு படகில் பயணித்தபோது ஏற்பட்ட புயலிலிருந்து அவர்களை விடுவித்தவர் இன்று நமக்கு ஏற்படுகின்ற போராட்டங்களிலும் நம்மை விடுவிப்பார். நமது குறைவுகளை அவர் பார்த்துக்கொள்வார். ஏனெனில் நம் மேய்ப்பர் என்றும் உயிரோடிருக்கின்றார் அல்லவா!

பரமண்டல ஜெபத்திலும்கூட, "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என அவருடைய பராமரிப்பையும், "தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என அவருடைய பாதுகாப்பையும் விசேஷமாகக் குறிப்பிட்டு ஜெபிக்கும்படி இயேசுவானவர் நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார். ஆகவே நிச்சயமாக அவர் நம் குறைவுகளைச் சந்திக்கிறார். நமது ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். எம்மைப் பாதுகாக்கிறார். எப்படிப்பட்டவர்களாக நாமிருந்தாலும் உலகைப் படைத்த சிருஷ்டிகர் தாமே தமது பிள்ளைகளைப் போஷித்துக் காத்து வழிநடத்துகிறார். நமது இருதய கடினத்தின் நிமித்தம் அதனை நாம் உணராமல் போய்விடாதபடி, உணர்வுள்ளவர்களாக நன்றியுடன் ஜீவிக்க தேவன்தாமே நமக்குக் கிருபை செய்வாராக.

"இயேசுவே, நீர் என் மேய்ப்பனாக இருப்பதினால், நான் ஒருபோதும் தாழ்ச்சியடைந்து போவதில்லை என்ற நிச்சயத்தைத் தந்தமைக்காக நன்றி. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
7
செவ்வாய்

வாசிப்பு: உபாகமம் 32:4-7; நியாயாதிபதிகள் 8:22-23

# கர்த்தரே என் மேய்ப்பர்

'கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்.'
(சங்கீதம் 23:1)

நமது வாழ்வில், யார் யார் நமக்கு ஆசிரியர்களாக இருந்து நம்மை வழிநடத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்ப்பதுண்டா? ஆசிரியர்களுக்குப் பயந்து நடந்த காலத்தை மீண்டும் அசைபோட்டு பார்த்தாலே ஒரு சந்தோஷம்தான். ஆனால் இன்றோ, ஆசிரியர்களின் கண்டிப்பும் வழிநடத்துதலும் குறைந்துவிட்டது. இதனால் மனம்போன போக்கிலே போகிறவர்கள்தான் அதிகம். ஆவிக்குரிய வாழ்விலும் இதே காரியம்தான். இன்று எனது ஆசான் யார்?

ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் நல்வழியில் நடக்கும்படி அவர்களைப் போதித்து வழிநடத்தும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நல்ல தலைவர்கள் நமது சமுதாயத்திற்கு தேவைப்படுகிறார்கள். ஆனால் இன்று அப்படிப்பட்டவர்கள் மிக மிகக்குறைவு. தேவன் நம்மைப் போதித்து வழிநடத்துகிற நல்ல மேய்ப்பனாக இருக்கிறார். இதில் நமக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அவரே வாழ்விலும் தாழ்விலும் எம்முடன் இருக்கிறவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவரே நமக்கு எஜமானர், மேய்ப்பர் என்பதை உணர்ந்திருக்கிறோம். ஆனால், இன்று அநேக கிறிஸ்தவர்களின் வாழ்விலோ, 'கர்த்தர் மேய்ப்பராயிருக்கிறார்' என்பதை காணமுடியாமை பரிதாபத்திற்குரியது. அவர்களுக்கு தங்கள் கல்வியே மேய்ப்பனாக இருக்கிறது. அறிவும், பட்டமும், பதவியும் தான் அவர்களை மேய்க்கிறது. அவர்கள் இவ்வித மேய்ப்பனுக்கே முன்னுரிமை கொடுக்கிறார்கள். தங்களுக்கு எது வருமானமோ, அல்லது அவர்களுக்கு எது புகழோ, பெருமையோ அதையே தங்களை வழிநடத்தும் தெய்வமாக்கிவிட்டனர். கிறிஸ்துவைப் பற்றிய உபதேசம் வீணாகத் தென்படுகின்றது. அன்று, இஸ்ரவேலர் கிதியோனிடம் வந்து, "நீரும் உம்முடைய குமாரரும் எங்களை ஆளக்கடவீர்கள்" என்றபோது, கிதியோன் தைரியமாக, "நானோ, என் குமாரரோ உங்களை ஆளமாட்டோம். கர்த்தரே உங்களை ஆளுவாராக" என்று கூறினார்.

ஆம், நிஜத்தில், கிறிஸ்துவே மனுஷ வாழ்வின் உரிமையாளர். அவர் தம்மைக் கொடுத்து நம்மை மீட்டதால் அவரே நமக்கு எஜமானரானார். விவேகமில்லாத மதிகெட்ட ஜனங்கள் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டிய கனத்தைக் கொடுக்காமலிருப்பதைக் காண்கின்ற நாம், என்ன செய்கின்றோம்? நமது வசதிகளைத் தேடி அதையே நாடாமல், கர்த்தரை கர்த்தராகவே நாம் ஏற்றுக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிகிறோமா? அவருடைய வசனத்தின்படி நடக்கிற மந்தைகள் மீதே கர்த்தர் பிரியமாயிருக்கிறார். நமது மேய்ப்பனாகிய அவர் நீதியும் செம்மையுமானவர். அவருடைய கண்கள் அவர்களை நோக்கிப் பார்க்கிறது. அவரே நம்மை உருவாக்கி உண்டாக்கி நிலைப்படுத்துகின்றவர். அவரை மறந்து வாழ முற்படவேண்டாம். அவரே சதாகாலமும் நம்மை மேய்ப்பாராக.

"என்னுடைய மேய்ப்பரே, நீரே என் தேவன். நீர் எனக்கு வேண்டும். உமது மந்தையோடு என்னையும் மேய்த்து என்றென்றும் நடத்துவீராக. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: யோவான் 13:3-17;

ஜூலை
**8**
புதன்

# மேய்ப்பரின் மாதிரி

'நான் உங்களுக்குச் செய்ததுபோல, நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.' (யோவான் 13:15)

ஒவ்வொரு சிருஷ்டியையும் தேவன் கவனிக்கின்றார். அவற்றிற்கேற்ப காரியங்களை தேவன் அமைத்தும் கொடுக்கின்றார். அவற்றைப் பாதுகாக்கிறார்; போஷிக்கிறார். 'காக்கைக்குஞ்சுகள் தேவனை நோக்கிக் கூப்பிட்டு, ஆகாரமில்லாமல் பறந்து அலைகிறபோது, அவைகளுக்கு இரையைச் சவதரித்துக் கொடுக்கிறவர் யார்?' (யோபு 38:41) என்று கர்த்தர் யோபுவிடமும், "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள், அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப் பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள அல்லவா?" (மத்.6:26) என்று இயேசு சீஷர்களிடமும் கூறிய காரியங்கள் இந்த நாளிலே எமது சிந்தையிலிருந்தால், தேவன் நம்மைக் கவனிக்கிறார் என்ற உள்ளுணர்வுக்கு நம்மை அர்ப்பணித்தவர்களாக ஜீவிப்போம் அல்லவா!

ஆண்டவர், தமது சீஷர்களுக்குப் பல காரியங்களைக் கற்றுக்கொடுத்தார். சீஷர்களைவிட்டுப் பிரியும் நேரம் வந்தபோது ஒரு முன்மாதிரியான காரியத்தைச் செய்தும் காட்டினார். சீஷர்களின் கால்களை தாமே கழுவி, துடைத்து தாழ்மையைக் கற்றுக்கொடுத்தார். இதைச் செய்யும்போது அவர் கூறிய காரியம் தான் முக்கியமானது. "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவுங்கள்" என்பதே. ஆம், ஒரு நல்ல மேய்ப்பன், நாம் பின்பற்றுவதற்காக ஒரு தாழ்மையின் செயற்பாட்டைச் செய்தே காட்டுவாராயின், நாம் எவ்வளவாய், கீழ்ப்படிந்து எமது வாழ்வில் தாழ்மையை வெளிப்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதைச் சிந்தித்துப் பார்ப்போமா.

பிரியமானவர்களே, உண்மையில் தேவன் எமது மேய்ப்பனாக இருந்து எமது சகல தேவைகளையும் சந்திப்பாரானால், நாம் ஏன் அவருக்கு முழுமையாக கீழ்ப்படிய முடியாது? தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய தேவை என்ன என்பதை நம்மிலும் பார்க்க, அவர் அதிகமாக அறிந்திருக்கிறார். அப்படிப்பட்ட அன்பான தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், அவரைப்போல நடந்து கொள்ளவேண்டியது இன்றியமையாதது. ஆம், நம் வாழ்வில் தாழ்மையோடும் கீழ்ப்படிவோடும் இருப்பது அவசியம். நாமும் தாழ்மையுடன் கீழ்ப்படிந்திருப்போமானால், எம்மைப் பராமரிக்கும் தேவனுக்கு முன்பாக நமது உத்தமத்தைக் காத்துக்கொள்ளலாம். மாத்திரமல்ல, நமது மேய்ப்பரை வெளிப்படுத்தும் நற்பாத்திரங்களாகவும் நாமிருப்போம்! இதையே ஆண்டவர் அன்று சீஷர்களிடமும், இன்று நம்மிடமும் எதிர்பார்க்கிறார். நாம் அதை உணர்ந்து ஜீவிக்கிறோமா?

"என் மேய்ப்பனாக இருந்து, என் தேவைகள் யாவையும் சந்தித்து, எனக்குத் தாழ்மையையும் கீழ்ப்படிவையும் கற்றுத்தந்த ஆண்டவரே, உம்மைப்போன்ற நல்ல மேய்ப்பனுக்கு நானும் கட்டுப்பட்டு வாழ உதவிசெய்யும், ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
9
வியாழன்

வாசிப்பு: மத்தேயு 6:25-31

# என்னை மேய்த்து...

"அவர் என்னை... மேய்த்து. அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்." (சங்கீதம் 23:2)

அன்றாடம் தன் மந்தைக்குத் தேவையான உணவை பெற்றுக்கொடுப்பது மேய்ப்பனுடைய பணிகளில் ஒன்றாகும். தனது மந்தை இளைப்பாறச் செல்வதற்கு முன் மேய்ப்பனானவன் அவைகளுக்கு உரிய உணவையும் தண்ணீரையும் போதுமான அளவு கொடுப்பதற்காக அவைகளை தகுந்த இடத்திற்கு அழைத்துச் செல்வான். அவ்வாறே தேவனும் நமக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றை தருபவராக இருக்கிறார். ஆக இத்தகைய அடிப்படைத் தேவைகளுக்காக நாம் கவலைப்படத் தேவையில்லை. மேலும் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே நெருப்புக்குள் போடப்படும் காட்டுப் புல்லுக்குக்கூட தேவன் அதற்கேற்ற உடையினால் உடுத்துவிக்கின்றார் என்றால், தமது சாயலாகப் படைத்துள்ள நம்மை உடுத்துவிப்பது அதிக நிச்சயமென இயேசுவானவர் கூறுவதை இன்று வாசிப்புப் பகுதியிலே வாசிக்கிறோம்.

தேவன் தமது சிருஷ்டிகளுக்கெல்லாம் நன்மை செய்யும்போது, நமக்கு இன்னும் அதிகமாகச் செய்வாரல்லவா. உலகில் மனிதரை உருவாக்குவதற்கு முன்னரே அவனுக்கு வேண்டியதான காற்று, ஒளி, வெப்பம், உணவு போன்ற அனைத்தையும் உண்டாக்கிக்கொடுத்த அவர், இன்றும் நம் தேவைகளைச் சந்திக்க வல்லவர். நிச்சயமாக நமது வாழ்வில் ஏற்படும் குறைவுக்குள்ளும் நிறைவாயிருந்து தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். கானாவூர் திருமணத்தில், ஏற்பட்ட குறைவை பூர்த்திசெய்த ஆண்டவரே நமது மேய்ப்பன். ஆகவே, குறைவைப் போக்கும் ஆண்டவரின் பிரசன்னத்தை உணர்ந்துகொண்டு சங்கீதம் பாடிய தாவீதுபோல, தேவனை எம் மேய்ப்பனாக ஏற்றுக்கொண்டிருந்தால் மாத்திரமே, எனக்கும் ஒரு குறைவும் இல்லை என்று நம்மாலும் உறுதியாக பாடித் துதிக்கமுடியும்.

இஸ்ரவேல் மக்களுக்கு கசப்பான தண்ணீருக்குப் பதிலாக மதுரமான தண்ணீரையும், உணவுக்காக கஷ்டப்பட்டபோது மன்னாவையும் கொடுத்து வனாந்தரத்திலே போஷித்த தேவன் இன்றும் நம்மையும் போஷிக்கிறார். "உன் தேவனாகிய கர்த்தர் ...வனாந்தர வழியாய் நீ நடந்துவருகிறதை அறிவார்; இந்த நாற்பது வருஷமும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருந்தார்; உனக்கு ஒன்றும் குறைவுபடவில்லை என்று இஸ்ரவேலுக்குச் சொல்" (உபா.2:7) இன்றும் அவரே தமது அளவற்ற இரக்கத்துடன் நம் தேவைகளைச் சந்திக்க வல்லவர். நாம் கடந்துசெல்லுகிற பாதை எவ்வாறாக இருந்தாலும் அவரில் நாம் தங்கியிருந்து அவருடைய அன்பினை ருசித்துப் பார்ப்போமானால், அதன்பின் துன்பமாகத் தெரியும் வழிகளும் தேவனருளிய நன்மையான ஈவுகளின் வழியாகவே தெரியும். ஆம், கர்த்தர் யாவற்றையும் நன்மைக்கு ஏதுவாக மாற்றுவார்.

"இயேசுவே, எனது தனிப்பட்ட, குடும்ப, அவசியத் தேவைகளை நீரே பூர்த்தியாக்குகிறீர், உமக்கே துதி செலுத்துகின்றேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: மத்தேயு 11:27-30

ஜூலை
10
வெள்ளி

# இளைப்பாறுதல்

'நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.'
(மத்தேயு 11:28)

இது, இயேசு கிறிஸ்து தமது சீஷர்களைப் பார்த்து உறுதியான தொனியில் கூறிய ஒரு சத்திய அறிக்கையாகும். "என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்று கூறிய இயேசு, "என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்றார். ஆம், நம் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் சோதனைகள் மத்தியிலும் அவர் எமக்கு இளைப்பாறுதல் தந்து எம்மை ஆறுதல்படுத்துகிறார். அன்று "கர்த்தர் எனக்காக யாவையும் செய்துமுடிப்பார்" என்ற நம்பிக்கையுடன் திடமாகக் கூறி, முற்றிலும் கர்த்தரைச் சார்ந்திருந்தார் தாவீது. இதனாலேயே அவர், "கர்த்தர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு போய் விடுகிறார்" என்று அவரால் பாடமுடிந்தது.

மந்தைகள் இளைப்பாறுவதற்கு ஏற்ற பயமற்ற பாதுகாப்பான சூழலை மேய்ப்பன் ஏற்படுத்திக் கொடுப்பதுபோலவே, இயேசு கிறிஸ்துவும் தம்முடைய மக்களின் பயத்தை அகற்றி மன அமைதியையும் நிம்மதியையும் தருகின்றவராக இருக்கின்றார். எல்லா சமயங்களிலும் அவர் தமது சீஷர்கள் மீது அக்கறையுள்ளவராக இருந்ததையே நாம் காண்கிறோம். இவ்வுலக வாழ்வில் நாம் காண்கிறவைகளும், சந்திக்கும் சூழ்நிலைகளும், பலவிதமான பயங்களை ஏற்படுத்தி அன்றாடம் நமது நிம்மதியைக் குலைத்துப்போடுகின்றன. எனினும், எமது இளைப்பாறுதல் தேவனிடத்திலேயே உள்ளது. தேவபிள்ளையே, எதிர்காலம் இருளடைந்தது போன்றதான சூழ்நிலையில் நீ இன்று இருக்கிறாயா? தேவன் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2தீமோ.1:7) ஆகவே தைரியமாயிரு.

உன்னைப் பயமுறுத்தும் இருளைப் பார்த்து பயந்து தயங்கி நிற்காதே. உன் விசுவாசத்தைப் பயிற்றுவிக்கும் நல்மேய்ப்பன், உன் அருகில் இருக்கிறார் என்ற உணர்வு உனக்குள்ளிருக்க வேண்டும். அப்போது நீ பயமின்றி இளைப்பாறுவாய். தேவன் சில சூழ்நிலைகளை அனுமதிக்கக்கூடும். எனினும் இவை உனக்கொரு பயிற்சியாகவே நேரிடப்பண்ணுகிறார் என்று எண்ணி முன்னேறிச் செல். கோணலான வழிகளை செம்மையாக்கும் அவரிடம் உன் பெலவீனங்களைக் கூறு. நீ தனித்திருந்து வருத்தப்படாதே; உன் பாரத்தை அவரிடம் கொடுத்து விடு. ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்வார் (யோபு 9:10). ஆம், தேவபிள்ளையே, இன்றாகிலும் தேவன் தரும் இளைப்பாறுதலை நீ ஏற்று அனுபவிக்க ஆயத்தமா?

"உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் எங்களோடு இருப்பதாக வாக்கு அளித்தவரே, நீர் எனக்கு இருக்கும்போது எனக்கென்ன குறை ஐயா. நீர் தரும் இளைப்பாறுதலுக்காக நன்றி. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
11
சனி

வாசிப்பு: சங்கீதம் 91:3-16

# ஆவிக்குரிய உணவு

'நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.' (1பேதுரு 2:3)

சரீரப்பிரகாரமான நல்லதொரு இளைப்பாறுதலைத் தருகின்றவரான நமது மேய்ப்பன், ஆவிக்குரிய பிரகாரமாகவும் இளைப்பாறுதலைத் தர ஆவலுடனே இருக்கின்றார். அவர் நமக்குத் தந்துள்ள சரீரப்பிரகாரமான உணவைக் காட்டிலும், அவர் எமக்காகத் தந்துள்ள தேவவசனம் தரும் ஆவிக்குரிய உணவு அதிக பெலனுள்ளதாக இருக்கிறது. அது நம்மை ஆவிக்குரியபடி பெலப்படுத்தும் ஆகாரமாகவும், தேவனைக் கிட்டிச்சேரப்பண்ணும் ஈவாகவும் இருக்கிறது. இதனால்தான், பேதுரு "நீங்கள் வளரும்படி, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" என எழுதுகிறார்.

மேலும், தெசலோனிக்கேயருக்கு பவுலடியார் எழுதும்போது, "நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை ..தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது" என்று (1தெச.2:13) கூறி மகிழ்ந்தார். ஆம், தினமும் எமது உலக வாழ்வின் கடமைகளில் மூழ்கி, சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் களைத்துப்போகும் நமக்கு, தேவன் அருளிய நல் வார்த்தைகளே புத்துணர்வைத் தருகின்றதாக இருக்கின்றது. நாம் அதனைப் பெற்றுக்கொள்ள செய்யவேண்டியது என்ன தெரியுமா? தேவன் தமது வார்த்தைகளினூடாக நம்மோடு பேசும்படியாகவும், ஆவிக்குரிய பிரகாரமாக பெலப்படுத்தும்படியாகவும், தேவவசனத்தை வாசிக்கவும் தியானிக்கவும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை நாமேதான் கொடுக்கவேண்டும். இவ்வுலக பிரச்சனைகள், சவால்கள், நெருக்கடிகள் போன்றவற்றால் சோர்ந்துபோனாலும், நமது மேய்ப்பனிடம் செல்லுவோமானால், அவர், "நீடித்த நாட்களால் உன்னைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை உனக்குக் காண்பிப்பேன்." என்று கூறுவார்.

ஆம், அருமையான தேவபிள்ளையே, தேவன் எம்மை தமது வசனத்தினாலேயே புதுப்பிக்கின்றார். எல்லா சமயத்திலும், தேவனையே முற்றிலுமாக நம்பியிருந்தால், நாம் அதனை அவராலேயே பெற்றுக்கொள்ளமுடியும். இத்தகைய தேவவசனத்தில் பிரியமாயிருந்து எம்மைப் புத்துணர்வுக்குள்ளாக்கிக் கொள்ளும் அனுபவம் தேவனுடைய ஆடுகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் அவசியம். ஆகவே நமக்குக் கிடைத்திருக்கின்ற இந்த நாளிலாகிலும் ஸ்தோத்திரத்துடனே நமக்கு முன்னால் இருக்கும் வேதத்தை திறந்து ஆண்டவர் தரும் கிருபையைப் பெற்றுக்கொள்வோமாக. அவை காலைதோறும் புதியவையாக இருப்பதால் காலைதோறும் அவர் பாதம் அமருவோமாக.

"ஆராய்ந்துமுடியாத பெரிய காரியங்களை எனக்காகச் செய்யும் ஆண்டவரே, இந்நாளிலே நீர் தரும் கிருபையால் உமக்காக வாழ உதவிசெய்யும். ஆமென்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: சங்கீதம் 25:4-12

ஜூலை
12
ஞாயிறு

# தம்முடைய நாமத்தினிமித்தம்...

'கர்த்தர், தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.' (சங்கீதம் 23:3)

நமது வாழ்க்கைப் பாதையானது எப்போதும் நமக்கு நியாயமான தாகவே தெரிகிறது. ஆனால்; நினையாத நேரத்தில் கால் தடுமாறி விழுந்துவிட நேரிடும்போதுதான் எமது பாதை தவறானதோ என எண்ணத்தொடங்குகிறோம். சரியான பாதையிலும் இடர்கள் வரத்தான் செய்யும். எனினும் அங்கேயும் ஒரு நம்பிக்கை நம்மை தைரியப்படுத்தும். அந்த நம்பிக்கைதான் என்ன? நாம் தேவனி டத்தில் வைக்கும் நம்பிக்கையே அந்த நம்பிக்கை. நாம் தேவனை நோக்கிப் பார்த்தோமானால் சறுக்கி விழுந்தாலும் நிச்சயம் எழுந்து நிற்போம்.

முதலாவதாக, "கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்" என்று ஜெபித்த தாவீது, "கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார்; ஆகையால் பாவிகளுக்கு வழியைத் தெரிவிக்கிறார்" என இரண்டாவதாகவும், "கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்" என மூன்றாவதாகவும் கூறுவதை இன்றைய வாசிப்புப் பகுதியிலே வாசிக்கிறோம். ஆம், தேவன் தாமே தம்முடைய வழிகளை பாவிகளாகிய நமக்குத் தெரிவிக்கின்றார். கர்த்தருக்குப் பயந்து அவருடைய வழிகளை தெரிந்துகொண்டு அதிலே நடக்கும்போது, தாம் தெரிந்துகொள்ளும் வழிகளை நமக்குக் காட்டுவார். ஆகவே, தேவனுடைய வழிகளில் நடக்க, எம்முடைய சுயபெலத்தினால் மாத்திரம் முடியாது. அதற்கு தேவபெலம் அவசியம். அந்த தேவபெலன் நம்மை தாங்குமானால் நம்மை நாமே மகிமைப்படுத்த மாட்டோம். மாறாக, முற்றுமுடிய தேவனுடைய நாமம் மாத்திரமே நமது வாழ்வில் மகிமைப்படுவதாய் இருக்கும். தேவநாமம் மகிமைப்படுமானால் அது நமக்கும் ஆசீர்வாதம் அல்லவா!

ஆம், தேவன் "தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்" என்று தாவீது உறுதியாக கூறியதற்காக அந்தப் பாதையில் கஷ்ட துன்பம் வரவில்லையா? மரண ஆபத்துக்கள் வரவில்லையா? எல்லாமே வந்தது. ஆனால் கர்த்தருடைய வழியில் நாம் நடக்கும்போது, அவர் தம்முடைய நாமத்தினிமித்தம் நம்மைக் காத்துக்கொள்வார்; தலைநிமிர்ந்து நடக்கவைப்பார். ஏனெனில் அந்தப் பாதையில் அவர் நாமமே மகிமைப்படுகிறதல்லவா! இது நமக்கும் அற்புத அனுபவமாக இருக்கும். ஆகவே, தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை நடத்துகிறார், நீயும் அவர் பாதையில் நடக்கிறாய் என்றால் உறுதியோடும் நிதானத்துடனும் ஓடிக்கொண்டிரு. பாதையிலே சறுக்கல்கள் வந்தாலும் விழுந்து விடாதபடி தேவனின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு அவருடைய நீதியின் நிமித்தம் நடந்துகொள். அப்போது அவர் தம்முடைய நாமத்தின் நிமித்தம் உன்னை வழிநடத்துவார்.

"பிதாவே, நீர் தெரிந்துகொள்ளும் வழியை எனக்குக் காண்பித்து அதன்வழியே வழிநடத்துவதற்காக உமக்கு நன்றியைச் செலுத்துகின்றேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
13
திங்கள்

வாசிப்பு: சங்கீதம் 73:1-28

# நீதியின் பாதையில்...

"என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே, உமது கிருபை என்னைத் தாங்குகிறது." (சங்கீதம் 94:18)

தேவன் தம்முடைய நாமத்தின் நிமித்தம் எமக்கு தமது வழியைப் போதித்து நடத்துகின்றார் என்பதை நேற்றைய தினத்திலே சிந்தித்தோம். இன்று, தேவன் தமது நீதியின் கரத்தினால் எம்மைத் தாங்கி வருவதைக்குறித்து சிந்திப்போமா. குறுக்கு வழிப்பாதையில் நடக்கிறவர்களுக்கு மாத்திரமல்ல, சரியான பாதையில் நடக்கிறவர்களுக்கும் வாழ்வில் இடர்கள் வரத்தான் செய்கின்றன. ஆனால், நீதியின் பாதையில் நடக்கின்ற நீதிமான்கள் தடுமாறும்போது ஒரு வித்தியாசம். அவர்கள் தடுமாறினாலும் மீண்டும் உறுதிப்பட அவர்களுக்குத் துணையாக தேவன் இருப்பார். அப்படியிருக்க தேவபிள்ளையே, வாழ்விலே சறுக்கல்கள் ஏற்படும்போது நாம் சோர்வடைவது ஏன்? சறுக்குகின்ற உன் கால்களைத் தாங்க ஒருவர் உண்டு என்பதை நீ உணர்ந்தால் போதும்; மேய்ப்பனைக் கண்ட ஆட்டைப்போல குதித்து எழும்ப உன்னால் முடியும்.

தேவாலய பாடக குழுவின் தலைவனாக இருந்த ஆசாப் கூட தனது கால்கள் சறுக்குகிறதாகக் கூறுகிறார், "துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், அவர்கள்மேல் பொறாமைகொண்டேன். என் மனம் கசந்தது, என் உள்ளிந்திரியங்களிலே குத்துண்டேன். நான் காரியம் அறியாத மூடனானேன்; உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன். அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது" (சங். 73:13) என்று அலுத்துக்கொண்ட ஆசாப், தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்தபோதுதான் துன்மார்க்கரின் முடிவை உணர்ந்தார். அப்போது, தன் பிழையைத் திருத்திக்கொண்டவராக, "கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன். இதோ, நீர் என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர். எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம்" என்று பாடுகிறார். தேவசமுகத்திலே எத்தனையோ அனுபவங்களைப் பெற்றுவிட்ட நம்மாலும் இன்று இப்படியே பாட முடியுமா?

ஆம், தேவபிள்ளையே, மனக்குழப்பங்கள் மத்தியில் நாம் விழுந்துவிடாமல் தாங்கிக்கொள்ளும் நீதியின் தேவன், நமக்கு அருகில் இருக்கிறார். நாம் மீண்டும் எழுந்து நிற்கப் பெலன் தருவது அவர்து "கிருபை". ஆகவே அவரை நோக்கிக் கூப்பிடுவோம். மீட்பரை நோக்கிப் பார்ப்போம். அப்போது நம் சூழ்நிலைகள் எவ்வாறாக இருந்தாலும், தேவன் நிச்சயம் நம்மைத் தாங்குவார். நமது பாதம் கல்லில் இடறாதபடி அவர் நம்மை ஏந்திக்கொள்வார்.

"தேவனே, என் பாதங்கள் எவ்விதத்திலும் தடுக்கிவிடாதபடி நீதியின் பாதைகளில் என்னை வழிநடத்தும். நல்ல மேய்ப்பனாக இருந்து என்னைக் கவனித்துக் கொள்வதினால் உமக்கே நன்றி செலுத்துவேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: உபாகமம் 30:1-10

ஜூலை
14
செவ்வாய்

# ஆத்துமாவைத் தேற்றி...

'உங்கள் முழு ஆத்துமாவோடும் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தால்,...' (உபாகமம் 30:2)

சரீரத்திற்கு வரும் சோர்வு, பலவேளையிலும் நமது ஆத்துமாவையும் பாதிக்கும். "நான் அடக்கிவைத்த மட்டும் நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று" (சங்.32:3) என்று கூறுமளவிற்கு தாவீது சோர்வுற்றுப்போயிருந்தார். இன்று எமது ஆத்துமாவின் சோர்வுக்குக் காரணம் என்ன? ஒருவேளை கசப்பு, கோபம், வன்மம் போன்றவற்றினால் ஏற்பட்டதா? அல்லது மனசாட்சி உறுத்துவதினால் ஏற்பட்ட வடுவாக இருக்கின்றதா? "நித்தம் என் கதறுதலினாலே" "என் எலும்புகள் உலர்ந்து" "நான் அடக்கி வைத்த மட்டும்" போன்ற வார்த்தைகளினால், தன்னுடைய மனதின் குழப்பத்தினை வெளிக்காட்டுகிறார் தாவீது. ஆனால் இதற்கான விடையையும் அவர் கண்டுகொண்டார். ஆகையால்தான், "கர்த்தர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்" என்றும், சத்துருக்களின் பயமுறுத்தல்கள், யுத்தசூழ்நிலைகள் அதிகமாய் இருந்தவேளையிலும், "எனக்கு விரோதமாய்ச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம் பேருக்கும் நான் பயப்படேன்" (சங்.3:6) என்றும் அவரால் தைரியமாகக் கூறமுடிந்தது.

எந்தச் சூழ்நிலையிலும் "தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து, ...அவருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்போதும், உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் திரும்பும்போதும், கர்த்தர் உன் பிதாக்கள்மேல் சந்தோஷமாயிருந்ததுபோல, உன்மேலும் உனக்கு நன்மை உண்டாகத் திரும்பவும் சந்தோஷமாயிருப்பார்" (உபா. 30:10) என்ற சத்திய வார்த்தைகளை விசுவாசித்து நடந்ததாலேயே மோசேயாலும், எல்லா சூழ்நிலையிலும் தைரியத்தோடு தேவனைப் பாடித் துதிக்கமுடிந்தது. தேவனை தங்கள் வாழ்க்கையிலே ருசித்துப் பார்த்த இவர்களின் அனுபவம் நமக்கு வேண்டாமா?

ஆம்! எம்முடைய ஆத்துமாவிலுள்ள சோர்வையும் நீக்கிவிட கர்த்தர் வல்லவராக இருக்கிறார். அவரை ருசிபார்க்க முழு இருதயத்தோடு அவருக்குச் செவிகொடுக்கும்போது, நாம் சுமக்க முடியாத எம்முடைய பாரத்தை, வேதனைகளை அவர் தாங்குவார். தடைகள் யாவையும் நீக்கி, கோணலான வழிகளைச் செவ்வையாக்க அவர் ஆயத்தமாக இருக்கையில் நமக்கு ஏன் தயக்கம்? முழு உள்ளத்தோடு அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்க ஆயத்தமாக இருக்கிறோமா? தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்காத எமது சுயநலத்தை உடைத்து, தேவனுக்குப் பிரியமான காரியங்களைச் செய்ய இன்றாவது முற்படுவோமா!

"அன்பின் ஆண்டவரே, பாரங்களும் வேதனையும் நிறைந்த உலகத்திலே நீர் எனக்காக யாவையும் செய்துமுடித்தபடியினால் நன்றிசெலுத்துகிறேன். இப்போது உம்மை முழுமனதோடு தேடி உம் சித்தம்செய்ய உதவிசெய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
**15**
*புதன்*

வாசிப்பு: மல்கியா 3:16-18

# ஆத்துமாவின் பெறுமதி

'என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.' (மல்கியா 3:17)

ஒவ்வொரு மனித ஆத்துமாவும் விலைமதிக்க முடியாதவை, நித்தியமானவை, முடிவில்லாத, அழிவில்லாத தன்மையுடையவை. ஒரு மனிதன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவன் அவனைப் படைத்த தேவனுக்கு முன்பாக பெறுமதிமிக்கவனே. அதன் பெறுமதியை ஒரு பொருளினாலோ பணத்தினாலோ தீர்மானிக்கமுடியாது. ஆதலால்தான், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் என்ன பயன் (மத்.16:26) என்று இயேசு கேட்டார். ஆம், முழு உலகத்தையும் விட நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு முன்பாக விலைமதிக்க முடியாதவர்கள்.

இன்று உங்களுடன் இருக்கும் ஒவ்வொரு சக மனிதரையும் நீங்கள் பார்க்கும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய நித்தியத்தை எங்கே கழிக்கப்போகிறார்கள் என்பதைச் சிந்தியுங்கள். ஒன்று அவர்கள் தமது நித்தியத்தை தேவ பிரசன்னத்தில் கழிக்கலாம். அல்லது என்றென்றும் தண்டனை அனுபவிக்கும் அழிவிற்குள்ளாகவும் கடந்துசெல்லலாம். அவர்களுடைய ஆத்துமாவைக் குறித்து நாம் பாரப்படவேண்டாமா?

இந்த உலகத்திற்கு கிறிஸ்து வந்ததன் உண்மையான நோக்கமானது, அவர் ஒரு ஆசிரியராக இருப்பதற்கோ, ஒரு நல்ல மாதிரியை காண்பிப்பதற்கோ மட்டுமல்ல. ஒவ்வொரு ஆடுகளையும் மீட்பதற்காகவே வந்தார். நாம் மரிக்க வேண்டிய இடத்தில் தாம் நின்று, அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக மரணத்தை ஏற்று எம்மை விடுவிக்கவே வந்தார். அவர் சிலுவையில் கொடுத்த விலைக்கிரயமானது அளவிடமுடியாதது. பிதாவானவர் தமது ஒரேபேறான குமாரனின் மரணத்தினால் நம்மை மீட்டதினால், அவருடைய அன்பினை, உயரம், நீளம், அகலம் என்று யாராலும் அளவிடமுடியுமோ? அது எல்லையற்றதொன்று.

தேவன் நம் அனைவருக்காகவும் மிகப்பெரிய விலைக்கிரயத்தைச் செலுத்துவாராயின், அந்த அளவற்ற அன்பினை மற்றவர்களுக்கு நாம் அறிவிக்காமல், எப்படி அந்த தியாகத்தை புறக்கணிக்கமுடியும்? அந்தகார இருளின் பிடியிலுள்ள மக்களுக்கு மகிமையுள்ள தேவனை பிரதிபலிக்கும் ஒளியின் மக்களாக நற்செய்தியை அறிவிக்கவேண்டிய நாம், பெறுமதிமிக்கவர்களாகவே இருக்கிறோம். இயேசு தமது நீதியையும் இரக்கத்தையும் சத்தியத்தையும் எமக்குத் தந்திருக்க நித்திய நித்தியமாக தாம் வாழப்போவதை அறியாத ஆத்துமாக்களுக்கு, அவர்கள் 'தேவனுடைய சம்பத்து' என்பதை வெளிப்படுத்துவது பாக்கியமான ஒன்றல்லவா. நாம் அதனை செய்கிறோமா?

"ஆண்டவரே, எனது பெறுமதியை எனக்கு உணர்த்தினீர் நன்றி. அதை நான் பிறருக்கும் அறிவித்து, அவர்களையும் உமது அன்புக்குள் இழுத்துக்கொள்ள நீரே என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
16
வியாழன்

# கிறிஸ்துவின் அன்பு

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்தஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (1கொரி.6:19)

தேவனுடைய சித்தத்தைச் செய்வது என்பது இலகுவான ஒன்றல்ல. உலகத்தின் தடைக்கற்களைத் தாண்டியவாறே அவர் சித்தத்தை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். முயற்சியும் தியாகமும் இல்லாமல் நாம் எக்காரியத்தையும் நிறைவேற்றிவிடமுடியாது. தேவனுடைய பணியை நிறை வேற்றுவதற்கு, எமக்கு ஏற்படும் தற்கால தடைகற்கள் யாவற்றையும் வெல்லக் கூடிய ஆயத்தமும் அர்ப்பணிப்பும் நமக்கு மிக அவசியம். அதற்கு எமது சரீரத்தை பரிசுத்த தேவ ஆலயமாக பேணவேண்டியது கட்டாயம். உண்மையி லேயே, நாம் ஒரு பெரிய விலைக்குக்கொள்ளப்பட்டவர்கள். ஆகவே, எமது வாழ்க்கையில் தொடர்ந்தும் எமது இஷ்டப்படி செய்வதற்கு இடமில்லை. தேவன் எம்மை விடுவித்துள்ளார். நாம் இப்பொழுது அவருடையவர்கள். ஆகவே நாம், அவருடைய சித்தத்தையும் அவருடைய மேலான விருப்பங்களையும் நிறைவேற்றவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தேவன் அனைத்து மனிதர்களையும் நேசிக்கிறார். அவர் தம்முடைய அன்பை தம்முடைய ஆடுகளுக்கு வெளிப்படுத்தவே விரும்புகின்றார். நாம் சந்திக்கும் ஒவ்வொரு நபர்களையும் அவர் நேசிக்கின்றார். நாம் அவர்களிடம் அந்த அன்பை பகிர்ந்துகொள்ளவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். நல்ல மேய்ப்பன் தம்முடைய அன்பை எம்மோடு பகிர்ந்துகொண்டதுபோலவே, நாமும் அவருடைய அன்பினை பிறருக்கு வெளிக்காட்டும் ஒரு கருவிகளாக செயற்பட வேண்டுமென விரும்புகிறார். நாம் தேவனுடன் நேரத்தை செலவிடவும், அவரு டைய அன்பினை பிரதிபலிக்கவும் வேண்டியவர்கள். ஆகவே நாம் அழிந்து போகும் ஆத்துமாக்களைக்குறித்து அக்கறையுள்ளவர்களாக இருந்து வழிதெரி யாத ஆடுகளுக்கு தேவ அன்பைக் காட்டி வழிநடத்தவேண்டியவர்கள். "தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்" (ரோமர் 5:5) என வாசிக்கிறோமே. நாம் அந்த அன்பிற்கு பாத்திரவான்கள் மாத்திரமல்ல, அந்த அன்பினை வெளிப்படுத்தும் கருவிகளாகவும் இருக்கவே தேவன் எம்மை தெரிந்தெடுத்துள்ளார். அந்த அன்பு நம்மிலிருந்து மற்றவர்களுக்குக் கடந்து செல்லவேண்டும். ஆகவே நாம்தான் கவனமாயிருக்கவேண்டும்.

கிறிஸ்துவிடமிருந்து இலவசமாய் அன்பைப் பெற்ற நாம், பிற மனிதருக் குக் கடனாளிகளாக இருப்பது ஏன்? தேவனுடைய கிருபையினால் அவருடைய நற்செய்தியை பெற்ற ஒவ்வொருவரும் அந்த கல்வாரி அன்பின் நற்செய்தியினை அறியாதவர்களுக்கும், நாம் சந்திக்கிற ஒவ்வொருவருக்கும் பகிர்ந்துகொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதுவே எமக்களிக்கப்பட்டிருக்கின்ற பொறுப்பாக இருக்கிறது.

"அன்பின் தந்தையே உம்முடைய அன்பினை பிரதிபலிக்கவும் உமது ஆலய மாக திகழவும் என்னைப் பரிசுத்தப்படுத்தியருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
17
வெள்ளி

வாசிப்பு: எபிரெயர் 12:11-13

# சிட்சிக்கும் மேய்ப்பன்

'எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில்... அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்' (எபிரெயர் 12:11)

சீரியா நாட்டிற்கு சுற்றுலா சென்ற ஒரு அமெரிக்க பயணி ஒரு மேய்ப்ப னுடைய வீட்டில் தங்கியிருந்தபோது, அங்கே கவனித்தவற்றை றொபட்முரே என்பவர் இவ்வாறு எழுதுகிறார். அந்த மேய்ப்பனிடம் அநேக ஆடுகள் இருந்தன. எனினும் ஒவ்வொருநாள் காலையிலும் அவர் ஒரு குறிப்பிட்ட காலுடைந்த ஆட்டிற்காக கஷ்டப்பட்டாவது உணவை சேகரித்துக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்ததை பயணி கவனித்தார். அந்த காலுடைந்த ஒரு ஆட்டின்மீது இவ்வளவு பாசத்தை ஏன் வெளிப்படுத்துகிறார் என்பதை அறிய விரும்பிய சுற்றுலாப் பயணி, "ஏன் இந்த ஆட்டின் கால் இவ்வாறு கோரமாக உடைந்திருக் கின்றது? அது எதேச்சையான ஒரு விபத்தின் விளைவா? அல்லது அந்த ஆடு ஏதேனும் ஒரு குழியினுள் விழுந்ததா? அல்லது வேறு ஏதேனும் ஒரு மிருகம் இந்த ஆட்டின் காலைக் கடித்ததா?" என்று மேய்ப்பனிடம் ஆவலுடன் கேட்டார். அதற்கு அந்த மேய்ப்பன், "இல்லை, நான்தான் இந்த ஆட்டின் காலை உடைத்தேன்" எனப் பதிலளித்தான். "நீர் இந்த ஆட்டின் காலை உடைத்தீரா?" ஆச்சரியத்துடன் அந்தப் பயணி கேள்விமேல் கேள்விகேட்டார். அதை அவரால் சற்றும் நம்பமுடியவில்லை. "ஆம், உங்களுக்குத் தெரியாது. இந்த ஆடு எப்போ துமே வழி விலகிப்போகின்ற ஆடு. அது எப்பொழுதும் மற்ற ஆடுகளோடு ஒன்று சேருவதில்லை. அதுமாத்திரமா! இந்த ஆடு ஏனைய ஆடுகளையும் குழப்புகின் றது, தவறாக வழிநடத்துகின்றது. துள்ளிக்குதித்து ஓடுகின்றது. மற்ற ஆடுகளும் இதன் பின்னே ஓடுகின்றன. இந்த ஆட்டைக் கட்டுப்படுத்த எனக்கு வேறு வழி தெரியவில்லை. ஆகவே நான் இந்த ஆட்டின் காலை உடைக்கவேண்டியதா யிற்று. அதனால் நாள்தோறும் நானே இதற்கு உணவு கொடுக்கிறேன். நான் இதனைச் செய்வதினால், இந்த ஆடு இப்போது என்னை தனது மேய்ப்பனாக ஏற்றுக்கொண்டு விட்டது. என் குரலைக் கேட்கின்றது. என்னை நம்புகின்றது. இப்பொழுது அதுவாகவே என்னைப் பின்தொடருகின்றது. மற்ற மந்தைகளும் எவ்விதத்திலும் பிரச்சினையின்றி ஒழுங்காக இருக்கின்றன" என்று ஒரே மூச்சில் கூறிமுடித்தார் அந்த மேய்ப்பன்.

சிலவேளைகளில், எமது விருப்பத்தின்படியாக நாம் நடக்கும்போது மற்றவர்களையும் தவறாக வழிநடத்திவிடுகின்றோம். அந்த மேய்ப்பனைப்போல தேவனும், எமது தனிப்பட்ட நலனுக்காகவும் மற்றவர்களின் நலனுக்காகவும் ஒரு காலை முறிக்கவேண்டியதாக இருக்கின்றது. அதற்காக அவர் நம்மைத் தள்ளி விடுவதில்லை. விசேஷ கவனம் எடுக்கிறார். அன்போடு பராமரித்து தமது தோளிலே வைத்து நம்மை நடத்துவார். ஆகவே அவருடைய சிட்சையை நாம் அற்பமாக எண்ணக்கூடாது. அது நமது நன்மைக்காவே இருக்கிறது.

"நல்ல மேய்ப்பரே, நீர் சிட்சிக்கும்போது என் தவறை உணர்ந்து திருந்த எனக்கு உமது ஆவியின் பெலனைத் தந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: எபிரெயர் 12:5-11

ஜூலை
18
சனி

# கோலும் தடியும்

"உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்."
(சங்கீதம் 23:4)

ஒரு மேய்ப்பன் தன் மந்தையின் கால்களை உடைத்ததன் காரணத்தை நேற்றைய தினத்திலே கண்டோம்; உலகப்பிரகாரமான ஒருமேய்ப்பன் அவ்வாறு செய்வதால் எமது பரம பிதாவும் அவ்வாறே செய்கின்றார் என நாம் எண்ணி சோர்ந்து போகலாகாது. உண்மையில் அவர் எம்மீது இரக்கமுள்ளவராகவே எம்மைக் கவனிக்கின்றார். அவர் எம்மைச் சிட்சித்தாலும் அவருடைய கோலும் தடியும் எம்மைத் தேற்றுகின்றது என்கிறதான உண்மையான அனுபவத்தை தாவீது பெற்றிருந்தபடியினால் அதனை அவர் தெளிவாகப் பாடுகிறார்.

மேய்ப்பன் தன்னுடைய கோலைக்கொண்டு எட்டாத உயரத்தில் இருக்கும் உணவைப் பறித்துத் தன் ஆடுகளுக்குக் கொடுப்பான்; அதே கோலினால் வழி விலகிச்செல்லாதபடி ஆடுகளை மந்தையோடு மந்தையாகச் சேர்த்து வழி நடத்துவான்; ஆடு குழிக்குள் விழுந்தால் கோலைக்கொண்டு தூக்கி எடுப்பான். தாக்கவரும் துஷ்ட மிருகங்களிடமிருந்து ஆடுகளைப் பாதுகாக்க தடியைப் பயன்படுத்துவான். சிலசமயங்களில் ஆடுகளைத் தண்டிக்கவும் மேய்ப்பன் இத் தடியைப் பயன்படுத்துவதுண்டு. ஆகமொத்தத்தில் மேய்ப்பன் தன் ஆடுகளின் நன்மைக்காகவே கோலையும் தடியையும் பயன்படுத்துவான் என்பது தெளிவு.

இன்றைய வாசிப்புப் பகுதியிலே, "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லுகிறேன்" என எபிரெயர் புத்தகத்தில் எழுதியிருப்பதை வாசிக்கிறோம். ஆம், ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை, தமது கோலையும் தடியையும் கொண்டு தமது கிருபையினால் பராமரித்து வழிநடத்துகிறார். அவர் தரும் சிட்சை அழிவுக்கேதுவானது அல்ல. அவர் தமது பிள்ளைகளை ஒருபோதும் அவ்வாறு தண்டிப்பது இல்லை. நாம் அவரைப் பின்பற்றி நடக்க மறுத்து, வழி விலகிபோகும்போது, நாம் விரும்பாவிட்டாலும்கூட எமது தவறுகளை எமக்கு உணர்த்தவே அவர் எம்மைச் சிட்சிக்கிறார்.

ஒரு தகப்பன் தன் பிள்ளையைச் சிட்சிப்பது, அப்பிள்ளை நன்றாக இருப்பதற்காகவேதான் என்பது தெளிவு. அவ்வாறே தேவன் நம்மைச் சிட்சிப்பது எமது நலனுக்காகவும் பிறருடைய நலனுக்காகவுமே ஆகும். கர்த்தர் கிருபையாக எச்சரிக்கும்போதே நாம் கீழ்ப்படிவோமானால், அவருடைய வேதனையான சிட்சைக்கு நாம் தப்பித்துக்கொள்ளலாமே. எனவே, இப்பொழுதே நாம் கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருந்து, எமது வாழ்விலே வேதனை உண்டாக்கும் வழிகள் காணப்படுகிறதா என்பதை ஆராய்ந்து பார்த்து சரிசெய்துகொள்வோமா.

"நல்ல மேய்ப்பனே, உமது சத்தத்துக்குச் செவிகொடுத்து, கீழ்ப்படிந்து வாழும் மந்தையில் நானும் ஒருவனாக நடக்க, என்னைத் தாழ்த்தி இன்றே ஒப்புவிக்கின்றேன். ஆமென்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
19
ஞாயிறு

வாசிப்பு: ஏசாயா 40:1-2, 10-11

# தடுமாற்றம் ஏன்?

'தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.' (சங்கீதம் 23:4)

"என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள். இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார். அவர் தமது புயத்தினால் அரசாளுவார். மேய்ப்பனைப்போல தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" என்று ஏசாயா தீர்க்கதரிசி தேவனுடைய ஆவியினால் நிறைந்து உரைத்ததை இன்றைய வாசிப்புப் பகுதியிலே நாம் வாசிக்கிறோம்.

ஒரு இடையன் தனக்குச் சொந்தமான மந்தையை அதிகமாக நேசித்து சொந்தக் குழந்தைகளைப்போல நடத்துவதை கிராமப் புறங்களில் அல்லது கார்டூன்களிலாவது பார்த்திருக்கலாம். ஆனால், ஆண்டவரோ, ஒரு பராக்கிரமசாலியாக நின்று தனது மந்தையைப் பாதுகாத்து அரவணைப்பதையே இன்று நாம் வாசித்தோம். இப்படியிருக்க, "ஐயோ, எனக்கு பாதுகாப்பில்லையே, நான் எங்கே போய் என் துக்கத்தைக் கூறுவேன், யாரிடம் என் உள்ளக் குமுறலைக் கொட்டமுடியும்" என அங்கலாய்க்கின்ற மக்கள் ஏராளம். இவர்களுக்கு நல் மேய்ப்பனைக் காட்டுகிறவர் யார்? 'ஆண்டவர் நம் எல்லோரின் தேவைகளை சந்திக்கவும் தேற்றவும் வல்லவராய் இருக்கிறார்' என்ற நல்ல செய்தியை இந்த மக்களுக்குக் கூற எம்மில் பலருக்கு தடுமாற்றம் இருப்பது ஏன்?

தேவன் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரின் சூழ்நிலையின் மத்தியிலும் அவர்களை மெதுவாய் நடத்துகிறார். ஆண்டவருடைய கோலும் தடியும் தேவ கிருபைக்கு ஒப்பாகவிருக்கிறது. ஆண்டவர் தமது கிருபையினாலே நம்மை அனுதினமும் பராமரித்து, வழிநடத்துகிறார். அவரைப் பின்பற்றி நடக்கிற பிள்ளைகளுக்கு குறையேதும் இல்லை. "சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது" (சங்கீதம் 34:10). இன்றைய நாளிலாகிலும் குறைவுகளை எண்ணுவதை மறந்து, தேவன் அருளிய நன்மையான ஈவுகளை எண்ணியவர்களாக, கோழி தன் குஞ்சுகளைப் பாதுகாப்பதிலும் அதிகமாக, தமது பலத்த புயத்தினால் எம்மைத் தாங்கி வழிநடத்துகிற தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக நாம் இருப்போமாக. இது எத்தனை பாக்கியம்!

பிரியமானவர்களே, மேய்ப்பனின் கையில் சுகமாக படுத்துறங்கும் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல இருக்கிறோமா? அல்லது மேய்ப்பனைக் கண்டு தூரமாக விலகியோடும் ஆட்டுக்குட்டியைப்போல தடுமாற்றமடைகிறோமா? தெரிவு நமது கைகளிலேயே இருக்கிறது. இத்தியான வேளையில் நம்மை ஆராய்ந்து தேவனுடைய கரங்களில் சாய்ந்துகொள்வோமாக.

"என் தந்தையே, நீர் உமது கரத்தினால் என்னை இதுவரை தாங்கி வருவதற்கு நான் எப்பொழுதும் நன்றியுள்ளவனாக இருப்பேன், ஐயா. ஆமென்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: சங்கீதம் 16:7-11

ஜூலை
**20**
திங்கள்

# மனந்தளர வேண்டாம்!

"நான் உனக்குப் போதித்து... உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." (சங்கீதம் 32:8)

தேவபிள்ளைகளுக்கு எதிராக பாதகமான சூழ்நிலைகள் எப்பொழுதுமே ஏற்படலாம். சாதாரணமாக வாழ்க்கையில் வரக்கூடிய பாதிப்புகள் பிரச்சனை களை அவர்களும் சந்திக்கலாம். அதேசமயம் மனந்தளர்ந்து விடுமளவிற்கு அவர்களுக்கு எதிராக எதுவும் நடக்கலாம். அப்படி எது நடந்தாலும் கூட தேவ பிள்ளைகளை ஜெயித்துவிட முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு தேவனே அரணாய் நின்று, போதித்து, பாதுகாத்து வழிநடத்தி வருகின்றார்.

ஒருமுறை பவுலடியார் தடுமாறியபோது, "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என தேவன் அவரைப் பலப்படுத்தினார். ஆகையால், "கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து இனி நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்." (2கொரி. 12:9) என்று அவரால் கூறமுடிந்தது.

அருமையான தேவபிள்ளையே, நீயும் இப்படியாக பலவிதமான அனுபவங்களினால் வாடி தொய்ந்துபோய் நிற்கின்றாயோ! கவலைப்படாதே, நீ மறுபடியும் கழுகுகளைப்போல எழுந்து பறக்கவேண்டியவன் என்பதை மறந்து விடாதே. இப் பூமியில் எமக்குப் போராட்டங்கள் இருந்தாலும் தேவனுடைய ஆலோசனையும் நமக்குண்டு. அவர் தரும் ஆனந்தம் நமக்குண்டு. இன்றைய வாசிப்புப் பகுதியிலே "உமது சமுகத்தில், பரிபூரண ஆனந்தமும் உமது வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" என்று கூறும் தாவீது, தொடர்ந்தும், "எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்." என்று கர்த்தரைத் துதிக்க மறக்கவில்லை. ஆம், இவ்வுலகில் துக்க துன்பங்களினூடாக நடந்துசென்றாலும், பலவித போராட்டங்கள் இருந்தாலும், பரலோகத்திலோ நித்திய மகிழ்ச்சி நமக் குண்டு. இதை உணர்ந்த தாவீது, "இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங் கள் என்னை உணர்த்தும்" என்று கூறுகின்றார். ஆம், துயரப் போராட்டத்தின் மத்தியிலும் தேவன் எம்முடன் இருக்கிறார், அவருடைய ஆலோசனைகள் அடங்கிய வார்த்தைகளை நாம் தியானித்து இரவும் பகலும் நினைவுகூரும்போது அவை உள்ளிந்திரியங்களை உணர்த்துமல்லவா. தேவபிள்ளைகளுக்கு எதிராக எழும்புகின்ற சட்டங்கள், தேவபிள்ளைகளை மேற்கொள்ள அன்றும் இன்றும் போராடிக்கொண்டே இருக்கின்றன. ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளோ மனந்தளர்ந்து போகவேண்டியதில்லை. ஏனெனில், நாம் நம்புகிறவர் இன்னார் என்பதை நாம் அறிந்திருக்கிறோமே. ஆகவே, சூழ்நிலைகளைக் கண்டு மனந்தளராமல், தேவன்மீது நம்பிக்கை வைத்து, என்ன எதிர்ப்பு வந்தாலும் தேவனுடைய துணையுடன் தேவபணியைத் தொடருவோமாக.

"கர்த்தாவே, எந்தத் தடை வந்தாலும் மனந்தளராமல் முன்செல்ல, எனக்குப் போதித்து, உமது ஆலோசனைகளின் வழியில் என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
21
செவ்வாய்

வாசிப்பு: சங்கீதம் 16:5-10

# மரண பயம்

'நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்.' (சங்கீதம் 23:4)

மேய்ப்பன் தன் மந்தையை குகைபோன்ற இருள் சூழ்ந்த இடங்களுக் கூடாகவும் நடத்திச் செல்ல நேரிடும். அது மரணத்திற்கு ஒத்ததான பயங்கரமான ஓர் அனுபவம். இவ்வசனத்தில் "இருள்" என்று எழுதப்பட்டுள்ள சொல்லானது ஆங்கிலத்திலே "நிழல்" என்னும் பொருள்பட கூறப்பட்டுள்ளது. ஒரு கிறிஸ்தவன் மரிக்கும்போது, அவன் மரணப்பிடிக்குள் அகப்பட்டு மாண்டுபோவதில்லை. மாறாக, அவன், மரண நிழல் கவிந்த பள்ளத்தாக்கின் ஊடாகக் கடந்து செல்லு கின்றான். ஆகவே அவனைப் பொல்லாப்பு அணுகாது. நமது இரட்சகராகிய இயேசு, கல்வாரியிலே மரணப்பிடிக்குள்ளாகக் கடந்துசென்று அதை வென்று விட்டபடியால், இன்று நமக்கு மரணம் நேர்ந்தாலென்ன, மரணத்தைப்போன்ற அனுபவங்கள் வந்தாலென்ன, அதன் நிழலை மட்டுமே நாம் கடந்து அப்பாலே செல்லுகின்றோம் என்ற உறுதி நமக்குண்டு. "நிழலானது எமது உணர்வுகளைத் தாக்குமே தவிர எம்மைத் தீண்டுவதில்லை." என்று றொபட் பீட்டர்சன் என்பவர் எழுதுகிறார். அதன்படி, நாம் மரண இருளின் நிழலுக்குள்ளாகக் கடந்து செல்ல நேரிட்டாலும் தீமை நம்மை மேற்கொள்ள ஏதுவிராது.

பலவிதமான பாதகமான சூழ்நிலைகளிலே, தனியாக நின்று, தேவனு டைய பிரசன்னத்தை உணர்ந்தவர் தாவீது. சவுலினால் பலதடவைகள் மரண பயத்தைச் சந்திக்க நேர்ந்தபோதும் தேவனோடுள்ள உறவினிமித்தம் அவற்றை மேற்கொண்டார். மிருகங்கள் நிறைந்த காடுகளில் அலைந்து திரிந்தபோது, மரண ஆபத்து போன்ற பயம் அவரை தடுமாற்றத்திற்குள்ளாக்கி இருந்திருக்க லாம். எனினும், அந்தச் சூழ்நிலைகளிலும் "தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்" என்று சொல்லுமளவிற்கு அவரது வாழ்க்கையில் அவர் தேவனோடு இருந்தார்.

தேவபிள்ளையே, மரணவேளையிலோ அல்லது மரணத்தைப்போன்ற அனுபவங்களிலோ நம்மோடுகூட எவரும் வரமுடியாது. தேவன் மாத்திரமே வர முடியும். ஆகவே தேவனுடன் நாம் நெருங்கி வாழ்ந்து, "தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்" என்ற தாவீதின் அனுபவத்தை நாமும் பெற்றுக்கொள்ளலாமே! பின்னர் மரணத்தைக் கண்டு நாம் ஏன் பயப்படவேண்டும்? அதற்கூடாக தைரிய மாகக் கடந்துசெல்லலாம்! இயேசுவும்கூட கல்வாரியில் இவ்வித அனுபவத்திற் கூடாகக் கடந்துசென்று சத்துருவின் தலையை மிதித்து அவனை மேற்கொண் டார் அல்லவா. ஆம், பிரச்சினைகளோ, பயமுறுத்தும் சூழ்நிலைகளோ, சாவு தான் வந்தாலுங்கூட, தேவன் நம்மோடுகூட இருக்கிறார் என்ற நிச்சயத்தோடு நாம் முன்செல்வோமாக. மரண பயத்தின் சூழ்நிலையிலும் தேவனுடைய பிரசன்னம் நம்மை ஆட்கொண்டிருக்குமானால் அதுவே பெரிய பாக்கியம்.

"உம்முடைய பரிசுத்தவானின் அழிவைக் காணவொட்டீர் என்ற உமது வாக்கின் படி, நான் வாழும் நாட்களெல்லாம் தகப்பனே, நீர் என் அருகிலே என்னோடு துணையாக வருவதற்காக நன்றி, தந்தையே. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
22
புதன்

வாசிப்பு: 2கொரிந்தியர் 5:6-11

# மரணத்தின் மீது ஜெயம்

'நாம் தரிசித்து நடவாமல்... கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகின்றோம்.' (2கொரிந்தியர் 5:6.8)

உலகத்தில் பிறந்த அனைவரும், மரண இருளைச் சந்திக்கவேண்டிய வர்களாகவே இருக்கிறோம். ஆனால் நாம் மரிக்கவேண்டிய இடத்தில் கிறிஸ்து மரித்து உயிர்த்து விட்டதினால், கிறிஸ்துவையுடைய நமக்கு, சரீர மரணம் ஒரு நிழலாகவே தெரிகிறது. மரணமானது தேவபிள்ளைகளை பயமுறுத்துவதாகவோ அழித்து விடுவதாகவோ இருக்கவே முடியாது. இவற்றையெல்லாம் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் மரணம் முடிவு அல்ல; நமக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உண்டு. ஆனால் அன்றைக்கு நாம் அவரை நியாயாதிபதியாகவே சந்திப்போம். இன்று அவரை இரட்சகராக சந்திப்போமானால், அந்த நியாயத் தீர்ப்பின் நாள் பயமுறுத்தும் நாளாக அல்ல, மகிழ்ச்சியின் நாளாகவே இருக்கும். அந்த நாள் எப்படி இருக்கும் என்பது நமது கைகளிலேயே இருக்கிறது.

"பாவத்தின் சம்பளம் மரணம்."(ரோம.6:23) அதேவேளை "தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்." இதனை விசுவாசிக்கின்ற தேவபிள்ளையே, இந்த உலகத்தில், "நாம் தைரியமாகவேயிருந்து இந்தத் தேகத்தை விட்டுக்குடிபோகவும், கர்த்தரி டத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்" என்று கொரிந்தியருக்கு பவுல் எழுதியவாறு நாமும் வாஞ்சிக்கிறோமா?

பரலோகம் என்பது எமது இரட்சகர் வாசமாயிருக்கும் ஒரு மெய்யான ஸ்தலம். அது, ஆண்டவர் எமது மேய்ப்பனாக வீற்றிருந்து எம்மை என்றென்றும் நடத்துகின்ற இடம். அங்கே நாமும் செல்லவேண்டாமா! இவ்வுலக வாழ்வு முடிவுறும்போது, அந்த பரலோகத்தின் நம்பிக்கை நமக்கு இருப்பதால், நாம் பயப்படத் தேவையில்லை. மரணத்தின் மீது ஜெயம் என்பது, மரணத்தின் அதிகா ரத்தை ஜெயித்து உயிர்த்தெழுவோம் என்ற நிச்சயமாகும். அந்த உயிர்த்தெழுத லிலே பங்கடையக்கூடிய நிச்சயத்தை நாம் பெற்றிருக்கின்றோமா? இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்கின்ற நாம், ஒருநாள் மரண வாசலுக்கூடாகப் பிரவே சிக்கும்போது, ஆண்டவருடைய பிரசன்னத்தால் பாதுகாக்கப்படுவோம் என்ற நிச்சயம் நமக்குண்டு. மரணம் எம்மை ஜெயிக்கமுடியாது. ஏனென்றால் நாம் "கர்த்தரிடத்தில் குடியிருக்கும்படியாகவே செல்கின்றோம்." ஆம், அந்தநாள் எவ்வளவு பாக்கியநாள்! நாமும் ஒருநாள், கர்த்தரோடு நெருங்கி நிரந்தரமாக தங்கி வாசம்பண்ணப் போகின்றோம். "கர்த்தர் என் மேய்ப்பர்", "தேவன் என்னோடு கூட இருக்கிறார்" என்று நிச்சயத்தை இப்போது பெற்றிருக்கிற நாம், அப்போது அதை அனுபவிக்கலாம் அல்லவா! இன்னும் மரண பயத்தோடு எமது நாட்களை வீணாகக் கழிக்காமல், பயத்தைத் தூக்கியெறிந்துவிட்டு தேவபிரசன்னத்தை எப்போதும் வாஞ்சிப்போமாக.

"ஆண்டவரே, எனது மரணம் எப்போது என்பதை நான் அறியேன், எனினும் "நீரே என் மேய்ப்பன், என் ஆண்டவர்" என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து, உயிர்த் தெழுதலில் உம்மோடு பங்குகொள்ள என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
23
வியாழன்

வாசிப்பு: 2நாளாகமம் 19:5-7

# தேவனுக்கான பயம்

"கர்த்தாவே. ...நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்." (சங்கீதம் 86:11)

தேவையற்ற பயங்கள் நமது சரீரத்துடன், ஆவிக்குரிய வாழ்வையும் பாதிக்கக்கூடியவை. ஆனால் நமக்கு இருக்கவேண்டிய ஒரு பயத்தைக் குறித்து வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. அது "கர்த்தருக்குப் பயப்படும் பயம்" ஆகும். இது கர்த்தருடைய பிரசன்னம் எப்போதும் நம்மோடு இருக்கிறது என்ற உணர்வைத் தரும்; தீமை செய்யாதபடி நம்மை எச்சரிக்கும். நன்மை செய்யும்படி நம்மைத் தைரியப்படுத்தும்; புத்தியுள்ளவர்களாக வாழ நம்மை எச்சரிக்கும்; உண்மையுள்ளவர்களாயிருக்கக் கற்றுத்தரும்; பரிசுத்தமாக வாழ பயிற்றுவிக்கும்; இந்த பயம் நம்மிடம் உண்டா?

தேவனுக்குப் பயந்திருப்பவர்கள், ஏனைய பயங்களிலிருந்து விடுதலை பெற்றவர்களாக இருப்பார்கள். உலகப்பிரகாரமான பயத்தை வெற்றிகொள்ள இயேசுவின் பாதத்தில் அமர்ந்து தாவீது ஜெபித்ததுபோல் "தேவனே என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்." (சங். 139:23,24) என ஜெபிக்கவேண்டும். அப்பொழுது நாம் வீணான பயத்தை மேற்கொள்ள முடியும். எமது இருதயத்திலே நாம் சுத்தமாக இருக்கும்போது பயம் எம்மை எவ்வழியிலும் மேற்கொள்ளமுடியாது.

கர்த்தருடைய வல்லமைக்குப் பயப்படுகிறவர்கள் இந்த உலகத்தின் எந்த அதிகாரத்திற்கும் வல்லமைக்கும் பயப்படமாட்டார்கள்; எந்தச் சோதனையைக் கண்டும் சோர்ந்துபோகமாட்டார்கள். இன்றைய வாசிப்புப் பகுதியிலே யோசபாத் என்ற ராஜா நியாயாதிபதிகளை நோக்கி, "நீங்கள் கர்த்தருடைய கட்டளைகளினால் நியாயம் விசாரிக்கிறீர்கள். ..அவர் உங்களுடனே இருக்கிறார்; ஆதலால் கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது. எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள்" என அறிவுரை கூறுவதை நாம் காண்கின்றோம். நம் தேவன் எம்மைக் காண்கின்றார், எப்போதும் வழிநடத்துகின்றார். ஆனால் நாம், தேவபயமற்றவர்களாக ஜீவிப்போமானால், அதன் பலனை நாமேதான் அறுவடை செய்யவேண்டியிருக்கும். "கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை. பரிதானமும் அவரிடத்திலே செல்லாது" எனவே கர்த்தருக்கு மாத்திரம் பயந்து, அவரை மாத்திரம் பிரியப்படுத்தி, அவருக்கு அர்ப்பணித்து வாழுங்கள். உங்கள் வாழ்வில் ஒரு பெரிதான வல்லமையையும் விடுதலையையும் சந்தோஷத்தையும் தேவ பிரசன்னத்தையும் உணருவீர்கள்.

"கர்த்தாவே, உமக்குப் பயப்படும் பயத்தை எனக்குப் போதியும். உம்மை மாத்திரம் பிரியப்படுத்தி வாழ நீரே என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
24
வெள்ளி

# என்னோடு கூட இருக்கிறீர்!

'நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும், நீர் என்னை உயிர்ப்பிப்பீர்.' (சங்கீதம் 138:7)

நாம் வாழும் சூழ்நிலைகளே எதிர்பாராத நேரத்தில், நம்மை வீழ்த்திப் போடக்கூடும். அல்லது எமக்கு நேரிடும் பிரச்சினைகளுக்கு மத்தியில் மீளுவதற்கு வழிதெரியாமல் நாம் தவிக்கக்கூடும். எதிர்பாராமல் நடக்கின்ற காரியங்கள், நமக்கே பாதகமாக மாறிவிடும்போது யாரைத் தேடுகின்றோம்? நோய்வாய்ப்படும் போது மருத்துவர்களையே நம்புகின்ற ஒரு சாரார், அரசியலிலே மனிதர்களை நம்புகின்ற மறுசாரார், என்று பலர் - பலரை பலகாரணங்களுக்காக நம்புவதும் ஏமாறுவதும் உலகிலே தாராளமாகக் காணமுடிகின்றது. ஆனால் நாமோ கர்த்தருடைய வலதுகரமே நம்மை இரட்சிக்கும் என விசுவாசித்து நடக்கின்றோம். தேவனே நம்மை இரட்சிப்பவர் என்ற அனுபவத்தைப் பெற்ற தாவீது, "சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்." (சங்.20:7) எனக் கூறி மகிழுகின்றார். ஆம், நமது வாழ்வில் என்ன நேரிட்டாலும் நாம் எதைக் குறித்து மேன்மை பாராட்டுகின்றோம் என்பது மிக முக்கியம். அதிலேதான் எமது விசுவாசம் வெளிப்படுகிறது.

"நாம் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்" என்பது தாவீதின் அனுபவமாக இருந்தது. இன்று நாம் எங்கே எதிலே எதன் பேரிலே விசுவாசம் வைத்திருக்கின்றோம்? நம்பிக்கைக்கு இடமேயில்லை என்கின்றதான சமயத்தில்தான் தேவன் எம்மை நோக்கிப் பார்க்கின்றார். எமக்கு உதவி செய்யத் தீவிரிக்கின்றார். இவ்வித அனுபவத்தை நீங்களும் உங்கள் வாழ்விலே அனுபவித்திருக்கிறீர்களா? தாவீதை சவுல் அழிக்க நெருங்கி வந்தபோதும் தேவன் தாவீதைக் கைவிட்டுவிட்டாரா? இல்லை. தேவன் தாவீதை ஒருபோதும் கைவிடவில்லை. தேவன் எம்மோடுகூட இருக்கின்றார் என்பதை நாம்தான் பலவேளைகளில் மறந்துவிடுகிறோம்.

இந்த வாழ்க்கை தேவன் கொடுத்த ஈவு. ஆகவே நமது வாழ்க்கைப் படகு அமிழ்ந்துவிட ஆண்டவர் ஒருபோதும் அனுமதியளிக்க மாட்டார். அன்று அக்கினிச் சூளையின் நடுவிலிருந்த சாத்ராக் மேஷாக் ஆபேத்நெகோ ஆகிய மூவரின் விசுவாசத்தைக் கண்ட தேவன், அவர்களை அக்கினியிலே எரிந்துபோக விட்டுவிடவில்லை. மாறாக, அக்கினியிலே அவர்களைத் தூக்கிப்போட்டவர்களே கருகிப்போனார்கள். ஆகவே தேவபிள்ளையே, இன்றைய நாளிலும் நீ தேவனுக்குள் தைரியமாயிரு. துன்பங்களை மாற்றுகின்ற அல்லது அதன் மத்தியிலும் உன் தலையை உயர்த்துகின்ற தேவனுடைய கரத்திற்குள் நீ இருப்பாயானால், உன்னை யாரும் எதுவுமே செய்யமுடியாது.

"தந்தையே, துன்பத்தின் நடுவிலே நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடுகூட இருக்கின்றீர் என்பதை எனக்கு உணர்த்தியமைக்காக நன்றி. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
25
சனி

வாசிப்பு: 1பேதுரு 5:5-7

# தேவனே அக்கறையுள்ளவர்

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்."
(1பேது.5:7)

கிறிஸ்தவ வாழ்க்கையானது தேவனுடைய பாதுகாப்பும் கரிசனையும் இருப்பதால் இன்பமும் இனிமையுமான பாதையாக இருந்தாலும், அது இருளான பாதையில் செல்லும் அனுபவங்களையும் நமக்குத் தரக்கூடும். மரண இருளின் பள்ளத்தாக்கு தன் வாழ்விலே வரவேயில்லை என சங்கீதக்காரன் கூறவில்லை. மாறாக, அந்த நேரத்திலும் தேவன் எப்படி அடைக்கலமானவராக இருந்திருக்கின்றார் என்பதையே தாவீது எடுத்துரைக்கின்றார். பேதுருவும் கஷ்டம் வராது என்று கூறவில்லை. மாறாக, "அவர் உங்களை விசாரிக்கிறவராக இருப்பதினால் கவலைப்படவேண்டாம்" என்றே அறிவுறுத்துகிறார்.

எமக்கு நேரிடும் துன்பகரமான காரியங்கள் அனைத்தையும் எமது அடுத்த வீட்டார் ஒருவேளை அறியாதிருக்கக்கூடும். அக்கறையுடன் எமக்கு உதவிசெய்பவர்களை விரல்விட்டும் எண்ணிவிடலாம். பலநேரங்களில் நாம் செய்த நல்ல காரியங்களுங்கூட சம்பந்தப்பட்டவர்களினால் மறக்கப்படவுங்கூடும். தொழில் செய்யுமிடத்தில் எமது உண்மையும் நேர்மையும் மழுங்கடிக்கப்பட்டு விடவும் கூடும். அல்லது, நேர்மையான எமது தெரிந்தெடுப்புக்குரிய மரியாதை கிடைக்காமல் மற்றவர் பார்வையில் கேலிக்குட்படுத்தப்படலாம். இவ்வாறு இவ்வுலகில் தீமை எமக்கு நேரிட்டாலும்கூட, "நன்மைசெய்வதால் பயனில்லை" என்று முடங்கிவிடத் தேவையில்லை. ஏனெனில், எமது துன்பகரமான நேரத்தில் எம்மை மறவாமல், எமக்கு உதவிசெய்யக்கூடிய இயேசுவை அறிந்திருப்போமானால், எதுவும் பெரிய பாரமாக நமக்குத் தெரியாது. அவருடன் நடப்போமானால் அவரே நம் துன்பத்தை நீக்கி, நம்மைத் தேற்றி ஆறுதல்படுத்துவார்.

இத்தகைய உரிமையைப் பெற்ற பிள்ளைகள்தான் தேவனை "அப்பா பிதாவே" என்று அன்புடன் அழைக்க, ஜெபிக்கக் கூடுமாயிருக்கின்றது. நம்மை உருவாக்கியவரும், நம்மை நன்கு அறிந்தவருமான தேவன்மீது நம் பாரத்தை வைத்துவிட்டு, அவரை நோக்கி "அப்பா பிதாவே" என்று அழைப்பாயா? அவர் உன்னை விசாரித்து தமது கிருபையினால் உன்னைத் தாங்கிக்கொள்வார். உன் குரலைக்கேட்டு பதிலளிப்பார். "ஆகையால், ..அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்" என்ற பேதுரு, "தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கின்றார்" என்பதையும் ஞாபகப்படுத்துகிறார். ஆம், கர்த்தர் நமக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகளைத் தந்து வழிநடத்தும் மகா உன்னதமான தேவன் என்பதை உணர்ந்திருப்போமானால், அவர் தமது நேரத்தில் நம்மை விடுவிக்கும்வரை பொறுமையோடிருக்கலாமே!

"கர்த்தாவே, என் குறைகளை நீக்கி, ஏற்றவேளையில் என்னைப் பாதுகாப்பவர் நீர். ஆகவே, என் கவலைகளை உம்மிடம் விட்டுவிடுகிறேன் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
26
ஞாயிறு

# சத்துருக்களுக்கு முன்பாக

'என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி...' (சங்கீதம் 23:5)

"தேவனுடைய பந்தி" என்பது, தேவனுக்கு எதிர்த்து நிற்கிறவர்களின் மத்தியிலும் ஆனந்தமாக அனுபவிக்கக்கூடிய ஒன்று. அது தேவபிள்ளைகளுக் கென்று தேவனால் ஆயத்தம்செய்யப்படுகின்ற பந்தி. தேவபிள்ளைகளாகிய நாம், நம்மைச் சத்துருக்களாகக் கருதுகிறவர்கள் நடுவிலும் வெட்கப்பட்டுப் போகாதபடி, நமக்குப் பாதுகாப்புத் தந்து, எமது தலையை உயர்த்தி, ஆசீர்வா தத்தால் நிறைத்து, தேவைகளைச் சந்தித்து, விசேஷித்த விதத்திலே எம்மைப் போஷிப்பதே தேவன் தரும் இந்தப் பந்தியாகும்.

கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்திற்கு எதிராக எதிர்த்து நின்ற ரோமர் களினால் பவுலும் சீலாவும் சிறையிலடைக்கப்பட்டார்கள். இருவரும் தங்கள் பட்டணத்திலே கலகம்பண்ணினார்கள் என்பதே அவர்கள்மீது சாட்டப்பட்ட குற்ற மாகும். ஆனால் பவுலும் சீலாவும் இதினிமித்தம் கலக்கமடைவதற்குப் பதிலாக, ஜெபித்து தேவனைத் துதித்துப் பாடினார்கள். துன்ப நேரத்திலும் சத்துருக்கள் கேட்கத்தக்கதாக, "நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி தேவனை துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண் டிருந்தார்கள்." (அப்.16:25). அவர்கள் தாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற துன்பத்தை எண்ணிப் பார்ப்பதற்குப் பதிலாக, "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது"(1தெச.5:18) என்பதை உணர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள். ஆம், அங்கேதான் தேவனுடைய விசேஷித்த பந்தியை அவர்கள் அனுபவித்தார்கள்.

நாம் சோர்ந்துபோகும் வேளைகளிலே தேவன் எமக்கு புத்துணர்வு அளிக்கின்றார். அன்று எலியா சோர்ந்துபோயிருந்தபோது தேவதூதன் ஒருவரி னால் அதிசயமாக போஷிக்கப்பட்டார். எமது இன்றைய வாழ்விலும் வறட்சி மேலெழும்போது உடனே தேவன் ஆவிக்குரிய ஆசீர்வாதமெனும் பந்தியை விரிக்கிறார். நமது வாழ்வின் எல்லா நிலைகளையும் அறிந்த தேவன், தமது பிரசன்னத்தையும் வல்லமையையும் நாம் உணர்ந்துகொள்ளத்தக்கதாக கிரியை செய்கின்றவராக இருக்கின்றார். ஆம், கருணையுள்ள மேய்ப்பனின் பாதுகாப்பைப் புரிந்துகொள்ள நாம்தான் பலநேரங்களில் தவறிவிடுகின்றோம். "பெலவீனத்தில் தேவனுடைய பெலன் பூரணமாக விளங்குகின்றது" என்று பவுலும் அறிக்கையிட்டார். அது வியாதியாயிருந்தாலென்ன, துக்கமாயிருந்தா லென்ன, இருதய நோயாயிருந்தாலென்ன, அதன் மத்தியிலும் சத்துருக்களுக்கு முன்பாக தேவன் நமக்கு ஆசீர்வாதமெனும் பந்தியை வைத்து வைத்திருக்கி றார். அதைப் பெற்றுக்கொள்பவர்களாக தேவனை நோக்கிக் காத்திருப்போமா.

"ஆண்டவரே, என் சத்துருக்களுக்கு முன்பாக எனக்கொரு பந்தியை ஏற்படுத்தி தருபவரே, அதற்குப் பாத்திரவானாக திகழ என்னை நடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
27
திங்கள்

வாசிப்பு: மத்தேயு 26:26-32, 38-39, 42

# தேவனுக்குரிய பாத்திரம்

"என் பாத்திரம் நிரம்பி வழிகிறது."
(சங்கீதம் 23:5)

"இவ்வுலக வாழ்க்கையில் மக்கள் நுகருகிற நலமான தீயதான யாவும்" பாத்திரம் என்றழைக்கப்படுவது யூதவழக்கு. அதாவது இன்பம் துன்பம் யாவும் கலந்த வாழ்வை ஒரு பாத்திரமாக அவர்கள் கணித்தார்கள். அத்துடன் ஒரு விருந்தினருக்கு ஒரு இனிய பழச்சாற்றை ஒரு பாத்திரத்தில் ஊற்றிக் கொடுப்பது அவர்களின் பண்பாடு கலந்த செயலாகவும் இருந்தது. இவ்விரு நிகழ்வுகளையும் சாராம்சமாக்கிய தாவீது, "என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்றும், "கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்; என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர்"(சங்.16:5) என்றும் பாடினார். 116ம் சங்கீதத்தை எழுதியவர் 13ம் வசனத்தில், "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்" என்றும் பாடினார். இவற்றிலிருந்து பாத்திரமானது மிகவும் பெறுமதி மிகுந்த, கனமிக்க ஒன்றாகவும், அவர்களுடைய வாழ்வாகவும் கருதப்படுவது தெளிவாகின்றது. இன்று எமக்கு தேவன் அருளிய "இரட்சிப்பின் பாத்திரத்தை" பெறுமதி மிகுந்ததாக, கனத்திற்குரியதாக நாம் பேணுகின்றோமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எம்முடைய பாத்திரம் எப்படிப்பட்டது? நாம், தேவனை நோக்கி, நீர் என் பாத்திரத்தின் பங்குமானவர் என கூறமுடிகின்றதா? இயேசு மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருந்த வேளையிலே, முகங்குப்புற விழுந்து, 'என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்' என்று ஜெபம் பண்ணினார். பின், தன்னுடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தவராக, மறுபடியும் இரண்டாந்தரம் போய், 'என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது' என்று ஜெபம்பண்ணினார்.

பெறுமதிமிக்க தமது வாழ்வை எமக்காக இயேசு ஒப்புக்கொடுத்தார். அப் பாத்திரமானது நொறுக்கப்படவும் அடிக்கப்படவும் கசையடிபடவும் சிலுவையில் அறையப்படவும் ஒப்புக்கொடுத்தார். ஆகவேதான் கிறிஸ்துவின் பாத்திரம் இன்றும் நிரம்பி வழிகின்றதாக இருக்கிறது. நாமும் ஏன் இந்த அனுபவத்தைப் பிரதிபலிக்கக்கூடாது? கர்த்தர் நமக்காக தம்மையே ஒப்புக்கொடுத்தாரே. அவரது கல்வாரியின் பிராயச்சித்தத்தினாலேயே நாம் இன்று இரட்சிக்கப்படுகின்றோம். இப்படியிருக்க, கர்த்தருக்காக வாழவேண்டிய நாம், நமது பங்கை மறப்பது ஏன்? நாம் குறைவுள்ள பாத்திரங்களாக இருந்தாலும், கர்த்தருக்காக பாடுபடவும், நீதியின் நிமித்தம் துன்பப்படவும், அதன் பலனாய் நமது பாத்திரம் நிரம்பி வழியவும் இன்றே அவர் கைகளில் நம்மை ஒப்புக்கொடுப்போமா!

"அன்பின் ஆண்டவரே, அடியேன் எப்போதும் பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படியும், நான் என்றும் உம்மைக் கனப்படுத்தி வாழவும், என்னை உமக்குரிய பாத்திரமாக்கி, நிரம்பி வழியச் செய்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: எபிரெயர் 2:14,15.

ஜூலை
28
செவ்வாய்

# ஜீவனுள்ள நாளெல்லாம்...

"...நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்." (சங்கீதம் 27:4)

இந்நாட்களில், மரணத்தைக் குறித்துப் பேசினால், தேவபிள்ளைகளில் சிலர் திகிலுற்று கலக்கமடைகிறார்கள். காரணம், சாத்தானின் வல்லமைகளை மேற்கொண்டவரும் மரணத்தை ஜெயித்தவருமான தமது மேய்ப்பரில் அவர்கள் நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்ளாதிருப்பதேயாகும். இயேசு கிறிஸ்து ஒருவரே மரண பயத்திலிருந்து எம்மை விடுவிக்கின்றவராக இருக்கிறார். அப்படியிருக்க நமக்கு ஏன் இன்னும் மரணபயம்? அதைவிட்டு, நம்மை இரட்சித்த ஆண்டவரை நாம் முற்றிலும் சார்ந்து வாழல்லாமே? மரணத்துக்கு அதிபதியான பிசாசை அழித்து, ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளான நம்மை விடுதலைப்பண்ணும்படிக்கு மாம்சத்தையும் இரத்தத்தையும் இயேசு ஏற்றுக்கொண்டு மனிதனாக வந்தார். அவரே, எம்மை வழிநடத்தும் நல்ல மேய்ப்பராகவும் இருக்கிறார்.

"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" என்று பாடிய தாவீது, தன் வாழ்விலே அவர் தேவன் மீது மட்டுமே வாஞ்சையாயிருந்தார். ஆகவேதான் அவரால் இவ்வாறு கூறமுடிந்தது. இன்று நாம், ஒருநாளைக்கூட வீணடிக்காமல் வாழ்நாள்முழுவதும் தேவ சமுகத்தில் இருப்பதை நாடுகிறோமா? நித்திய நித்தியமாய் அவரோடே வாழுகிற சந்தோஷம் நமக்குள் இருக்குமானால், அதுவே நமக்கு ஜெயம் தரும். தன் வாழ்நாட்களை தேவசமுகத்திலே செலவிட வாஞ்சித்த தாவீது, இவ்வுலகத்தில் நிரந்தர மகிழ்ச்சி கிடைக்காது என்றும், தன் வாழ்விலே பிரதானமானது தேவ பிரசன்னமே என்பதையும் விளங்கிக்கொண்டிருந்தார். இன்று கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினால், அவர் அருளின இந்த அற்புதமான நிச்சயத்தை நாம் பெற்றுக்கொண்டுள்ளோமா? மரணப்படுக்கையில் சாயும்போதும் அந்த தேவ சமாதானம் நமக்குள் இருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம்.

தேவபிள்ளையே, "நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்தநாட்களாய் நிலைத்திருப்பேன்" என்று இன்று நம்மால் கூறமுடியுமா? மரண பயத்தை வென்ற இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராகவும் மேய்ப்பராகவும் அறிந்துள்ளீர்களா? அப்படியாக அறிந்திருப்பீர்களாயின், நீங்கள் ஒருநாளும் சோர்வடைய மாட்டீர்கள். ஏனென்றால் தேவனுடைய சமுகமே நிரந்தரமான மனநிறைவு தருகின்ற இடமாக இருக்கின்றது. இவ்வுலகில் நாம் ஜீவிக்கின்ற காலமென்றாலென்ன, நித்திய நித்தியமாய் நாம் வாழப்போகும் வாழ்வானாலென்ன, நாம் என்றும் இயேசுவோடுகூட வாழுவோம். இது எத்தனை ஆனந்தம். நாம் எவ்வளவு பாக்கியவான்கள் என்பதைச் சிந்தித்துப் பார்ப்போமாக.

"கர்த்தாவே, என் ஜீவனுள்ள நாட்களெல்லாம் உமது பிரசன்னத்தை நாடித் தேடும் இருதயத்தை எனக்கும் தாரும். அப்போது நான் உம்முடைய ஆலயத்திலே என்றும் சுகமாய் தங்கியிருப்பேன். ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை

29

புதன்

வாசிப்பு: உபாகமம் 1:29-33

# வாழ்வில் ஆசீர்வாதம்!

"என் ஜீவனுள்ள நாளெல்லாம்... நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்." (சங்கீதம் 23:6)

ஜீவிய நாட்களை சந்தோஷமாகக் கழிப்பது தேவன் அருளிய ஈவு. அதிலே கர்த்தர் நம்முடைய மேய்ப்பராக இருக்கும்போது, இவ்வுலக வாழ்வில் மட்டுமல்ல, இனிவரும் வாழ்விலும் தேவனுடைய ஆசீர்வாதம் நம்மை தொடர்ந்து வரும். நம்முடைய வாழ்வு மரணத்தோடு முடிவடைந்து விடுவதில்லை. ஒரு சில நேரத்தில், காரணங்கள் விளங்காவிட்டாலும்கூட சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே இருக்கும். ஆகையால், என்ன நேர்ந்தாலும் நாம் தேவனுக்குள் நிச்சயமாகவே நமது வாழ்நாட்களை சந்தோஷமாகவே அனுபவிக்கலாம்.

தேவபயமற்றவனுக்கு அதாவது கர்த்தரைத் தேடாதவனுக்கு இவ்வுலக வாழ்வு மாயையாகவும் வெறுமை நிறைந்ததாகவுமிருக்கும். ஆனால், கர்த்தரை நம்புகிறவர்களுக்கோ வாழ்வில் நம்பிக்கையிருக்கிறது. இவ்வுலக வாழ்வு முடிந்த பின்னரும், நாம் அவரோடுகூட நித்தியகாலமாய் வாசம்செய்வோம். இதனால் தான், கர்த்தருடைய வீட்டிலே, தேவனுடன் இருப்பதையே சங்கீதக்காரனும் வாஞ்சித்தார். இன்று நமது வாஞ்சை என்ன?

நமது வாழ்வு மேடு பள்ளங்கள், தொல்லைகள் நிறைந்தவையாக இருந்தாலும், வாழ்வு நிலையற்றதாக இருப்பினும், நமக்கு நியமிக்கப்பட்ட வாழ் நாட்களை வீண் துக்கங்களோடு கழிக்காமல், தேவன் அருளிய சந்தோஷங்க ளுடன் நம்மால் வாழமுடியும். "ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே" என்று மோசே இஸ்ரவேல் மக்களுக்கு ஞாபகப்படுத்தி னார். இனிமேலும் இவ்விதமாக தேவன் நம்மை வழிநடத்துவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆக, நாம் வாழ்கின்ற இவ்வுலக வாழ்விலும், இனிவரும் வாழ்விலும்கூட தேவனே நம்மை வழிநடத்துகிறவர். ஆம், அவரே நம்மை வழிநடத்துவராயின் நாம் அவருடைய வீட்டிலே நிம்மதியாக இருக்கலாம் அல்லவா. இந்தக் காரியத்திலே தாவீதுக்கு இருந்த நம்பிக்கை நமக்கும் இருக்க வேண்டியது அவசியம்.

தேவபிள்ளையே, கர்த்தருக்குள்ளும் அவர் அருளிய ஈவுகளுடனும் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கப் பழகிக்கொள்; இவ்வுலக வாழ்விலே அவர் தரும் ஆசீர்வாதம் போதும் என்ற மனதுடன் வாழ முற்படு. ஏனெனில் கர்த்தரை நம்புகிறவர்களை அவரே காப்பாற்றுகிறார். தேவைகளைச் சந்திக்கிறார். உன் தேவன் தம்முடைய சமுகத்திலே உனக்காக வைத்திருக்கிற சந்தோஷத்தை ஒருபோதும் இழந்துவிடாதே.

"நல்ல மேய்ப்பனே, நிலையற்ற இவ்வாழ்விலும் நீர் கொடுத்த சந்தோஷங்களை உமக்குள் அனுபவிக்கவும், இனிவரும் வாழ்விலும் உம்மோடிருக்கவும் எனக்கு உதவிசெய்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை
30
வியாழன்

வாசிப்பு: 1யோவான் 4:2-6

# கொஞ்சக் காலம்

கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். பூமியிலே நான் பரதேசி. (சங்கீதம் 119:1,19)

இப் பூவுலகமும் அதிலுள்ள யாவும் தேவனுடையது. உலகத்திலுள்ள யாவையும் தேவன் அறிந்திருக்கிறார். மேலும் அதிலுள்ள மனிதர்களான, "சகல ஜாதிகளும் அவருக்கு முன்பாக ஒன்றுமில்லை, அவர்கள் சூனியத்தில் சூனியமாகவும், மாயையாகவும் எண்ணப்படுகிறார்கள்" என ஏசாயா 40:17ல் கூறுகிறார். இப்படியிருக்க, நம்மைச் சுற்றிலும் நடக்கின்ற சம்பவங்களைப் பார்த்து, இயேசு சீக்கிரம் வந்துவிடுவார், உலகம் இனி அழியப்போகிறது என்று நாமும் அடிக்கடி பேசிக்கொள்கிறோம். ஏன் இப்படிப் பேசுகிறோம்? நாம் இந்தப் பூமியிலே வாழப் போவது கொஞ்சக்காலம் என்பதை அறிந்திருப்பதினாலேயே இப்படிப் பேசுகிறோமா? ஆம், நிலையான ஆத்மீக உலகத்தோடு ஒப்பிடும்போது இந்த உலகம் நிலையற்றது என்பதை சத்தியவேதம் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

நீங்கள் கடந்துவந்த காலத்தைச் சற்று திரும்பிப் பாருங்கள். நாம் சிறுவர்களாக இருந்தபோது பார்த்த உலகம், இன்றும் பயங்கரமாக ஒன்றுமில்லாததுபோல தோன்றுகிறதல்லவா! ஆம், இவ்வுலகிலே நாம் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை. இப்பூமியில் நமது வாழ்க்கை தற்காலிக வாழ்வாகவே இருக்கிறது. அதனாலே "பூமியிலே நான் பரதேசி" என சங்கீதக்காரன் எழுதுகிறார். "பூமியின் மேல் நம்முடைய நாட்கள் நிழலைப்போலிருக்கிறது"(யோபு 8:9) என்று யோபுவும் கூறினார். அந்த நிழலைப்போன்ற வாழ்க்கையை நாம் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். எனினும், இவ்வாழ்வில் மேய்ப்பனாகிய கிறிஸ்துவையே பிரதிபலிக்கின்றவர்களாக வாழவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அந்த அழைப்புக்கு நாம் உண்மையாய் இருக்கிறோமா? அல்லது, உலகத்தின் பின்னால் செல்கிறோமா?

பிரியமானவனே, இவ் உலகத்தின் காரியங்களுக்காக சண்டை போட்டு அவற்றைப் பெற்றுக்கொள்ள ஆசையுள்ள மனிதர்கள் எத்தனைபேர்? நாமோ, நம்முடைய குடியிருப்பு தேவனிடத்திலிருக்கிறது என்பதை உணர்ந்திடவேண்டும். மேய்ப்பனாகிய கிறிஸ்துவின் பின்னே அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறவர்களாக அவருக்காகவே நாம் வாழுவோம். உத்தம மார்க்கத்தாராக நடந்துகொள்வோம். கர்த்தருடைய வேதத்தின்படி நடந்து இறுதியில் அவரிடமே நாம் சேருவோம். உலகம் பாவத்துக்குள் விழுந்தபோதும், அதிலிருந்து நாம் விடுதலைபெற்றவர்களாக உலகத்தை ஜெயிப்போம். ஏனெனில், இவ்வுலகத்தில் இருப்பவனிலும் நம்முடனே இருப்பவர் பெரியவர் என வேதம் அறிவிக்கிறது. ஆம், இன்று நாம் இந்தப் பூமியில் பரதேசி என்பதைவிட நம்மோடு இருப்பவர் பெரியவர் என்ற நிச்சயம்தான் முக்கியமானது.

"தேவனே, என் வாழ்வு தற்காலிகமானது. எனினும், நான் இவ்வுகத்திற்குரியவன் அல்ல என்பதை உணர்த்தியதற்காக உமக்கு நன்றி. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜூலை**
**31**
**வெள்ளி**

வாசிப்பு: 2சாமுவேல் 2:5-7

# நன்மை தொடருவது நிச்சயம்!

'...நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்.'
(சங்கீதம் 23:6)

தாவீதை எதிர்த்த சவுல் மரணமடைந்தபோது கீலேயாத்து தேசத்து மனுஷரில் சிலர் போய், அவனது உடலை அடக்கம்பண்ணினார்கள். இதனைக் கேள்விப்பட்ட தாவீது, அந்த யாப்பேசின் மனுஷரிடத்திற்கு தனது ஸ்தானாதிபதிகளை அனுப்பினார். "உங்கள் ஆண்டவனாகிய சவுலுக்கு இந்தத் தயவைச் செய்து, அவரை அடக்கம்பண்ணினபடியினாலே, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்று அவர்களை வாழ்த்தினார். பின்னர், 'நீங்கள் செய்த இந்த நன்மைக்குத்தக்கபடி உங்களை நடத்துவேன்' எனவும், 'சவுல் மரித்தபின்பு, யூதா வம்சத்தார் என்னைத் தங்கள்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்' எனவும் தாவீது அவர்களுக்குச் சொல்லச் சொன்னார் என்று இன்றைய வாசிப்புப் பகுதியிலே இந்தக் காரியங்களை வாசிக்கிறோம்.

ஒரு சாதாரண மனிதனான தாவீது, இவ்வாறு நன்மையும் தயையும் செய்யும்போது, எமது பரம தந்தையாகிய ஆண்டவர் எவ்வளவு நமக்கு நன்மை செய்வார். அவருடைய அன்பு மாறாதது, அது மனிதர்களுடைய அன்பைப்போல சூழ்நிலைகளுக்கு ஏற்றவிதமாக கூடிக்குறைவது அல்ல. எனவே நாம் எந்நிலையிலிருந்தபோதும் எப்பொழுதும் ஒரேவிதமாகவே ஆண்டவர் நம்மை நேசிக்கிறார். அவர் நமக்கு நன்மை செய்கின்றவராகவே இருக்கிறார். அவர் நமக்கு ஒருபோதும் தீமையானதைத் தரமாட்டார். என்ற நிச்சயத்தை நாம் உடையவர்களாக மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் சோர்ந்துபோகாதிருப்போம். அப்போது தேவனின் நன்மையும் கிருபையும் நம்மைத் தொடர்ந்துவரும்.

தேவனை நம்பி தேவபயத்தோடு வாழ்கின்றவர்கள் நிச்சயமாக தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். தேவனாகிய கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குரிய "..கிருபையையும் மகிமையையும் அருளுகிறவர்" (சங்.84:11), "உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்" என நீதி.14:22 ல் தேவவார்த்தை கூறுகின்றது. ஆம், நன்மையை யோசிக்கிறவர்களுக்கு தேவ கிருபையும் சத்தியமுமுண்டு. தேவனை நம்பியவர்கள் எப்பொழுதும் அவருடைய நன்மையினாலும் கிருபையினாலும் நிறைந்தவர்களாகவே இருப்பார்கள்.

தேவபிள்ளையே, கர்த்தரை நம்பி நன்மையை செய். அப்பொழுது அவரே உன்னைக் காப்பாற்றுவார். அவர் அருளும் நன்மையும் அவரது கிருபையும் எம்மைத் தொடர்ந்துவரும். இம்மாதம் முழுவதும் தமது கிருபையினாலே நம்மைப் பராமரித்தவர், தொடர்ந்துவரும் நாட்களிலும் கண்ணின் மணிபோல தாங்குவார். வழிநடத்துவார். ஆமென்.

"கர்த்தாவே, நீர் தருகின்ற நன்மைக்காகவும் கிருபைக்காகவும் உமக்கு நன்றி. இம்மாதம் முழுவதும் என்னைக் கரம்பிடித்து நடத்தினீரே. நன்றி ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
1
சனி

வாசிப்பு: சங்கீதம் 27:1-11

# உன் வாஞ்சை என்ன?

"கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணுவான்?" (சங்கீதம் 15:1)

வெளிநாடு போய்விடவேண்டும்; விரும்பிய வீட்டை வாங்கிவிடவேண்டும் என்று பலவிதமான வாஞ்சைகள் பலருடைய மனதில் ஓடிக்கொண்டே இருக்கின்றன. விரும்பியவை கிடைக்காவிட்டால் மனமடிவுக்குள்ளாகிறோம். எப்படியாவது அவற்றை அடைந்துவிட பல முயற்சிகள் எடுக்கிறோம். ஆனால் ஒன்றை நாம் சிந்திப்பதேயில்லை. இவை யாவும் நம் வாழ்வில் நிலைநிற்குமா?

தாவீது ராஜாவின் உள்ளத்திலும் ஒரு வாஞ்சை ஓடிக்கொண்டேயிருந்தது. தேவனுடைய பிரசன்னத்திலே எப்போதும் இருக்கவேண்டும், அதுவே அவரது வாஞ்சை. அவருடைய பல சங்கீதங்களில் இவ்வாஞ்சை தொனிக்கிறது. கர்த்தருடைய கூடாரத்தில் தங்கியிருக்கக்கூடியவன் யார்? கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்திலே வாசம்பண்ணக்கூடியவன் யார்? எல்லா மனுஷரும் பாவம்செய்து ஏகமாய் கெட்டுப்போயிருக்க இந்தத் துணிவு யாருக்கு வரும்? கர்த்தருடைய கூடாரம், கர்த்தருடைய பரிசுத்த பர்வதம் என்று சொல்லும்போது இஸ்ரவேலர் கர்த்தரைத் தொழுதுகொள்ளும் இடம் என்பதைக் குறிக்கும். அதாவது, கர்த்தர் வாசம்பண்ணும் இடமே அவரைத் தொழுதுகொள்ளும் இடம் என்பது அன்றைய எபிரேயருக்கு நன்கு தெரியும். அந்த நினைவில் திளைத்தவராகவே தாவீது இச் சங்கீதத்தைப் பாடியிருப்பார். ஏனெனில் கர்த்தருடைய பிரசன்னத்திலே தங்கி ஜீவிக்கவேண்டும் என்ற வாஞ்சை எப்போதும் தாவீதின் உள்ளத்திலே வேரூன்றி இருந்தது. "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன்; அதையே நாடுவேன். ..நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" என்று இந்த வார்த்தைகளைப் பாடியபோது தாவீதின் இருதயம் கர்த்தருடைய பிரசன்னத்திற்காக எவ்வளவாக வாஞ்சித்திருக்கும் என்பதை அந்த வார்த்தைகளிலிருந்து நாம் உணரலாம்.

நித்தமும் பாவத்தில் உழலுகிற நாம், கர்த்தருடைய பிரசன்னத்தில் தங்கியிருப்பது எப்படி? அது முடியும்; முடியவேண்டும். இல்லாவிட்டால் நாம் வாழ்ந்தென்ன பயன்? உள்ளத்தில் அந்த வாஞ்சை இருந்தாலேபோதும், கர்த்தர் அதை நிறைவேற்றுவார். தாவீதிற்கு அன்று இயேசுவின் இரத்தத்தைப் பற்றித் தெரியாது. நாமோ இன்று அந்த இரத்தத்தினாலான மீட்பைப் பெற்றிருக்கிறோம். ஆகவே அந்த வாஞ்சை நமக்குள் இரட்டிப்பான மடங்காக எழும்பவேண்டும். ஆனால் நமது உள்ளத்தை நிரப்பியிருப்பது என்ன? கர்த்தருடைய பிரசன்னத்தை முதலாவது நாடுவோமாக. அப்போது அவர் நமது காரியங்களைப் பொறுப்பெடுப்பார். காலையும் மாலையும் எவ்வேளையும் தேவபிரசன்னத்தில் நிலைத்திருக்கின்ற வாழ்வை வாஞ்சிப்போமாக. நமது வாஞ்சைகளை தேவன் தீர்ப்பார்.

"பிதாவே, நான் பாவி; ஆனாலும் உமது பிரசன்னத்தில் தங்கி வாழுவதையே நான் வாஞ்சிக்கிறேன். உம்மண்டை என்னை இழுத்துக்கொள்ளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்

2

ஞாயிறு

வாசிப்பு: நீதிமொழிகள் 2:1-7

# உத்தமம்

"உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்."
(நீதிமொழிகள் 10:9)

யார் கர்த்தருடைய கூடாரத்திலே தங்குவான் என்ற கேள்விக்கு தாவீது கண்டுகொண்ட முதற்பதில், 'உத்தமனாய் நடப்பவனே' என்பதுதான். உத்தமம் என்று சொன்னதும் ஒரு தேவஅடியான் சொன்ன உண்மை சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறது. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஹோட்டலில் உணவு வாங்கப் போயிருந்தார்கள். அங்கே ஒரு சிறு பெட்டியில் உணவை வைத்து மூடிக் கொடுப்பது வழக்கம். இவர்களும் இரண்டு பெட்டிகள் வாங்கினார்கள். வெளியே வந்து அதைத் திறந்தபோது ஒன்றிற்குள் அதிகமான பணம் இருக்கக் காணப்பட்டது. அந்தக் காசாளர் அதேமாதிரி ஒரு பெட்டியில்தான் காசு சேர்த்திருக்கிறார், அந்தப் பெட்டி தவறுதலாக இவர்களிடம் கொடுபட்டுவிட்டது. இதை உணர்ந்தவர்கள் அதைத் திருப்பிக்கொடுக்க காசாளரிடம் சென்றனர். காசாளருக்கு பெருமகிழ்ச்சி. ஆகவே, இந்த இருவரையும் கௌரவிக்க விரும்பி, அவர்களை ஒரு படம் எடுக்க விரும்பினார். அப்போது அந்த சகோதரன் இந்தக் காசாளரிடம், எல்லாம் நல்லது. ஆனால் இந்தப் படத்தை என் மனைவிக்குத் தெரியப்படுத்திவிட வேண்டாம் என்று சொன்னாராம். நடந்தது என்ன? அந்தச் சகோதரன் உண்மைத்துவம் உள்ளவராய் பிறனுடைய பணத்தை உரியவனிடம் சேர்ப்பித்தார். ஆனால் தன் மனைவிக்குத் துரோகம்செய்து, தவறான உறவில் ஒரு பெண்ணைச் சேர்த்துக்கொண்டு தன் உத்தமத்திலே அவர் தவறிவிட்டார்.

எந்தவொரு காரியமும் நமது உள்வாழ்விலிருந்து, நமது இருதய நினைவிலிருந்துதான் ஆரம்பமாகிறது. ஆனால் பல காரியங்களை நமக்குள்ளே மறைத்துக்கொண்டு, வெளிவாழ்விலே நல்லவர்கள்போல நாம் நடக்கலாம். பணத்தைத் திருப்பிக்கொடுக்கும்போது யார்தான் போற்றமாட்டார்கள். ஆனால் மறைவான வாழ்வு, இருதயத்தில் புதைந்திருக்கிற நினைவுகள், ஆசைகள், கற்பனையில் நாமனுபவிக்கும் இன்பங்கள், நல்லவர்கள்போல பேசிக்கொண்டு பழிதீர்க்க பார்த்திருக்கும் தருணங்கள்; இவற்றை நாம் பிறருக்கு மறைத்து வாழலாம், ஆனால் தேவனுக்கு மறைக்கமுடியுமோ? குறைந்தபட்சம் நமக்குள் புதைந்திருக்கிற பாவங்களைக் குறித்து ஒரு மனஸ்தாபம், அதிலிருந்து வெளிவர முடியவில்லையே என்ற ஆதங்கம்கூட இல்லாதிருப்போமானால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கவே முடியாது. வெளிவாழ்வில் காட்டும் உண்மைத்துவம் அல்ல; மறைவிலே இருக்கிற உண்மைத்துவமே நமது உத்தமமான வாழ்வுக்கு எடுத்துக்காட்டாகும். நமது உள்ளத்தை பிறர் புரிந்துகொள்ளாமல் இருக்கலாம். ஆனால் தேவன் அறிவார். அவருக்கு முன்பாக உத்தமமாய் நடக்கிறவன் நிச்சயமாய் பத்திரமாய் நடப்பான்.

"பிதாவே, என் வெளிவாழ்வில் மாய்மாலம் பண்ணாமல் உண்மையாய் ஜீவிக்கும்படி, முதலாவது என் உள்வாழ்வின் உத்தமத்தைக் காத்துக்கொள்ள கிருபை செய்யும். என் உத்தமத்திலே தவறி அழிந்துபோகாதபடி காத்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
3
திங்கள்

வாசிப்பு: யோபு 1:7-8; 29:1-20

# மறைவான மனநோக்கு

'இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை. தேவனைப் பற்றிக் குறைசொல்லவுமில்லை.' (யோபு 1:22)

நெருக்கங்களும் துயரங்களும் தாக்கும்போதுதான் நமது மனஉத்தமத்தின் உண்மைநிலை நமக்கே புரியும். ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கும் மேலாக தூரதேசத்திலிருந்த தன் சகோதரனின் முகத்தை காணாதிருந்த ஒரு சகோதரி, அவர் இறந்துவிட்ட செய்தி கேட்டு இடிந்துபோயிருந்தாள். இனி அவளுக்கு தன் பிள்ளைகளைத் தவிர வேறு உறவுகள் யாருமில்லை. இந்த செய்தி வந்து சில மணிநேரத்திற்குள் இன்னுமொரு எதிர்பாராத பேரிடிக்கு அவள் முகங்கொடுக்க நேரிட்டது. அவள் தவித்துப்போனாள். ஆனால், தேவன் கிருபையாய் அவள் குடும்பத்தைக் காப்பாற்றினார். இதைக்குறித்து அவளிடம் கேட்டபோது, 'அந்த சமயத்திலும் நான் என் தேவனையே நோக்கிப் பார்த்தேன். அவர் என்னோடே கூடவே இருந்தார்' என்று பதிலளித்தாள். யோபுவுக்கு நேர்ந்ததுபோல நேரிடாவிட்டாலும்கூட அந்த விதவை சகோதரியைப் பொறுத்தளவில் அதற்கொப்பானதொரு மனநிலையிலேயே அவள் இருந்தாள். ஆனாலும், தன் தேவனைப்பற்றும் உத்தமத்திலே அவள் தவறிப்போய்விடவில்லை.

யோபு துயர நேரத்தில் மாத்திரமல்ல, அதன் முன்னரும் தன் உத்தமத்திலே நிலைத்திருந்தவராகவே வாழ்ந்தார். 'அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது. அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன்.' இப்படியாக யோபு தன் முன்நிலையை மீட்டிப்பார்ப்பதை 29ம் அதிகாரத்திலே வாசிக்கிறோம். ஆம், யோபு சீரும் சிறப்புமாய் எவ்வளவோ மேன்மையானதொரு வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த ஒருவர். இவரைக் கண்டதும் வாலிபர்கள் ஒளிந்துகொள்வார்களாம்; முதியோர் எழுந்து மரியாதை செய்வார்களாம்; பிரபுக்கள் பெரியோர் யாவரும் வாய்மூடி நிற்பார்களாம். மொத்தத்தில் ஒரு ராஜாமாதிரி யோபு ஜீவித்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை இன்று யாருக்காவது கிடைத்தால் அவர்கள் பிறரை மதிப்பார்களா? ஆனால், 'என் தாசனாகிய யோபு' என்றும், 'உத்தமனும் ...அவனைப்போல பூமியிலே ஒருவனும் இல்லை' (யோபு 1:8) என்றும் கர்த்தராலே சாட்சி பெறத்தக்க அளவுக்கு யோபு தன் உத்தமத்திலே நிலைத்திருந்தார் என்றால் எத்தனை ஆச்சரியம்.

தேவபிள்ளையே, வாழ்வின் மேன்நிலைமையிலும் கீழ்நிலைமையிலும் ஒன்றுமேயில்லை. எதிலும் கர்த்தர் நம்மோடே இருப்பார். நமது வெளிப்புறமான வாழ்விலும் எதுவுமில்லை. அதை மனுஷர் காண்கிறபடியினாலே நாம் அதைச் சரிப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் நமக்குள் மறைந்திருக்கும் மனநோக்கு, நீதி இவற்றை தேவன் மாத்திரமே காண்கிறார். ஆகையால் எதிலும் நமது உள்ளம் தேவனுக்கு முன்னே உத்தமமாய் இருக்கவேண்டும். அப்படி இருக்கிறோமா?

"பிதாவே, என் அந்தரங்க நோக்கங்களை உம்மிடம் ஒப்படைக்கிறேன். உத்தமத்தில் நிலைத்திருந்து உமது சாட்சியைப்பெற கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

4

செவ்வாய்

வாசிப்பு: எண்ணாகமம் 32:7-15

# ஜீவிய பரியந்தம்...

'என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னைவிட்டு விலக்கேன்.' (யோபு 27:5)

ஒரு அவசர உதவிக்காக, சட்டப்படி தவறாயிருந்த ஒரு காரியத்தைச் செய்த வைத்தியர் அகப்பட்டுகொண்டார். அவர் தன் தவறை உணர்ந்து தண்டனைக்குத் தயங்காதிருந்தபோதும், பணம் பறிக்கும் உள்நோக்குடன் அவருக்கு உதவிசெய்வதுபோல பாசாங்கு செய்த ஒரு உயர் அதிகாரி, அந்தத் தவறை வேறுவிதமாகத் திருப்பிவிட்டு தந்திரமாக தப்பித்துக்கொள்ள வைத்தியருக்கு உதவிக்கரம் நீட்டினார். வைத்தியரோ அவிசுவாசியாக இருந்தபோதும், 'இதற்காக காலம் முழுவதும் சிறையில் கழிக்கநேர்ந்தாலும் இந்தக் காரியத்தை நான் செய்யேன்' என்று சொல்லி மறுத்துவிட்டார். இது ஒரு உண்மை சம்பவம்.

யோபுவோ, 'என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தைவிட்டு விலக்கேன்' என முழங்கினார். யோபுவுக்கு இருந்த உறுதி நமக்கில்லாவிட்டாலும், நீதியான வாழ்வு நாம் வாழாவிட்டாலும், மன்னிக்கப்பட்ட வாழ்வு நமக்குண்டு. கிறிஸ்துவின் நீதி நமக்கு அருளப்பட்டிருக்கிறது. காலேப்பைக் குறித்து, 'உத்தமமாய் என்னைப் பின்பற்றின ...காலேப்' என்று எழுதப்பட்டுள்ளது. கூடவந்த பத்துப்பேரும் சூழ்நிலைக்குப் பயந்து துர்ச்செய்தி பரப்பினார்கள். ஆனால் காலேபும் யோசுவாவுமோ, 'கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால்...' என்று உறுதிமொழி கொடுத்தனர். அவர்கள் தேவனை மனதார நம்பினார்கள். கர்த்தர் அவர்களது மனஉத்தமத்தைக் கனப்படுத்தினார். முடிவில் அந்த சந்ததியில் இந்த இருவரையும் தவிர வேறுயாரும் கானானைச் சென்றடையவில்லை.

தேவபிள்ளையே, உத்தம மார்க்கம் என்பது நமது உள்ளத்தைப் பொறுத்தது. மனதின் நோக்கத்தைப் பொறுத்தது. எந்தவிடயத்திலும் மனநோக்கு சரியாயிருந்தால் நாம் ஏன் மனிதருக்குப் பயப்படவேண்டும்? சிலசமயம் உலகம் உடனடியாக நம்மை ஏற்றுக்கொள்ளாமற்போகும். குற்றங்கள் சுமத்தும். நல்ல நோக்கோடு நாம் செய்யும் உதவிகள், கொடுக்கின்ற நல்ஆலோசனைகள் கூட நமக்கே தீமையாக திரும்பக்கூடும். ஆனாலும், 'நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள். உத்தமனுக்குக் கர்த்தர் துணை.' (2நாளா.19:11) வாழ்க்கையில் சரி பிழைகள் வரும். சோதனைகள் வரும். தீமை நம்மைத் தாக்குவதுபோலத் தெரியும். ஆனால் உண்மையை ஒத்துக்கொண்டு உத்தமத்திலே நிலைத்திருப்போமானால் நாம் யாருக்கும் பயப்படத்தேவையில்லையே. பிழையற்ற வாழ்வு வாழுவது கடினமாக இருக்கலாம். ஆனால் கிறிஸ்துவினால் மன்னிப்புபெற்ற வாழ்வு வாழலாமே! நாம் ஜீவிய பரியந்தம் தேவனுக்கு முன்பாக உத்தமமாய் ஜீவிப்பதற்கு அது ஒன்றுபோதுமே! கர்த்தர் நமக்கு துணை நிற்பார். போகவேண்டிய நித்திய வீட்டிலே அவரே நம்மைக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்.

"பிதாவே, நீர் என்னை மன்னித்திருக்கிறீர். அதை உணர்ந்து முதலாவது என் உள்ளத்தில் உமக்கு முன்பாக உத்தமமாய் ஜீவித்து என் வாழ்வில் உம்மைக் கனப்படுத்த என்னை வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

5

புதன்

வாசிப்பு: 1பேதுரு 3:12-18

# தேவ நீதி

'கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்?
...உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து...' (சங்கீதம் 15:1,2)

'நம்மைச் சுற்றிலும் அநீதி நிறைந்திருக்கும் இந்த நாட்களில் நீதியை நடப்பித்து என்னவாகப்போகிறது? நீதி செய்தால், அல்லது நீதியின்படி நடந்தால் இவ்வுலகில் நாம் வாழத்தான் முடியுமா?' வாழ்வில் பல இன்னல்களைச் சந்தித்த ஒருவரின் உள்ளத்திலிருந்து எழும்பிய பெருமூச்சின் வார்த்தைகள்தான் இவை. உண்மைதான், அநீதி நிறைந்த இவ்வுலகில் நீதியின் பாதையில் நிற்பது கடினம். ஆனால், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், இவ்வுலகத்தில் இருந்தாலும் வாழ்ந்தாலும் நாம் உலகத்தார் அல்ல என்று ஆண்டவர் சொல்லியுள்ளார். நாம் வித்தியாசமானவர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகள். அப்படியெனில் தேவனுடைய நீதி நமது வாழ்வில் வெளிப்படத்தான்வேண்டும். தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் நீதி, உலகம் எதிர்பார்க்கும் நீதியிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்டது. அந்த நீதியின்படி வாழவும், அதனை வாழ்வில் நடப்பிப்பதும் சாத்தியமா?

சாத்தியமா இல்லையா என்பதை சிந்திக்க முன்னதாக அந்த தேவநீதி என்பது என்ன என்பதை சிந்திக்கவேண்டும். 'பழைய உடன்படிக்கையில், தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதே நீதியாகக் கருதப்பட்டது. ஆனால் புதிய உடன்படிக்கையில், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவர்களாயிராமல், தேவனால் உண்டாயிருக்கும் தேவநீதியையே நாம் அடைந்திட வேண்டுமென அழைக்கப்பட்டிருக்கிறோம் (பிலி.3:9). புதிய உடன்படிக்கை கூறும் தேவநீதி, கிரியைகளில் மாத்திரம் காணப்படாமல் நமக்குள் மறைந்திருக்கும் மனநோக்கிலும் வெளியரங்கமாகிறது. நன்மையின் நிறைவினால் நிறைந்திருப்பதே தேவநீதியாகும்.' சகரியாபூணன் அவர்களின் இந்த வார்த்தைகள் எவ்வளவு ஆழமானவை. நன்மை நமது உள்ளத்தை நிறைத்திருந்தால் நமது வெளி வாழ்வு தேவநீதியைப் பிரதிபலிப்பதாகவே இருக்கும். தேவன் செய்து காட்டிய நீதியை நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்ப்போம். ஒரு பாவமும் அறியாத கிறிஸ்துவை பாவிகளாகிய நமக்காக பலியாக ஒப்புக்கொடுத்தாரே தேவன். இந்தக் காரியத்தை உலகம் ஏற்குமா? ஏற்காது. குற்றம் செய்தவன்தான் தண்டனை பெறவேண்டும் என்பது உலகநீதி. அந்த நீதி சிலசமயம் குற்றமற்றவனையும் தண்டித்துவிடுகின்ற கொடுமையும் உண்டு.

தேவபிள்ளையே, உங்களுக்கு யாரும் அநீதிசெய்துவிட்டதாக வேதனைப்படுகிறீர்களா? அந்த சம்பவத்தை தேவனுடைய கண்ணோட்டத்தில் வைத்துப் பாருங்கள். உங்கள் வாழ்விலும் நீதி வெளிப்படும்படி மனஉத்தமத்தைக் காத்துக்கொண்டு உங்கள் உள்ளத்தை நன்மையினால் நிறைத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கை வித்தியாசமாகவும் சந்தோஷமானதாகவும் மாறும்.

"பிதாவே, என் உள்ளம் நன்மையினால் நிறையட்டும். எதையும் உமது கண்களுக்கூடாகக் காண என் மனதைப் பக்குவப்படுத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
6
வியாழன்

வாசிப்பு: ஏசாயா 33:11-16

# வாழ்க்கைத் தரம்

"அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்."
(ஏசாயா 33:16)

பொல்லாதவர்கள் செழித்து வாழுவதையும், தீமை செய்கிறவர்கள் சமுதாயத்தில் பெயர்பெற்றிருப்பதையும், நீதி கிடைக்கவேண்டிய இடத்தில் அநீதி பீறிட்டுப் பாய்வதையும் அன்று மாத்திரமல்ல இன்று நாமும் கண்டும் அனுபவித்தும் வருகிறோம். இன்று, அநீதியின் கரங்களில் அகப்பட்டு வேதனையோடு நீங்கள் இருக்கலாம். ஆனால், பொல்லாதவர்களின் முடிவு என்னவென்பதை வேதம் நமக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. ஆகவே, மனம்சோர்ந்துபோக வேண்டாம். இன்னொருவர் கொடுத்த லஞ்சத்தினால், தமக்கு கிடைக்கவேண்டிய வேலையை இழந்துவிட்டவர்கள் எத்தனைபேர்! அப்படிப்பட்ட தவறுகளுக்குள் தள்ளப்பட்டுப் போகும் சோதனைகள் நமக்கும் வரலாம். அந்த தருணங்களில் தேவ நீதியை நினைந்து ஜாக்கிரதையாய் இருப்போம்.

தேவபிள்ளைகளுக்கென்று ஒரு வாழ்க்கைத் தரம் உண்டு. அது தேவனுடைய தரமே தவிர, இந்த உலகம் எதிர்பார்க்கும் தரம் அல்ல. நடப்பது அநீதி என்று தெரிந்தாலும் பிறரோடு சேர்ந்து நின்றுதான் ஆகவேண்டும் என்ற தருணங்களில் என்ன செய்வீர்கள்? தேவன் எதிர்பார்க்கும் தேவவார்த்தைக்குள் அடங்கிய கிறிஸ்தவ தரத்திற்கு புறம்பாக, அதிகமானோர் நிற்கும்பக்கம்தான் சரி என்ற நிலைவந்தால் என்ன செய்வீர்கள்? தவறான வார்த்தைகளைக் கொட்டி வேகமாக கோபத்தைத் தீர்த்துக்கொள்ளும்போது என்ன செய்வீர்கள்? தவறான வழியானாலும் ஆதாயம் வரும் என்ற நிலை தோன்றுமானால் என்ன செய்வீர்கள்? லஞ்சம் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றபோது என்ன செய்வீர்கள்? போரின் கொடூரத்தினால் எதிரிமீது ஏற்படும் வெறுப்பினால் தவறான யோசனைகளுக்கும் பேச்சுக்கும் செவிகொடுக்க நேர்ந்தால் என்ன செய்வீர்கள்? தீமையை வேடிக்கைபார்த்து ரசித்து உணர்வற்றுப்போகும் அபாயம் ஏற்படுமானால் என்ன செய்வீர்கள்? இவை யாவும் மனித தர்மம் இயல்பாகவே வெளிப்படவேண்டிய தருணங்கள். இவற்றிலேயே நாம் நீதியின் எல்லையைத் தாண்டுவோமானால் சத்துருவை நேசிப்பது எப்படி? நீதியினிமித்தம் வரும் துன்பங்களிலும் பொறுமையைக் காத்துக்கொள்வது எப்படி? தேவன் எதிர்பார்க்கும் வாழ்க்கைத் தரத்தை வெளிப்படுத்துவது எப்படி?

தேவபிள்ளையே, நம்மை நாமே ஆராய்ந்துபார்ப்போம். இன்று லஞ்சம் கொடுக்கக்கூடாது என்ற அறிவு நமக்குண்டு. ஆனாலும் வேறுவிதங்களில் அந்த தாகத்தைத் தீர்த்துக்கொள்ள எத்தனிக்கிறோம். இதுவேண்டாம். தேவன் தாம் எதிர்பார்க்கும் வாழ்க்கைத் தரத்தை வெளிப்படுத்துகிறவனை உயர்ந்த இடங்களில் வைப்பேன் என்கிறார். நாம் எப்படி?

"பிதாவே, இவ்வுலக தரத்தில் மூழ்கியிருந்த என் கண்களைத் திறந்தீர். எவ்வேளையும் உமது நீதியைவிட்டு வழுவி விடாதபடி காத்துக்கொள்ளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகஸ்**
**7**
**வெள்ளி**

வாசிப்பு: மத்தேயு 5:1-12

# துன்பத்தில் இன்பம்

'நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது.' (மத்தேயு 5:10)

'என் காரியாலயத்திலே தொலைந்துபோன பணத்திற்கு நான்தான் பொறுப்பு என்று என்னை பிரச்சனைக்குள் தள்ளிவிட்டார்கள். இதிலே எனக்கு சம்மந்தம் இல்லை என்பதை அறிந்தும் ஏன் என்னை பிரச்சனைக்குட்படுத்தினீர்கள் என்று மேலதிகாரியிடம் கேட்டேன். அதற்கு அவர், என் கையை இறுக்கமாகப் பிடித்து, நீ கிறிஸ்தவன். உன் சத்துருவையும் நேசிக்க அறிந்திருக்கிறவன். ஆகையால் இந்த தவறை நீ ஏற்றுக்கொண்டு என்னைக் காட்டிக்கொடுக்க மாட்டாய் என்று நம்பித்தான் உன்மீது இக்குற்றத்தைச் சுமத்தினேன்.' என்று மேலதிகாரி அவரிடம் கூறியதாக ஒருவர் தன்னுடைய அனுபவத்தை என்னுடன் பகிர்ந்துகொண்டார். இது வேடிக்கையாக இல்லையா?

'நீதியினிமித்தம் துன்பப்பட்டால் நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்' என்று பேதுரு எழுதுகிறார். அது என்ன நீதி? ஆம், கிறிஸ்துவே நமது நீதி. ஆக, அவர் வழிநடக்க முயற்சித்தாலே போதும்; இந்த உலகம் தனது நீதியின்படி நம்மை எதிர்க்கத்தான் செய்யும். ஆனால், ஆண்டவரோ, என்னிமித்தம் துன்பப்பட்டால் சந்தோஷப்பட்டு களிகூருங்கள் என்றார். அது என்ன? ஆம், கிறிஸ்துவினிமித்தம், அவருடைய நீதியினிமித்தம் வரும் துன்பங்கள் எதுவுமே நமக்குத் தீமைக்குரியவை அல்ல. ஏனெனில், உலகம் தரும் பலன்களைத் தவிர்த்து பரலோக பலனை நோக்கிப் பார்க்க அவை நமக்கு உதவுகிறது. கிறிஸ்துவின் மீது நமக்கிருக்கும் மேலோட்டமான நம்பிக்கையை அகற்றி, அவரோடு நம்மை நெருக்கமாக இணைக்கிறது. சகிப்புத்தன்மையிலும் கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்திலும் நம்மை ஊன்றிக் கட்டியெழுப்பி, கிறிஸ்துவின் சாட்சிகளாக நிறுத்துகிறது.

தேவபிள்ளையே, இதை எழுதுவதும் பிரசங்கிப்பதும் வெகு இலகு. ஆனால் முகங்கொடுப்பது கடினம். ஏனெனில் பிரச்சனைகள் தாக்கும்போது ஒரு விடயத்தை நாம் மறந்துவிடுகிறோம். "நமக்கு வரும் துன்பம்தான் நாம் நீதியின் பாதையில் நிற்கிறோம் என்பதற்கு நிரூபணம்." இதற்கு வேதாகம பக்தர்களோடு, நமக்கு முன்னே வாழ்ந்துபோன ஏராளமான தேவபிள்ளைகளின் வாழ்வும் சாட்சி. இவ்வுலகம் நம்மைத் துன்புறுத்தலாம். ஆனால், 'உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானின் சந்தோஷத்தில் பிரவேசி' என்று கர்த்தர் நம்மைத் தம்மிடம் சேர்த்துக்கொள்ளும் நாள்வரும்போது நாம் என்ன சொல்லுவோம்? நீதியினிமித்தம் அநீதியின் கொடுமையை அனுபவிக்கும் தேவனுடைய பிள்ளையே, உன் கடினபாதையில் உன்னை ஆற்றவல்லவர் ஆண்டவர் ஒருவர் மட்டுமேதான். அவரும் அவ்வழியில் துன்பப்பட்டவர். ஆகவே, பொறுமையோடு சகித்துக்கொள். கர்த்தர் பெலன் தருவார். நீதியினிமித்தம் நீ அனுபவிக்கும் எந்தத் துன்பத்தின் முடிவும் உனக்குத் தீமையாக இருக்காது.

"பிதாவே, மனம்சோர்ந்திருந்த என்னைத் தேற்றினீர், நன்றி. எந்தத் துன்பத்திலும் இறுதிவரையிலும் உம்மை விடாமல் பற்றி நிற்க பெலன் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
8
சனி

வாசிப்பு: ரோமர் 8:25-32

# எனக்குத் தீமையா?

"நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்?" (1பேதுரு 3:13)

"60வயது நிரம்பிய நான், நேர்மையாய் சொல்லும் சாட்சி என்னவெனில், 'என் முழு ஜீவியத்திலும் ஒருவர்கூட எனக்குத் தீமைசெய்வதில் ஜெயம்பெற முடியவில்லை' என்பதுதான். அநேகர் முயற்சித்தார்கள் என்பது உண்மை. ஆனால் அவைகள் அனைத்தும் என்னுடைய நன்மைக்காகவும் என் ஊழிய நன்மைக்காகவும் மாத்திரமே கிரியை நடப்பித்தன. ஆகவே அவர்களுக்காக தேவனை ஸ்தோத்தரிக்க முடிகிறது." இப்படியாக தனது 60ம் வயதில் எழுதிய புத்தகமொன்றில் சகரியா பூணன் அவர்கள் மனந்திறந்து எழுதியுள்ளார். இவரைப்போல நம்மாலும் சொல்லமுடியுமா?

"தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களுக்கு..." (ரோமர் 8:28) நமக்கு மிகவும் பிடித்தமான இந்த வசனத்தில் இந்த 'அழைக்கப்பட்டவர்கள்' என்பவர்கள் யார்? தமது ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்திற்குப் புறம்பாக இப்பூமியில் எந்த இலட்சியமும் சிந்தனையும்கூட இல்லா தவர்கள்தான் இவர்கள். நாம் அப்படியாக வாழுகிறோமா? வாழும்போதுதான் இந்த வாக்கு நமக்குரியது. மாறாக, நமக்கென்று சுயநோக்கங்களையும் திட்டங் களையும் கொண்டவர்களாய், நமது விருப்பங்களை எப்படியாவது நிறைவேற்றி விடவேண்டும் என்று துடிப்பவர்களாய் நாம் இருப்போமானால், இந்த வாக்கு நமக்குரியது அல்ல. இதை நாம் உரிமைகொண்டாடி ஜெபிக்கவும் முடியாது. மாறாக, தேவசித்தத்தில் நாம் முழுவதுமாக மூழ்கி இருப்பது மெய்யானால், இவ்வுலக வாழ்வில் தீமைபோலத் தெரிகிற சந்தர்ப்பங்களில், அல்லது தற்சமய மாக நேரிடும் தீமைகளில் மாத்திரமல்ல, உலகம் நன்மை என்று காணுகிற சந்தர்ப்பங்களிலும், மனுஷர் நமக்கு நன்மை என்று செய்கின்ற காரியங்களிலும் கூட 'சகலமும் நன்மைக்கு ஏதுவாக இருக்கும்' என்ற வாக்கு கிரியை செய்வ தால், அவை யாவும் நமக்கு மிக அருமையானதாகவே வந்துமுடியும் என்பதில் சந்தேகமே இல்லை.

தேவபிள்ளையே, இன்று உன் வாழ்க்கையின் நெருக்கமான நிலை யிலே மனுஷரையோ தேசத்தையோ நீ குறைசொல்லிக்கொண்டு இருக்கலாம். அது தாங்கமுடியாத துயராகவும் இருக்கலாம். ஆனால் நீ தேவனுடைய பரிபூரண சித்தத்திற்குள் இருக்கிறாயா என்பதுதான் முக்கியம். அப்படி இருப்பது உண்மையானால் கலங்காதே. எந்தத் துயரத்திலும் நம்மை ஆறுதல் செய்கிற வர் ஆறுதல் மாத்திரமல்ல, உன் இக்கட்டினூடாக உனக்கு நன்மையையும் தந்தருளுவார். ஆகவே, உன் வேதனைக்கு யார் காரணமோ அவர்களுக்காக நீயும் கர்த்தரை ஸ்தோத்திரிக்கலாம் அல்லவா!

"பிதாவே, உமது சித்தத்திற்கு வெளியே நிற்கும்போதுதான் எனக்கு இவ்வுலகில் தீமைகள் ஏற்படுகின்றன என்பதை உணர்த்தினீர். ஸ்தோத்திரம். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

9

ஞாயிறு

வாசிப்பு: 1பேதுரு 3:12-18

# எனக்கு எதிரி யார்?

'நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்?' (1பேதுரு 3:13)

தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக முடியும் என்பது வேதவாக்கு. இன்னும் சற்று மேலான நன்மையும் நமக்குண்டு. ரோமர் 8:28ல் வாஞ்சைகொண்ட நமக்கு இப்படியும் ஒரு வசனம் இருப்பது தெரியுமா? அதாவது, 'நாம் நன்மை செய்கிறவர்களாக இருந்தால்' எந்தவொரு மனிதனும் நமக்குத் தீமை செய்யவே முடியாது. இதுவும் வேதவாக்குதான்.

கிறிஸ்துவை வெறுக்கும் ஒரு சகோதரனுக்காக பாரப்பட்டு ஜெபித்து வந்தாள் ஒரு சகோதரி. அவன் நிமித்தம் பல பிரச்சனைகளைச் சந்திக்க நேர்ந்த போதும் தன் ஜெபத்தை அவள் விடவில்லை. இப்படியிருக்கும்போது அவன் ஒரு பெரிய ஆபத்திலே அநியாயமாக சிக்கிக்கொண்டான். இதற்குக் காரணமானவர்களில் கோபப்படாமல் இருக்கலாமா? என்றாலும், எப்படியாவது அவனைக் காப்பாற்றிவிட எண்ணிய அவள், அதிகாரிகளிடம்போய் தன்னையே பணயம் வைத்து அவனை விடுவித்தாள். நடந்தது என்ன? அந்த சகோதரன் எந்த வேதத்தை வெறுத்தானோ, அந்த வேதத்தையே தற்போது வாசிக்கிறான். எந்த இயேசுவைத் தேட மறுத்தானோ, 'அவரிடம் எனக்காக ஜெபிக்கிறவர்களுக்கு நன்றி' என்று சொல்லுகிறான். இப்போ அந்த சகோதரி சொல்லுவது என்ன? இந்த இக்கட்டிலே நாம் மாட்டிக்கொள்ள காரணமாயிருந்தவர்களுக்காக நன்றி என்பதுதான்.

நம் இருதயத்தை நன்மைகளினால் நிறைத்திருப்போமானால், எந்த ஒரு மனுஷனோ பிசாசோ நமக்கு தீமை செய்யவேமுடியாது. இதுவே மெய் வாக்கு. "மற்றவர்கள் தனக்குத் தீங்கு செய்துவிட்டார்கள் என்று எந்தவொரு கிறிஸ்தவன் குறைகூறுகிறானோ, அப்போதெல்லாம், 'நான் தேவனில் அன்புகூரவில்லை. நான் தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்படவில்லை. நான் நன்மை செய்ய முயற்சிக்கவில்லை' என்பதையே அவன் அறிக்கையிடுகிறான்" என்று சகரியா பூணன் அவர்கள் எழுதியுள்ளார். ஒரு உண்மையை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நமக்குத் தீமை செய்யத்தக்க ஒரே நபர் நாமேதான். நாம் பிறரிடம் உண்மையற்றவர்களாய் நடக்கும்போதும், பிறர்மீது குற்றம் சுமத்தி நீதி விசாரிக்கிறவர்களாய் நாம் மாறும்போதும், நாம் ஊகிக்கின்ற விடயங்களை பிறருடன் பகிர்ந்துகொண்டு அதற்கு உயிர்கொடுத்து பிறருடைய நற்பெயருக்கு இழுக்குக் கொண்டுவரும்போதும், நமது ஆத்திரங்களை நமக்கு விருப்பமானபடி செயற்படுத்தும்போதும், தீரவிசாரியாமல் காரியங்களை நடைமுறைப்படுத்தும் போதும், மிக முக்கியமாக அடுத்தவனுக்கு பாடம் புகட்டுவதாக எண்ணி சில முயற்சிகளை எடுக்கும்போதும், நடப்பது என்ன? நமக்கு நாமேதான் தீமையை வருவித்துக்கொள்கிறோம். நானே எனக்கு எதிரியா? சிந்திப்போம்.

"பிதாவே, எனக்கு நானே எதிரியாக மாறாதபடிக்கு, என்னுள்ளத்தை நன்மைகளினால் மாத்திரம் நிறைத்துக்கொள்ள அடியேனுக்கு கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
10
திங்கள்

# தேமேத்திரியு

"கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்?
...மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே." (சங்கீதம் 15:1,2)

கர்த்தருடைய கூடாரத்திலே தங்குகிறவன் உத்தமன், நீதியை நடப்பிக்கிறவன் மாத்திரமல்ல, மனதார சத்தியத்தைப் பேசுகிறவனாகவும் இருக்கவேண்டும். உண்மை பேசுவது சரி, ஆனால் அது என்ன, மனதார பேசுவது? ஆம், மனதில் வேறு நினைவுகளை ஒளித்துவைத்துக்கொண்டு வெளிவாழ்விலே உண்மையுள்ளவர்கள் போல பேசுவது தவறு. முதலாவது நமது மனது சுத்தமாயிருக்கவேண்டும். சுத்தமான எண்ணங்களால் மனது நிறைந்திருக்கவேண்டும். சத்தியம் மனதில் இருக்கவேண்டும். தவறு என்று அறிந்தால் அதை ஏற்றுக்கொண்டு சரிப்படுத்தவேண்டும் என்ற உணர்வு நமக்கு அவசியம். சமாளித்து நடப்பது, நான் மனுஷன்தானே என்று சாட்டுச் சொல்வது, இவை நமது உள்வாழ்வைக் கறைப்படுத்தும். நமது இருதயம் சுத்தமாயிருந்தால் பேச்சும் சுத்தமாய் இருக்கும். பேச்சில் சுத்தத்தைக்காட்டி நடித்தாலும், அடுத்த மனுஷன் நமது பேச்சில் ஏமாந்துபோனாலும், நமது தேவன் உள்ளத்தைப் பார்க்கிறவர், அவர் நமது மனதின் எண்ணங்களையும், அவற்றின் தோற்றங்களையும் அறிவார்.

தேவன் தம்முடைய பிள்ளைகளை தனித்தனியே அறிந்துவைத்திருக்கிறவர் என்பதற்கு பரிசுத்த வேதம் அநேகச் சான்றுகளைத் தருகிறது. அதில் ஒன்று வம்சஅட்டவணை. பெயர் பெயராக எழுதிவைத்துள்ள பட்டியல்களில், நாம் அதிக சிரத்தை எடுக்காத பல பெயர்களும் எழுதப்பட்டுள்ளது. அதில் நன்மைக்குப் பெயர்பெற்றவர்களும் உண்டு; தீமைக்கு உதாரணமானவர்களும் உண்டு. இப்படியாக நாம் அதிகம் கவனம் எடுக்காத ஒரு மனுஷன்தான் தேமேத்திரியு என்பவன். இவன் அப்போஸ்தலர் 19:24ல் எழுதப்பட்டுள்ள கலகம் விளைவித்த தெமேத்திரியு அல்ல. அவனுக்கு முற்றிலும் வேறுபட்டவன் இந்த தேமேத்திரியு. இவன் யார்? யோவானுடைய கடிதத்தை காயுவுக்கு எடுத்துச் சென்றவன் என்று இவனைக்குறித்து நம்பப்படுகிறது. இவனைக்குறித்து ஒரேயொரு வசனமே எழுதப்பட்டுள்ளது. இவன் யோவானினாலே நற்சாட்சிபெற்றவன். எதிலே என்று பார்த்தால், சத்தியத்தால் நற்சாட்சிபெற்றவன். இதனை இன்னொரு வகையிலே சொன்னால், சத்தியத்தைக் குறித்து, உண்மைத்துவத்தைக் குறித்து பேசுவதென்றால் இந்த தேமேத்திரியுவை உதாரணமாகப் பேசலாம் என்று கூறலாம். இதற்கு யோவான் தானும் சாட்சி என்று எழுதுகிறார்.

பார்த்தீர்களா? வேதத்திலே ஒரேயோரு வசனத்திலே வருகிற இந்த மனுஷன் உண்மைத்துவத்துக்கு ஒரு உதாரண புருஷனானான். எப்படி? அவன் உள்ளும் புறம்பும் சத்தியத்தால் நிறைந்திருந்தான். அதற்கு காரணம் தேவனுடைய சத்தியம் அவன் வாழ்வை நிறைத்திருந்ததே. நமது காரியம் என்ன?

"பிதாவே, உள்ளும் புறம்பும் உமது சத்தியத்தால் என்னை நிரப்பும். உண்மையில் நிலைத்திருந்து மனதார சத்தியத்தைப் பேச அருள்தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

11

செவ்வாய்

வாசிப்பு: யாக்கோபு 3:6-12

# சாவுக்கேதுவான நாவு

'அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், ...தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.' (சங்கீதம் 15:3)

கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்திலே வாசம்பண்ணுகிறவன் யார்? நடத்தையில் செய்கையில் மனதில் மாத்திரமல்ல, அவனுடைய நாவிலும் சுத்தம் வேண்டும். ஒரு தனிமனிதனை, குடும்பத்தை, ஒரு சாம்ராஜ்யத்தைக்கூட கவிழ்த்துப்போட கவனமில்லாமல் பேசுகின்ற ஒரு சொல் போதும். வார்த்தை சிந்தனையில் இருக்கும்வரை அதற்கு வல்லமையில்லை. ஆனால் அதே வார்த்தை நாவினால் வெளிவரும்போது அது எத்தனை வல்லமைமிக்கது தெரியுமா! ஒரு கூரிய வாள் செய்யமுடியாத வேலையை நமது நாவு செய்யவல்லது என்பதை நாம் உணருவதில்லை. அத்தனை வல்லமைமிக்க நாவு அடுத்தவனை மாத்திரமல்ல, நமது வாழ்வையும் அழித்துப்போடும் என்பதைக் குறித்து நமக்கு கவலையே இல்லை. எப்படி என்று கேட்கிறீர்களா? பிறரைக்குறித்து நாம் பேசுகின்ற பேச்சு, பிறரைக்குறித்து பிறர் சொல்லும் தவறான பேச்சை எவ்வித சிந்தனையுமின்றி ஆமோதித்து, நாம் மேதாவிகள்போல நமது கருத்துக்களை எடுத்து சொல்லி, அந்த தவறான பேச்சை அடுத்தவனுக்கும் பரப்பும்போது, வாழ்வில் இழக்கக் கூடாத பெரிய பாக்கியத்தை நாம் இழந்துபோகிறோம் என்பது நமக்குத் தெரிவதில்லை. ஆம், இதனால் கர்த்தருடைய கூடாரத்தில், அவருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணும் பாக்கியத்தை நாம் இழந்துபோகிறோம்.

நேருக்கு நேர் பேசுகின்ற பேச்சு வேதனையைக் கொடுக்கும் என்றால் புறங்கூறுதல் ஏற்படுத்துகின்ற பாதிப்பு மிகவும் பயங்கரமானது. அது சாவுக்கேதுவான அழிவையே கொண்டுவந்துவிடும். அதேசமயம் புறங்கூறும் நமக்கும் அது பாரிய அழிவைக் கொண்டுவரும். ஏன் தெரியுமா? 'புறங்கூறுகிறவர்களுமாய் இருப்போர், ....மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை..'(ரோம.1:30) குறித்து பவுல் எழுதியிருப்பதை நம்மில் எத்தனை பேர் அறிந்திருக்கிறோம்? பிறரைக்குறித்துப் பேசுவதில் நமக்கிருக்கும் சுகமே ஒரு தனி, இல்லையா? நமது நாவை அடக்கப் பழகவேண்டும். ஆனால், 'நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது' என்று எழுதப்பட்டிருக்கிறதையே காட்டி, அடக்க முயற்சிப்பது வீண் என்று நாம் சாட்டுச் சொல்லலாம். அடக்குவதில் முழுமையான வெற்றியைப் பெறமுடியாவிட்டாலும் அதனால் வருகிற அழிவைக் குறைக்கலாமே. கர்த்தருடைய கூடாரத்தின் மகிழ்ச்சியை நாம் இழக்கலாமா? நாவை அடக்க நமக்கு உதவிசெய்ய பரிசுத்தாவியானவர் நமக்கிருக்கிறார். தேவ பிரசன்னத்தில் வாழ விரும்பினால் இன்றே அவரிடம் நமது நாவை ஒப்புவிப்போமாக. பிறரை புறங்கூறுவதை மாத்திரமல்ல, பிறரால் நாம் புறங்கூறப்படும்போதும் அவர் நம்மைத் தாங்கிக்கொள்வார்.

"பிதாவே, புறங்கூறுதலையும், பிறரைக்குறித்த நிந்தையான பேச்சைப் பேசுவதையும் என்னைவிட்டு எடுத்துப்போடும். உமது பிரசன்னத்தை இழந்துவிடாதபடி என் நாவை இன்றே ஒப்புவிக்கிறேன். அதைக் கட்டுப்படுத்தியருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

12

புதன்

வாசிப்பு: ஆபகூக் 2:15-16; ரோமர் 13:8-10

# தெரிந்தோ தெரியாமலோ...

'தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும்....'
(சங்கீதம் 15:3)

'இந்நாட்களில் யாரை நம்புவது?' இது பொதுவாக பலரால் கேட்கப்படும் கேள்வியாகிவிட்டது. நன்றாக அன்பொழுகப் பேசுவார்கள். மறுநிமிடம் மாறிவிடுகிறார்கள். ஒன்றாக சாப்பிட்டு ஒன்றாக இருக்கிறவர்களே ஒருவரையொருவர் இரகசியமாகக் காட்டிக்கொடுத்து விடுகிறார்கள். நண்பர்கள் என்று சொல்லுவார்கள்; உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார்கள். அயலார் என்றோ, அறிந்தவர்கள் என்றோ எவரையுமே அண்டி ஜீவிப்பது கடினமான காரியமாகி விட்ட ஒரு காலத்தில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நமது காரியம் என்ன?

இந்த சங்கீதத்திலே தோழன் என்பது நம்மோடு கூடவே துணையாக இருப்பவர்கள், அயலவர்கள் யாவரையும் குறிக்கும். யாராயிருந்தாலும், நமது சத்துருக்களையும்கூட ஒன்றுபோல நேசிக்கவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் இன்று நட்பு என்றும் தோழமை என்றும் கூறிக்கொண்டு ஒருவருக்கொருவர் எவ்வளவு தீங்குசெய்கிறார்கள். தோழமை என்ற பெயரில் குடிக்காதவர்களையும் குடிக்கவைக்கிறார்கள். அவர்களுக்கு ஐயோ என்று எழுதப்பட்டுள்ளது. அன்று காயீன் ஆபேலிடம் நேரிடையாக பகைமை காட்டியா கொன்றான்? இல்லையே! அப்படித் தெரிந்திருந்தால் ஆபேல் காயீனுடன் வயலுக்குச் சென்றிருக்கமாட்டானே! இன்று நாம் காயீனைப்போல ஆயுதத்தால் கொலைசெய்யத் தேவையில்லை; நமது நாவு என்ற கூரிய நாவு போதும். அதனாலே எத்தனை தோழரை சகோதரரை அயலவரை நித்தம் நித்தம் கொலைசெய்யுமளவிற்கு அவர்களுக்குத் தீங்கிழைக்கிறோம் என்பதை நாம் சிந்திப்பதேயில்லை. இதுவா, 'உன்னை நேசிப்பதுபோல உன் பிறனையும் நேசி' என்பது?

அயலவர்களுக்கோ நம்மைச் சார்ந்தவர்களுக்கோ நாம் திட்டமிட்ட தீங்கு செய்யாதிருக்கலாம். ஆனால் சில சமயங்களிலே தீங்குக்குத் துணை போகக்கூடிய சோதனைகள் வருவதைத் தவிர்க்கமுடியாதிருக்கிறது. சிலசமயம் உண்மை தெரிந்தாலும் அதைச் சொல்லமுடியாத நெருக்கங்கள் வருகின்றன. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கர்த்தர்தான் நம்மை ஞானமாக நடத்தவேண்டும். ஆனால் தெரிந்துகொண்டே தீங்கானதைச் சிந்தித்து, வார்த்தைகளால் செயல்களால் முகபாவங்களால் அடுத்தவனைத் துக்கப்படுத்தாமலாவது இருக்கலாமே. தம்மை விரோதித்தவர்களையும் நேசித்த இயேசுவின் பிள்ளைகளாகிய நமது வாழ்வு வித்தியாசமானதாக இருக்கவேண்டாமா? கர்த்தருடைய கூடாரத்தில் நாம் தங்கி வாழவேண்டுமானால் 'அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது' (ரோமர் 13:10) என்ற வார்த்தையை நாம் மறக்கவேகூடாது.

"பிதாவே, எவருக்கும் தீங்குநேரிட தெரிந்தோ தெரியாமலோ நான் காரணமாகி விடாதபடி எல்லாத் தீங்குக்கும் என்னையும் விலக்கிக் காத்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
13
வியாழன்

வாசிப்பு: அப்போஸ்தலர் 28:1-12

# யாரைக் கனம்பண்ணுகிறோம்?

'ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன். கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான்.' (சங்கீதம் 15:4)

'துதியும் கனமும் மகிமையும் உமக்கே உண்டாவதாக' என்று அழகாக ஜெபிக்கிறோம். இந்த வார்த்தை நம் வாழ்வில் எந்தளவுக்கு உண்மையாயிருக்கிறது? 'தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது' (ஏசாயா 29:13) என்று நம்மைப் பார்த்து கர்த்தர் சொல்லக்கூடாதே! அப்போ, நம் கண்கள் காண முடியாதிருக்கும் கர்த்தரை நாம் எப்படிக் கனம்பண்ணுவது?

'உமக்குப் பயந்து, உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன்' (சங்.119:63) இது சங்கீதக்காரனின் தீர்மானம். தேவ கட்டளைகளைக் கைக்கொள்கிறவன் யார்? அவனே தேவனுக்குப் பயப்படுகிற மனிதன். அப்படிப்பட்டவனை உலகம் அடையாளம் காணாது; கனம்பண்ணாது. ஏனெனில் அவன் இந்த உலகத்தானாய் இருக்கமாட்டானே. அப்படியானால், உலகில் கனம்பெற்றவன் யார்? தெய்வபயத்தில் நடக்கின்ற யாராவது கனம்பெற்றவர்கள் என்று பெயர்பெற்றிருக்கிறார்களா? எப்படிப்பட்ட துரோகிதனானாலும் பணமும் அந்தஸ்தும் உள்ளவன்தானே உலகத்தால் கனப்படுத்தப்படுகிறான். அப்போ தேவனுக்குப் பயந்து நடக்கிறவன் எங்கே? அவன் உலகத்தால் புறக்கணிக்கப்படுகிறான். ஆக, உலகம் அவனை மாத்திரமல்ல, கர்த்தரையும் புறக்கணிக்கிறது. அன்று மெலித்தா தீவின் மக்கள் தேவனைக் கனப்படுத்தினர். எப்படி? பவுலை விஷப்பூச்சி கடித்தபோது, இவன் கொலைபாதகன் என்றனர். ஆனால் பின்னர், நடந்த காரியங்களைக் கண்டதும் தங்கள் மனதை மாற்றிக்கொண்டு, அவர் தேவனுடைய பிள்ளை என்பதை உணர்ந்து, அவருக்கு அநேக மரியாதை செய்து, போகும்போது அநேக பொருட்களையும் கப்பலில் ஏற்றிவிட்டனர். இத்தனைக்கும் பவுல் ஒரு கைதி என்று அவர்களுக்குத் தெரியாதா என்ன? ஆனாலும் அவர்கள் பவுலைக் கனப்படுத்தினர். அதாவது அவர்கள் கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய கனத்தைச் செலுத்தினர்.

தேவபிள்ளையே, நாம் எழுந்து மரியாதை கொடுக்க ஆண்டவர் நம் மத்தியில் இல்லை. ஆனால் கர்த்தருக்குப் பயந்தவர்கள் அவர் வார்த்தையின் வழியில் நடக்கிறவர்கள் இன்றும் நம்மிடம் இருக்கிறார்கள். அவர்களைக்கண்டும் காணாதவர்களாய் இருப்பது ஏன்? அவர்களால் நமக்கு காரியம் ஆகாமல் இருக்கலாம். ஆனால் கர்த்தருடைய கூடாரத்தில் நமக்கு ஆறுதல் கிடைக்குமே! இவ் உலகத்தைத் திருப்திப்படுத்துகின்றவனோடு நாமும் கைகோர்த்து, வாழுவோமானால் நாம் எப்படி கர்த்தருடைய கூடாரத்தில் தங்குவோம்?

"கர்த்தாவே, ஆகாதவர்களோடு அல்ல, உமக்கு பயந்தவர்களைக் கனம்பண்ணி உமக்கு மகிழ்ச்சி தரும்படி என்னை நீரே நடத்தும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
**14**
வெள்ளி

வாசிப்பு: ஆதியாகமம் 24:1-9; 26-27

# ஆணையிட்டால் தவறாதே!

'ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்.' (சங்கீதம் 15:4)

தம்பியின் மகளுடைய திருமணத்திற்கு பண உதவி செய்வதாக ஒரு அண்ணன் தம்பிக்கு உறுதி கூறியிருந்தார். அதேசமயம் எதிர்பாராமல் அண்ணனின் மகளுக்கும் விவாக ஒழுங்கு வந்துவிட்டது. எனினும் அந்த அண்ணனோ, தனது மனைவியின் கோபத்திற்குப் பயப்படாமல், தான் சொன்னபடியே முதலில் தன் தம்பி மகளின் விவாகத்தை நிறைவேற்றினார். இது நடந்து சில தினங்களுக்குள் அண்ணனுக்கு ஒரு தபால் வந்தது. 'நீ என் நண்பனாய் இருந்திராவிட்டால் இன்று நான் இல்லை. இது என் சிறிய அன்பளிப்பு மாத்திரமே' என்று சொல்லி, அவர் எவ்வளவு பணத்தை தன் தம்பிக்கு ஆணையிட்டபடி கொடுத்திருந்தாரோ, அவ்வளவு பணத்திற்குரிய காசோலையை அண்ணனுக்கு அனுப்பியிருந்தார்.

ஆணையிடுவது மிக இலகு. அதை நிறைவேற்றப் போகும்போதுதான் நாம் சோதிக்கப்படுகிறோம். அந்த சமயம் பார்த்து நமக்கு ஒரு இக்கட்டு வரும்; அல்லது, சங்கடங்கள் ஏற்படும். சிலசமயம் நமது மனதும் மாறிவிடுகிறது. சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி உறுதிகூறிவிடுகிறோம். பின்னர் வெகு சாமர்த்தியமாக நழுவிவிடுகிறோம். அப்படியானால் ஆணையிட்டதில் மாறாமல் இருக்க என்ன செய்யலாம்? அன்று ஊழியனாகிய எலியேசர் ஆபிரகாமுக்கு ஒரு ஆணையிட்டு கொடுத்தார். ஆபிரகாமின் இனத்தாரிடம் போய் மகன் ஈசாக்கிற்குப் பெண் கேட்க வேண்டும்; அந்தப் பெண்ணை அவர் கானானுக்கு அழைத்து வரவேண்டும். எலியேசரும் அப்படியே ஆணையிட்டார். தன் எஜமானுக்கு மறுப்பு தெரிவிக்க முடியாததினாலே எலியேசர் ஆணையிட்டுக் கொடுத்தாரா? அல்லது, ஏதோ முயற்சி செய்வோம்; கிடைக்காவிட்டால் ஏதாவது சமாளிப்போம் என்று நினைத்தாரா? இல்லை. அப்படியானால் நிறைவேற்றுவேன் என்ற நிச்சயம் எலியேசருக்கு எப்படி வந்தது? '...எனக்கு ஆணையிட்டவருமான வானத்திற்குத் தேவனாகிய கர்த்தர்... தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்' என்று ஆபிரகாம் சொன்னார். தன் எஜமானுக்கு ஆணையிட்ட அந்த தேவன், தமது ஆணையில் மாறாதவர் என்பதை அறிந்திருந்த எலியேசர், தான் தனது எஜமானுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றவும் வல்லவர் என்பதையும் நம்பினார்.

தேவபிள்ளையே, ஒருவருக்கு உறுதிமொழி கொடுக்கும்போது, ஒரு தரத்திற்கு இருதரம் யோசி. உனக்கு ஆணையிட்ட தேவன் தாம் இட்ட ஆணையில் எவ்வளவு மாறாதவராய் இன்றும் இருக்கிறாரோ, அவ்வாறே நீ இட்ட ஆணையிலும் தவறாதிருக்க உதவி செய்வார் என்பதை நம்பு. அப்போது உன் ஆணையில் நீ தவறிவிடமாட்டாய். நஷ்டம் வந்தாலும் தவறமாட்டாய். உனக்கு வருகின்ற நஷ்டங்களை தேவன் நிறைவாக்குவார்.

"பிதாவே, ஆணையிட்டதில் வாக்குமாறாதவராகிய உம்மைப்போல, உமது பிள்ளையாகிய நானும், கொடுக்கின்ற உறுதிமொழிகளில் தவறிவிடாதபடி என்னைக் காத்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: ஏசாயா 24:1-12

ஆகஸ்
15
சனி

# வட்டியா? வட்டிக்கா?

'தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான்.' (சங்கீதம் 15:5)

பிறருக்குக் கடன் கொடுத்து உதவுவதுபோல கொடுத்துவிட்டு, செய்த உதவிக்கு கூலிபோல, திரும்பி வாங்கும்போது மேலதிகமாக வாங்கிவிடுவோர் நமக்குள்ளும் உண்டு. அடுத்தவனுக்கு வரவேண்டிய நன்மையை, பணத்தைக் கைக்கூலியாகக் கொடுத்து, தமக்கென்றோ, தமக்குப் பிரியமானவருக்கென்றோ தட்டிப்பறித்துக்கொள்ளுவோரும் உண்டு. இந்த இரண்டையுமே தேவன் வெறுக் கிறார். 'என் ஜனங்களில் ஒருவனுக்குப் பணம் கடனாகக் கொடுத்திருந்தால், .... அவர்களிடத்தில் வட்டி வாங்கவேண்டாம்.' (யாத்.22:25) என்று கர்த்தர், இப்படிக் கட்டளையிட்டது ஏன்? அவர் ஏழைகளில் கரிசனையுள்ளவர். அந்தக் கரிசனை நமக்கும் வேண்டும். பணக் கஷ்டத்தில் இருப்பவன்தானே கடன் கேட்கிறான். பின்னர் அவனை நாம் நசுக்கிப் பணம் கறக்கலாமா!

'கடனாகக் கொடுக்கிற பணத்திற்கு.... உன் சகோதரன் கையில் வட்டி வாங்காயாக' (உபா.23:19) என்று சொல்லப்பட்டாலும், 'அந்நியன் கையில் நீ வட்டி வாங்கலாம்' என்று அடுத்த வசனத்தில் இருக்கிறதே என்று சிலர் கூறுவ துண்டு. அது அன்று இஸ்ரவேலருக்குச் சொல்லப்பட்டது. ஏனெனில் இஸ்ரவேலர் வித்தியாசமானவர்களாக வாழவேண்டும் என்று தேவன் விரும்பினார். ஆனால் இன்று நமக்கு அந்நியன் யார். கிறிஸ்து, கிறிஸ்தவனுக்காக மட்டுமா இரத்தம் சிந்தினார்? நமக்கு எல்லோருமே சகோதரர்தான். நாம் வித்தியாசமானவர்கள். உலகத்தார் போகும் பாதையில் நாம் போகமுடியாது. அதேமாதிரிதான் லஞ்சம் வாங்குவதும் இருக்கும். 'இரத்தம்சிந்தும்படிக்குப் பரிதானம் வாங்கினவர்கள் உன்னில் இருக்கிறார்கள்; நீ வட்டியையும் பொலிசையும் வாங்கி... என்னை மறந்துபோனாய்' என்கிறார் எசேக்கியேல் (22:12). இது நமக்குத் தேவையா?

மேலும், வட்டி வாங்குபவன் லஞ்சம் வாங்குபவன் மாத்திரமல்ல, கொடுப்பவனும் தன்னைத் திருத்திக்கொள்ளவேண்டும். 'நான் வட்டிக்குப் பணம் வாங்குவதுமில்லை, கொடுப்பதுமில்லை. இது என் தீர்மானம். என் தேவைகளை பிறர் மூலமாகவும் தேவன் சந்திக்கிறார்' என ஒரு சகோதரி தேவனுக்கு மகிமை யாக சாட்சி சொன்னாள். தேசத்திற்கு அழிவு வரும்போது, வட்டி வாங்கியவ னுக்கு எப்படியோ, வட்டி கொடுத்தவனுக்கும் எல்லாருக்கும் சரியாக நடக்கும் (ஏசா.24:2). தேசத்தின் அழிவிற்கு இதுவும் ஒரு காரணம் தெரியுமா? வட்டிகொடுக் கிறவனும் லஞ்சம் கொடுக்கிறவனும், இன்னொருவனை பாவம் செய்யத் தூண் டும் பாவத்தைச் செய்கின்றனர். நாம் இப்படிப்பட்ட பாவத்தோடு எப்படி கர்த்த ருடைய கூடாரத்திலே தங்கிவாழமுடியும். உள்ளதில் வாழப் பழகிக்கொள்வோம். நம் தேவைகளுக்கு தேவனைச் சார்ந்திருப்போம். கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

"பிதாவே, அநியாயமாய் வாங்கியவற்றை திருப்பிக்கொடுக்கவும், உம்மையே முற்றிலும் சார்ந்து வாழவும் என்னைக் கிருபையாய் வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
16
ஞாயிறு

வாசிப்பு: 1பேதுரு 1:1-12

# நீ அசைக்கப்படுவதில்லை!

'இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.' (சங்கீதம் 15:5)

வாழ்வின் அத்திபாரமே அசைந்துவிட்டதோ என்று எண்ணுமளவிற்கு பலவித பாடுகளையும் சோதனைகளையும் சந்தித்தவர்கள் பலருண்டு. யார் யார் வாழ்வில் அசைக்கப்படுவதில்லை என்பதை தன் அனுபவங்களுக்கூடாக தாவீது அறிந்துகொண்டது ஆச்சரியப்படுவதற்கில்லை. இன்று நம் எத்தனைபேருடைய வாழ்வு அப்பப்போ அசைக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. விசுவாசத்திலே ஒரு அசைவு, மனஉறுதியிலே ஒரு அசைவு, எடுத்த தீர்மானத்திலே ஒரு அசைவு, உலகத்தைத் தள்ளி வாழவேண்டிய வாழ்விலே ஒரு அசைவு. அதுமாத்திரமல்ல, இன்று நமக்கு சவாலாக விளங்கும் தவறான, புரட்டப்பட்ட, கவர்ச்சிமிக்க வேத போதனைகளால் கவரப்பட்டு, தேவனுடனான உறவு விடுபடுமளவு ஒரு அசைவு. மறுபக்கத்தில், விசுவாச வாழ்க்கைக்கு எதிராக எழுகின்ற சட்டங்களும்கூட நம்மை அசைத்துப்போடக்கூடியதான ஆபத்துள்ளதாக இருக்கிறது.

உத்தமம், நீதி செய்கின்ற மனம், சத்தியத்தைச் சத்தியமாய் பேசுகின்ற சுத்த நாவு, உண்மையான தோழமை, அயலவன்மேல் கரிசனை, தேவபிள்ளை களைக் கனம்பண்ணுதல், ஆணையில் உறுதி, பணஆசை அற்ற வாழ்வு; இப்படி வாழுகிறவன் அசைக்கப்படமாட்டான் என்று தாவீது பாடினாரே, இது சாத்தியப்ப டக்கூடிய காரியமா? நம் சொந்த பெலத்தால் முடியாவிட்டாலும், தேவஆவியான வருடைய ஒத்தாசையாலே முடியும். அது எப்படி? 'கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடி யால் நான் அசைக்கப்படுவதில்லை'(சங்.16:8) இதுதான் தாவீது கண்ட இரகசியம். கர்த்தரை எப்போதும் நமக்குமுன்னே நிறுத்திவைத்து வாழப் பழகிக்கொண்டோ மானால், நமது குணாதிசயங்கள் மாறும். இயேசுவை அறிகிற அறிவு பெருகும். அது, தேவனுடைய வார்த்தையில் நமது வாழ்வு உறுதியாய் கட்டி எழுப்பப்பட ஏதுவாகிறது. அப்போது நமது அழைப்பில் நாம் தவறவாய்ப்பு இல்லையல்லவா! வார்த்தையில் கட்டப்படும் வாழ்வு கன்மலையின்மேல் கட்டப்பட்ட வீடு போன்றது. அதை யாராலும் அசைக்கமுடியாது.

கர்த்தரை மாத்திரமே நம்புவோம். நாம் அசைக்கப்பட்டுப் போய்விடாத படி அவர் நம்மைக் காத்தருளுவார். தளும்பலான, வழுவிப்போகின்ற, சந்தர்ப்பத் திற்கு ஏற்ப வேஷம்போடுகின்ற வாழ்வு நமக்கு வேண்டாமே. உலகையும் தேவ னையும் பிரியப்படுத்துவதுபோன்ற போலியான வாழ்வும் நமக்கு வேண்டாமே. என்ன வந்தாலும் தேவனை நம்புவோம். கர்த்தரை நம்புகிறவன் என்றென்றைக் கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல இருப்பான் என்பது வாக்குறுதி. நாம் இனி கர்த்தரையே நம்பி ஜீவிக்கத் தயாரா?

"கர்த்தாவே, உம்மை உறுதியாய் பற்றிக்கொள்ளும் மனதைத் தாரும். என்ன புயல் வந்தாலும் நான் அசையாமல் நிலைநிற்க கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: சங்கீதம் 51:1-15

ஆகஸ்
17
திங்கள்

# கூர்முனையளவு தவறு

'தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்.'
(சங்கீதம் 51:10)

வாழ்வில் அசைக்கப்படாமல் உறுதியாய் நிற்பது எப்படி என்று தெரிந்து கொண்ட தாவீதா இப்படியொரு ஜெபத்தைச் செய்தார்? 'நீதிமானுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது; அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை' (சங். 37:31) என்று பாடிய தாவீதா உறுதியான ஆவியை தன் உள்ளத்திலே புதுப்பிக்கும்படி கதறினார்? அப்படியென்ன பெரிய தவறை தாவீது செய்துவிட்டார்? அவர் செய்தது ஒரு சிறிய தவறுதான். யுத்தகாலத்திலே போருக்குப் போகவேண்டியவர், எருசலேமில் தங்கிவிட்டது ஒரு பெரிய தவறா? யோவாபை அனுப்பினார்தானே. சாயங்காலம் படுக்கையில் இருந்தது தவறா? படுக்கையில் இருந்து எழுந்தவர் உப்பரிக்கையிலே உலாவினது பெரிய தவறா?

கடந்த டிசெம்பர் மாதத்திற்கான தியானங்களில், குறிப்பிட்ட ஒரு நாளின் பக்கத்தில், அன்று செய்யப்படவேண்டிய ஜெபத்தில், ஒரு சொல் விடுபட்டிருந்ததை காலம் கடந்துதான் கண்டுகொண்டோம். அதை எழுதியவரோ, திருத்தியவரோ, திருத்தி வாசித்தவரோ அந்தப் பிழையைக் கண்டுகொள்ள தவறிவிட்டோம். பின்னர் புத்தகம் வெளிவந்தபோது, விடுபட்ட அந்த ஒரு சொல், தியானத்தையே புரட்டிப்போடுமளவுக்கு பாதகமாய் இருந்ததைக்கண்டு அதிர்ந்துபோனோம். நாம் தெரிந்து அதைச்செய்யவில்லை என்பது நமக்கு நன்றாகத் தெரியும். எந்தவொரு நாஸ்திகன்கூட அப்படி எழுதமுடியாது. விடுபட்டது இரண்டு எழுத்துள்ள ஒரு சிறு சொல்லுத்தான். கவனிக்கப்படாத இந்தச் சிறிய தவறு சத்தியத்தையே கூறுபோடுமளவு ஆபத்தைக் கொண்டுவந்துவிட்டது.

தாவீது செய்தது ஒரு சிறு தவறுதான். ஆனால் அச் சோம்பேறித்தனம், பொய், வஞ்சகம், கொலை, நல்லவன் போன்ற வேஷம் என்று பாரிய விளைவுகளை தாவீதின் வாழ்வில் கொண்டுவந்துவிட்டது. மாத்திரமல்ல, அவர் மனந்திரும்பி வந்தபோதும், அவருடைய சந்ததியில் எத்தனை பெரிய வேதனைமிக்க காரியங்கள் நடந்தது என்பதையும் நாம் அறிவோம். அதே உப்பரிக்கையிலே அவருடைய மகன் அப்சலோம் தாவீதின் மறுமனையாட்டிகளைக் கெடுத்துப் போட்ட உச்சக்கட்ட விளைவையும் நாம் அறிவோம். ஒரு கூர்முனையளவு தவறு போதும், நம் வாழ்வைக் கெடுத்துப்போட. சத்தியத்தை அறிந்தால் அது நம்மை விடுதலையாக்க நாம் இடமளிக்குமளவும் அந்த விடுதலையை நாம் அனுபவிக்க முடியாது. இன்று நமக்கு அவசியம் சுத்தமான இருதயம். சுத்த இருதயத்திற்காக இடைவிடாமல் ஜெபிப்போம். கிருபையாய் கர்த்தர் நமது இருதயத்தைச் சுத்தம் செய்யும்போது ஏற்படும் நோவுகளை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு தேவனுக்குப் பிரியமாய் வாழுவோமாக.

"பிதாவே, ஒரு கூர்முனையளவு தவறுகூட என் வாழ்வில் நேரிட்டுவிடாதபடி உணர்வுள்ள சுத்தமான இருதயத்தை எனக்குத் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
18
செவ்வாய்

வாசிப்பு: 2சாமுவேல் 11:6-25

# தவறைக் கண்டுகொண்டால்...

'உமது சமுகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.' (சங்கீதம் 51:11)

நாம் போய்க்கொண்டிருக்கும் பாதை தவறானதாக இருந்தாலும், பல வேளைகளிலும் அது நமக்கு சரிபோலத்தான் தெரியும். ஆனால், ஏதோ ஒரு கட்டத்தில், தவறு உணரப்பட்டால், நாம் என்ன செய்வோம்? செய்த தவறை மூடி மறைப்பதற்கு மேலும் தவறு செய்வோமா? அல்லது, என்ன இழப்பு வந்தாலும் அந்த இடத்திலேயே நிறுத்தி, அதைச் சரிசெய்ய முயற்சிப்போமா?

ஒருதடவை பலவித முயற்சிகளின் பின், ஒரு புத்தகம் அச்சிலிருந்து வெளிவந்தது. தற்சமயமாக அதனைத் திருப்பிப் பார்த்தபோது, சில இடங்களில் சில எழுத்துப் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டது. மிகுந்த துக்கம். ஏனெனில் ஏற்கனவே சில ஆயிரம் புத்தகங்கள் மக்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டன. ஆனால் இன்னும் சில ஆயிரங்கள் இருந்தன. ஆகவே, அதனையாகிலும் கையினால் திருத்திவிட முயற்சி எடுக்கப்பட்டது. அப்போ ஒருவர், 'ஏன் இவ்வளவு சிரமம்? அந்த சில ஆயிரங்களோடு ஆயிரங்களாய் இவற்றையும் அனுப்பிவிட்டு, பின்னர் மன்னிப்பு தெரிவித்துவிடலாமே' என்றார். இதுதான் நம்மிலுள்ள பெரிய தப்பு. தவறு நடந்துவிட்டது என்பது தெரிந்தால், அதிலேயே நிறுத்திவிட்டு அதைச் சரி செய்துவிடவேண்டும். இல்லையானால் அது பாரிய விளைவைக் கொண்டுவரும்.

தாவீதுக்கு நடந்தது அதுதான். அவர் பாவம் செய்தபின், அவருடைய உள்ளுணர்வை உலுப்பக்கூடிய ஒரு சம்பவம் நிகழ்ந்தது. தாவீதின் தந்திரத்தை உணராத உரியா யுத்தத்திலிருந்து திரும்பி வந்ததும், தன் வீட்டிற்குப் போகாமல் உண்மையுள்ள சேவகனாக தன் சேவகரோடே படுத்துக்கொண்டானே. அந்த வேளையிலாவது தாவீதுக்கு உணர்வு வந்திராதா? சவுலுக்காக, தனக்கு எதிரியாகிவிட்ட மகன் அப்சலோமுக்காக, அழுது புலம்பிய தாவீது, இவ்வளவுதூரம் உணர்வற்றிருந்தது எப்படி? அவருக்குத் தன்னுடைய பிழைதெரியாதா? தெரியும், ஆனால் அதைச் சரிப்படுத்த மனமில்லை. இதனால் பாவத்தின்மேல் பாவம் செய்யுமளவிற்கு மனம் கடினப்பட்டுவிட்டது. இறுதியில் தேவனுடைய சமுகத்திலிருந்து தள்ளப்பட்ட உணர்வினாலே வதைபட நேர்ந்தது.

தேவபிள்ளையே, நமது உணர்வு செத்தது அல்ல. நமக்கு நன்மையும் தெரியும், தீமையும் தெரியும். பாவம் ஆரம்பத்திலேயே சரிசெய்யப்படுவதுதான் நல்லது. தவறிவிட்டால், தவறு என்ற உணர்வு ஏற்படும். வெட்கம் தலைதூக்கும். உடனே, வெட்கத்தைவிட்டு தவறை சரிசெய்துவிடவேண்டும். இல்லையானால், அதன் விளைவு மகா பயங்கரமாயிருக்கும். தேவசமுகத்தைவிட்டு விலக்கப்படும் அபாயம் எந்தவொரு மனுஷனுக்கும் வரவேகூடாது. இன்றே இப்போதே சரிசெய்யவேண்டியவற்றை சரிசெய்துவிடுவோமா!

"பிதாவே, பிழைகள் உணர்த்தப்படும் அந்நேரத்திலேயே யாவற்றையும் நிறுத்தி, அதைச் சரிசெய்துவிட மனப்பெலனை எனக்கு ஈந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

19

புதன்

வாசிப்பு: 1நாளாகமம் 28:1-10

# தோற்றங்களுமா?

'கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்.' (1நாளாகமம் 28:9)

'வீட்டில் ஒரு முக்கிய பொருள் காணாமற்போய்விட்டது. உடனே, வீடு சுத்தம்பண்ண வந்த பெண்ணின்மீது என் நினைவு திரும்பியது. அந்த உடனடி முடிவுக்கு வந்ததே பாவம்; அதிலும் மேலாக அவள் எப்படி எடுத்திருப்பாள், அவளுக்கு என்ன தண்டனை கொடுக்கவேண்டும் என்று ஒரு பெரிய திரைப்படமே மனதில் போட்டுவிட்டேன். என் நினைவிலும்பார்க்க, அதன் உள்நோக்கங்கள் மிகவும் கொடிதாயிருந்ததை உணர்ந்தபோது வெட்கப்பட்டேன். ஏனெனில் அந்த பொருளை நானே மறதியாக வேறொரு இடத்தில் வைத்திருந்ததை பின்னர்தான் கண்டுகொண்டேன்'. இப்படியாக ஒருவர் தன் அனுபவத்தைச் சொன்னார்.

முன்பின் யோசியாத எத்தனை நினைவுகள், எத்தனை உள்நோக்கங்கள், இவற்றைக் குறித்து நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சிலவேளைகளில் நினைவுகள் நன்றாயிருக்கும். ஆனால் அதன் தோற்றம் தவறானதாக இருக்கும். ஏழைகளுக்கு உணவளிக்க நினைப்பது நல்ல எண்ணம். ஆனால், தற்புகழ்ச்சிக்காக இதனைச் செய்ய நினைத்தால் அது நல்லதா? கர்த்தர் இருதய நினைவுகளை மாத்திரமல்ல, அதன் தோற்றங்களை, அதன் உள்நோக்கங்கள் யாவற்றையும் அறிகிறவர்; அவருக்கு யார், எதை, எப்படி மறைக்கமுடியும்.

இவ்விடயத்தை தாவீது கசப்பான அனுபவத்தினூடாகவே கற்றுக்கொண்டார். நாத்தான் தாவீதிடம் அனுப்பப்பட்டு, தாவீது செய்த விபசாரமும் கொலையும் வெளியாக்கப்பட்டபோது கர்த்தருக்கு மறைவான நினைவும் இல்லை; நினைவின் தோற்றமும் இல்லை என்பதை தாவீது தெளிவாகத் தெரிந்துகொண்டார். மாத்திரமல்ல, கர்த்தருக்கு ஒரு ஆலயத்தை மனதில் நினைத்த மாத்திரமே, கர்த்தர் தாவீதுடன் பேசியதையும் தாவீது நினைத்துப் பார்த்தார். ஆகவேதான், தேவனிடம் திறந்த மனதோடு வாழும்படி மகன் சாலொமோனுக்கு அவர் கற்றுக்கொடுத்தார். உத்தம இருதயத்தோடு தேவனைச் சேவிக்கும்படி ஆலோசனை கொடுத்தார். 'மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு...' (ஆதி.6:6)

தேவபிள்ளையே, நம்மை உருவாக்கினவரே கர்த்தர். அவருக்கு எதையும் மறைப்பதில் பயன் இல்லை. அத்தோடு திடீர் முடிவுகள் எடுப்பதிலும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பின்னர் நாமே வெட்கப்படநேரிடும். நமது பெலவீனங்களோடும் நம்மை ஏற்றுக்கொள்ள ஆண்டவர் ஆயத்தமாயிருக்கிறார். ஆகவே திறந்த மனதோடு தேவனண்டையில் சேருவோமா!

"பிதாவே, உமக்கு மறைவானது எதுவுமே இல்லை. என் நினைவுகளை அதன் நோக்கங்களை தோற்றங்களை நீர் அறிந்திருக்கிறீர். உமக்கு முன்னே எப்போதும் திறந்த மனதோடு ஜீவிக்க எனக்குக் கற்றுத்தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
20
வியாழன்

வாசிப்பு: உபாகமம் 8:1-6; எசேக்கியேல் 14:1-6

# இரட்டை வாழ்க்கை

...உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும்...
(உபாகமம் 8:2)

இஸ்ரவேலில் முக்கிய பொறுப்பு வகித்த பெரியவர்கள், கர்த்தரிடம் கேட்பதற்காக எசேக்கியேலின் முன்பாக உட்கார்ந்தார்கள். ஆனால் கர்த்தரோ, 'இவர்கள் என்னிடம் விசாரிக்கத் தகுமா?' என்று கேட்டார், அது ஏன்? தேவனை அறிந்து, தொழுதுகொள்ளுகிற இவர்கள் ஆலய காரியங்களில் ஊக்கமுள்ளவர் கள். தவறாமல் பலி செலுத்துகிறவர்கள். ஆனால் கர்த்தரோ அவர்கள்பேரில் வெறுப்படைந்தார். ஏனெனில், அவர்கள் இரட்டைவேஷக்காரர் என்பதை எசேக்கி யேல் அறிந்திராவிட்டாலும் தேவன் அறிந்திருந்தார். வெளியிலே தேவனைத் தொழுதுகொள்கிறவர்கள்போல வாழ்ந்தாலும், அவர்களுடைய இருதயம் தேவ னைவிட்டுத் தூரமாய் விலகியிருந்தது. நரகலான விக்கிரகங்களும் அதற்குரிய வணக்கங்களும் அவற்றின் மீதிருந்த நம்பிக்கையுமே அவர்களது இருதயத்தை நிரப்பியிருந்தது. இந்த வேஷத்தோடுதான் கர்த்தருடைய தீர்க்கனிடம் ஆலோச னைக்கு வந்திருந்தார்கள். இது தகுமா?

அந்த இஸ்ரவேலரைக் குற்றப்படுத்தி, விக்கிரக ஆராதனை கொடிய பாவம் அல்லவா என்று நியாயம் சொல்லுகிற நமது காரியம் எப்படிப்பட்டது? நாம் அந்நிய தெய்வங்களை வணங்குகிறவர்களா, இல்லையே! அந்நிய தெய்வ நம்பிக்கை கொண்டவர்களா, இல்லையே! இப்போது நாள்கூட பார்ப்பதில்லை என்றும் சொல்லலாம். ஆலய ஆராதனைகள் தவறுவதில்லை. சபையில் பெரிய பதவிவகிக்கலாம். பெருந்தொகை பணத்தைக்கூட காணிக்கையாகக் கொடுக்க லாம். ஆனாலும் நமக்குள் விக்கிரக வணக்கம் உண்டாவதற்கு வாய்ப்புண்டு. ஆம், மனிதரிடம் நற்பெயரை நாடும்போது, பேர் புகழ் சம்பாதிப்பதையே நோக்க மாய் கொள்ளும்போது, பணஆசையினால் நிறையும்போது நாம் நரகலான விக்கிரக ஆராதனைக்காரராகி விடுகிறோம். நமது இருதய ஆராதனைகளை வெளி உலகுக்கு மறைக்கலாம்; கர்த்தருக்கு மறைக்கலாமோ?

நமது இருதயம் நினைவுகளின் இருப்பிடம். அது எந்நேரமும் எதையா வது சுமந்துகொண்டிருக்கும் தன்மையுள்ளது. நாம் எதைச் சுமக்கிறோமோ, அதுவே நம்மை ஆளுகைசெய்கின்றது. அது நம்மை அடிமைப்படுத்திவிடுகிறது. இந்த இரட்டைவாழ்க்கை நமக்கு இனிவேண்டாம். நமது இருதயங்களை அறியும் வரை இந்த ஆபத்திலிருந்து நாம் தப்பமுடியாது. தங்கள் இருதயங்களைத் தாங்களே அறிந்துகொள்ளும்படிக்கு தேவன் அன்று இஸ்ரவேலரைக் கடினமான வனாந்தர பாதையில் நடத்தினார். நமக்கு வருகின்ற எந்த இடரிலும் தேவன் நமது உள்ளான வாழ்வோடு இடைபடுகிறார் என்பதை நாம் மறக்கக்கூடாது. உள்ளும் புறமும் நமக்கு கர்த்தரே தேவன் என்று சொல்லமுடியுமா?

"பிதாவே, எது நடந்தாலும் என்னவானாலும் நீரே என் தேவன், நான் உமது பிள்ளை. நீரே என் நினைவுகளை நிரப்பி என்னை ஆண்டுகொள்ளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: எசேக்கியேல் 14:6-10

ஆகஸ்
21
வெள்ளி

# நீயே உனக்குப் பொறுப்பு!

'...அவனுக்குக் கர்த்தராகிய நானே உத்தரவுகொடுத்து...'
(எசேக்கியேல் 14:7)

கர்த்தருடைய கூடாரத்தில் தங்கி வாழுவது ஒன்று; அவர் சமுகத்திலிருந்து தள்ளப்பட்டுப்போவது இன்னொன்று. பிந்தியது பயங்கரமாயிருக்கும். நமது வாழ்விலே இனி நடக்கப்போவது என்ன என்பதை அறிந்துகொள்ள யாருக்குத்தான் விருப்பமில்லை? சில குடும்பங்களில் அப்பாவுடன் நல்ல உறவில் இல்லாத பிள்ளைகள், அப்பாவிடம் விசாரிக்க அம்மாவை நாடுவதுண்டு. இப்படியே அன்றைய இஸ்ரவேலரும் தீர்க்கதரிசிகளுக்குள் தங்களை மறைத்து அவர்களை தங்களது காப்பரண்கள்போல பாவித்தனர். அவர்களுடைய இருதயம் அந்நிய தேவர்களை நாடினாலும், தங்களுக்கு என்னவாகும் என்பதையறிய, வரக்கூடிய அழிவைத் தடுக்க, அடிக்கடி தீர்க்கதரிசிகளை நாடினார்கள். அப்பாவின் விருப்பத்துக்கு மாறாக பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுகிற சில அம்மாக்களைப்போல சில தீர்க்கதரிசிகளும் தேவன் சொல்லாததைச் சொல்லி மக்களை திருப்திப்படுத்தினர். ஆனால், எசேக்கியேலோ கர்த்தருடைய வார்த்தையைத் தவிர, வேறெதையும் சொல்வதில்லை. ஆக, கர்த்தரோடு நல்லுறவில் இல்லாத மக்களுக்கு எசேக்கியேல் அல்ல, தாமே பதில் சொல்வேன் என்கிறார் கர்த்தர். ஏனெனில் அவர் அவர்களுடைய திருக்கான இருதயத்தை நன்கு அறிவார்.

தேவசித்தத்தை அறியவிரும்பினால் தேவனோடு நல்ல உறவில் இருக்க வேண்டியதுதானே! தேவபக்தியுள்ள பெற்றோர், ஊழியர், தீர்க்கர்கள் என்று அவர்கள் பின்னே மறைந்து நிற்கத் துணிவோமானால், நமது பாவத்தின் விளைவுகளிலிருந்து அது நம்மைத் தப்புவிக்காது. நமது பாவம் நம்மை தேவபிரசன்னத்திலிருந்து விலக்கிப்போடுவது உறுதி. நமது இருதயத்தில் எதற்கு முதலிடம் கொடுக்கிறோமோ, அதுவே, தேவசித்தத்தை அறியமுடியாதபடி நம்மை ஒதுக்கிப் போடும். மனச்சுத்தி இல்லாமல் தேவனுடைய விருப்பத்தை அறிய நாடுவது நல்லதல்ல. அப்படிப்பட்டவனுக்கு நானே பதில் சொல்லுவேன் என்கிறார் கர்த்தர். கர்த்தர் பதில் சொல்லுவாரானால் நம்மால் அதைத் தாங்கிக்கொள்ள முடியுமா?

தேவனோடு நமக்குள்ள உறவுக்கு நாம் ஒவ்வொருவருமே பொறுப்பு. நமக்காக இன்னொருவர் தேவனோடு உறவாயிருக்க முடியாது. நாம் பாவம் செய்திருந்தாலும்கூட உண்மையுள்ள இருதயத்தோடு கர்த்தரை நாடுவோமானால் நிச்சயமாக அவர் நம்மை மன்னித்து நடத்துவார். அதைவிட்டுவிட்டு, தேவனுக்கு மாறான நினைவுகளுடன் அவர் சித்தத்தை அறிய முற்படுவது கூடாத காரியம். மனதில் சுத்தமான நினைவுகள் இருக்குமானால், நாம் அவரது கூடாரத்தில் தங்கியிருக்கலாம். அப்போது இன்னொருவர் அல்ல, தேவனே தமது சித்தத்தை நமக்கு நேரடியாக வெளிப்படுத்துவார்.

"பிதாவே, நான் உம்மோடு நல்லுறவில் இருக்கக்கூடாதபடி என் இருதயத்திலுள்ள அழுக்குகளை இப்போதே என்னைவிட்டு அகற்றிப்போடும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
22
சனி

வாசிப்பு: எசேக்கியேல் 16:1-8

# மறக்கக்கூடாத முன்நிலைமை

'இவ்விதமாய் நீ என்னுடையவளானாய்.'
(எசேக்கியேல் 16:8)

நமக்கு நேரிடும் இடர்களுக்கும் விழுகைகளுக்கும் நாம் பல சரியான காரணங்களைச் சொல்லலாம். ஆனால் அமர்ந்திருந்து சிந்தித்தால், நாம் கடந்து வந்த பாதைகளை மறந்துபோவதுதான் நமது பல தோல்விகளுக்கு முக்கிய காரணம் என்பதை மறுக்கமுடியாது. கடந்த காலங்களில் கர்த்தர் செய்த பலத்த கிரியைகளை மறந்து, இன்றிருக்கும் சிறிய பிரச்சனைக்காக கர்த்தரை குற்றம் சொல்பவரும் உண்டு. இன்றிருக்கும் நல்ல நிலைக்கு எந்த நிலையிலிருந்து வந்தோம் என்பதை மறந்து சுயபெருமையுடன் சுய இஷ்டப்படி வாழுபவர்களும் உண்டு. இவ் இரு மனப்பாங்குமே நல்லதல்ல.

அன்றைய எருசலேம் மக்களைப் பார்த்து கர்த்தர் சொன்ன வார்த்தைகள், இன்று நமக்கும் பொருந்தும். கிறிஸ்தவர்கள் என்று நம்மைக்குறித்து நாமே பெருமை பாராட்டுகிறோமே; உண்மையாகவே தேவன் எதர்பார்க்கும் கிறிஸ்தவனாக வாழுகிறோமா? அந்தக் கிருபை நமக்கு எப்படிக் கிடைத்தது என்பதைக் குறித்து சிந்தித்து, அதற்குக் காரணரானவருக்கு சாட்சியாக ஜீவிக்கிறோமா? எசே.16:6ம் வசனத்தில், ஒரே வார்த்தை மூன்றுமுறை எழுதப்பட்டுள்ளதைக் கவனித்தீர்களா? 'உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னை..' சற்று நமது முன்நிலைமையை சிந்தித்துப் பார்ப்போம். ஒரு குழந்தை பிறக்கும்போது அதைத் தாயிலிருந்து வேறாக்கி, சுத்தமான நீரினால் கழுவி, சுத்தமான துணியினால் சுற்றி எவ்வளவு பத்திரமாகக் கிடத்தி வைப்பார்கள். 'ஆனால் நீயோ, அசுத்த இரத்தத்தோடே அநாதரவாக விடப்பட்டுக் கிடந்த குழந்தையைப்போல உன் பாவத்தில் கிடந்தாய். உன் இரத்தத்தில் கிடந்த உன்னை நான் கண்டு 'பிழைத்திரு' என்று சொன்னேன்' என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவபிள்ளையே, சற்று சிந்தித்துப்பார். கிறிஸ்தவன் என்று பெருமை பாராட்டுவதற்கு முன்னர், நமது பாவ நிலைமையோடு நம்மை யாராவது சேர்த்துக்கொண்டார்களா? நமது துயர் நிறைந்த உள்ளுணர்வுகளை யாராவது மதித்தார்களா? நமது உண்மையான தேவை என்னவென்று தெரிந்து செயற்பட்டார்களா? ஒருவேளை நமது வெளிவாழ்விலே நாம் சுத்தவான்கள்போல இருந்திருக்கலாம். ஆனால் நமது உள்வாழ்வின் இருள் நமக்கு நன்கு தெரியும். கர்த்தர் அதைக் கண்டார். அசுத்தம் என்று தெரிந்தும் தமது பரிசுத்த கரத்தாலே நம்மைச் சேர்த்துக்கொண்டு நமக்கு புதிய வாழ்வு தந்தார். இவ்விதமாகத்தான் நாம் தேவனுடைய பிள்ளைகளானோம். அவர் மாத்திரம் நம்மை உதாசீனம் செய்திருந்தால் இன்று நாம் இந்த கிருபையின் வாழ்வு வாழமுடியுமா? இதைச் சிந்தித்து மனந்திரும்பினோமானால் பல கேள்விகளுக்கு விடை கிடைத்துவிடும்.

"பிதாவே, பாவியாயிருக்கையில்தானே என்னைச் சேர்த்துக்கொண்டீர். என் முன்நிலையை மறவாமல், நன்றியோடு வாழ கிருபை செய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
23
ஞாயிறு

வாசிப்பு: எசேக்கியேல் 16:9-19

# கர்த்தர் தந்தது கர்த்தருக்கே!

'உன் அழகினாலே உன் கீர்த்தி புறஜாதிகளுக்குள்ளே பிரசித்தமாயிற்று. நான் உன்மேல் வைத்த என் மகிமையினாலே அது குறைவற்றதாய் இருந்தது...' (எசேக்கியேல் 16:14)

நீரில் மூழ்கி திணறிய நேரத்தில் யாராவது காப்பாற்றிய அனுபவம் உங்களுக்குண்டா? எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில், யாராவது காப்பாற்றி யதையாவது பார்த்ததுண்டா? தண்ணீரில் அல்ல; வாழ்வில் மூச்சுத் திணறியது போன்ற அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டதுண்டு. யாரும் என்னைக் கணக்கெடுக் காதபோது, 'நீ பிழைத்திரு' என்று என் இயேசு சொல்லி, தூக்கி நிமிர்த்தியிருக் காவிட்டால், இன்று நான் இதனை எழுதியிருக்கமாட்டேன். பாவ இரத்தத்தில் கிடந்த என்னைப் பார்த்து 'பிழைத்திரு' என்று சொன்னவர், நம் ஒவ்வொருவருக் கும் வாழ்வு தராமல் விட்டுவிடுவாரா? அவர் எல்லோரையும் நேசிக்கிறவர்.

'பிழைத்திரு' என்கிறவர் அப்படியே விட்டுவிட்டுப் போகிறவர் அல்ல. நம் பாவத்தைக் கழுவி, சுத்தம்பண்ணியவர், நம்மில் நேசம் வைக்கிறார். இரட்சிப்பின் ஆடையினால் நம்மை மூடி, தமது நற்குணங்களாகிய ஆபரணங்களினால் ஒரு மணவாட்டியைப்போல நம்மை அலங்கரித்து, நம்மில் மகிழ்ந்திருக்கிறார். தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமான வார்த்தையினாலே நம்மைப் போஷிக்கிறார். இதுவரை காணாத ஒரு அழகு நம்மில் தோன்றும். வாழ்க்கை வித்தியாசமானதாக மாறும். இதுவரை உலகிற்குப் பயந்து தலைகுனிந்து நடந்த நாம், இப்போது நமது ஆத்துமாவை இரட்சிக்க வல்லதான தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டதால் தலைநிமிர்ந்து நடக்கிறோம். முன்னர் நம்மைப் பார்த்து பழித்தவர்கள், இப்போது நம்மை நாடி வரத்தக்கதாக கர்த்தர் நம்மை ஆசீர்வதிக் கிறார். இத்தனையும் நமக்கு எங்கிருந்து வருகிறது? 'நான் உன்மேல் வைத்த என் மகிமையினாலே...' என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனால் நாமோ கர்த்தர் கொடுத்த சகலவற்றையும் எடுத்து, நமது சுய விருப்பங்களுக்காகவும், தேவ னுக்கு விரோதமான காரியங்களுக்காவும் பிரயோகிக்கிறோம், அது எப்படி?

தேவபிள்ளையே, நாம் அழிந்துபோக இருந்தபோது ஏன் என்றும் கேட் காத உலகம், நாம் தலைநிமிர்ந்து நிற்கும்போது நமது காலடியில் கிடப்பது போல நடிக்கும். நாம் அசதியாயிருந்தால், அதுவே, நம்மைத் தூக்கிவிட்ட தேவனிடமிருந்து நம்மைப் பிரித்துப்போடும் அளவுக்கு நமது கால்களையே வாரிக்கொண்டுபோய்விடும் என்பதை மறக்கவேவேண்டாம். அந்த அளவுக்கு வஞ்சகங்களும் தந்திரங்களும் நாகரீகம் என்றும் நவீனங்கள் என்றும் நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. பாவஅழுக்கை நீக்கி, தமது அழகைத் தந்தவர் இயேசு. அவர் நமக்குக் கிருபையாகத் தந்த மகிமையை அவருக்கே செலுத்தி வாழுவோமாக. நாம் எந்த சேற்றிலிருந்து காப்பாற்றப்பட்டோம் என்பதை மறவாத இதயத்தோடு என்றும் கர்த்தருக்கென்று வாழ ஜாக்கிரதையாக இருப்போமாக.

"பிதாவே, நீரே எனக்கு வாழ்வு தந்தவர். என் ஆவி ஆத்துமா சரீரத்தை உமக்கே என்றும் அர்ப்பணித்து வாழ நீரே என்னை நடத்தும், ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

24

திங்கள்

வாசிப்பு: எபேசியர் 2:1-13

# முன்நிலையை மறக்கலாமா!

'உன் சிறுவயதின் நாட்களை நினையாமற்போனாய்.'
(எசேக்கியேல் 16:22)

தாய் இறந்துபோக, தகப்பன் வேறொரு பெண்ணைக் கொண்டுவர, மகள் அநாதரவானாள். இச் சிறுபெண்ணை வேறொரு தாய் கூட்டிவந்து, தன்னுடைய பிள்ளைகளோடு சேர்த்து வளர்த்தார். படிப்பித்து, வேலையும் எடுத்துக் கொடுத்தார். உழைக்கும் பணத்துடன் சில சொத்துக்களையும் இவளுக்காக சேகரித்தார். இதைக் கேள்வியுற்ற உறவினர், அப் பெண்ணைத் தேடிவந்து, அத் தாய்க்கு எதிராக அவளைத் தூண்டிவிட்டனர். ஒருநாள் அப்பெண் அந்த தாயின் முன்பாக கடுகடுத்த முகத்தோடு வந்து நின்றாள். 'உங்களுக்கு வெட்கம் மானம் இருந்தால், என் வங்கிப் புத்தகம் சொத்து விபரங்கள் அனைத்தையும் இப்போதே தந்துவிடுங்கள்' என்று சத்தம்போட்டாள். இதைக் கேட்டு அந்தத் தாய் இடிந்து போனதை நான் நேரில் பார்த்துக்கொண்டிருந்தேன். அத் தாயும் பொறுமையோடு அவற்றைக் கொடுத்துவிட்டு, ஒரேயொரு வார்த்தைதான் பேசினார். 'மகளே, உன் சிறுவயதின் நாட்களை நீ மறந்துபோனாய்'. இன்று அந்தப்பெண், தனது கணவனைப் பிரிந்து மிகவும் கஷ்ட நிலையில் வாழுகிறாள்.

ஆண்டவரே மன்னித்து மறந்தபின், நாம் விட்டுவந்த பாவ வாழ்வைத் திரும்பிப் பார்ப்பது தவறு. ஆனால், நாம் எங்கிருந்து எந்த நிலைமையிலிருந்து வந்தோம் என்பதை மறப்பது நல்லதல்ல. அது பெருமை கர்வமென்ற வலைக்குள் நம்மை வீழ்த்திப்போடும். ஆகவேதான், அந்நியனைச் சிறுமைப்படுத்தாமலும் ஒடுக்காமலும் இருப்பீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியர்களாயிருந்தீர்கள்' (யாத்.22:21) என்று கர்த்தர் இஸ்ரவேலுக்கு எச்சரித்தார். முன்னே எப்படி இருந்தீர்கள், எப்படி யூதரினால் புறக்கணிக்கப்பட்டீர்கள், முன்னே தூரமாயிருந்த உங்களை தேவன் எப்படி தமக்கு சமீபமாக்கினார் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள் என்று பவுலடியாரும் எபேசியருக்கு எழுதியிருப்பதை இன்று வாசித்தோம். நாம் அந்தகாரத்திலிருந்துதான் வரவழைக்கப்பட்டவர்கள் (1பேதுரு 2:9) என்று பேதுருவும் முந்திய நிலைமையை ஞாபகப்படுத்துகிறார்.

தேவபிள்ளையே, நாம் இன்று தலைநிமிர்ந்து வாழும் வாழ்க்கை தேவனுடைய சுத்த கிருபையின் ஈவு. அன்று நாம் வாழ்ந்ததை மறந்துவிட்டு, இன்று அன்றைய நம்மைப்போல விடுதலையையே தெரியாத பிற மக்களை நாம் துச்சமாக எண்ணலாமா? இப் பெருமையே, நம்முடைய பல தோல்விகளுக்குக் காரணம் என்பதை நாம் சிந்திப்பதில்லை. கணவனோ, பிள்ளையோ, மனைவியோ அல்லது வேறு யாரோ அவர்களின் நிலையைப் புரிந்துகொண்டு கிறிஸ்து நம்மோடு பொறுமையாய் இருந்ததுபோல நாமும் அவர்களில் பொறுமையாய் அன்பு காட்டுவோமாக. தேவன் அவர்களையும் விடுவிப்பார்.

"பிதாவே, என் முன் நிலைமையை மறந்து, கர்வம் கொள்ளாமல், பிறரோடு எப்போதும் உமக்குள்ளான தாழ்மையோடு வாழ கிருபை தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: எசேக்கியேல் 16:15-34

ஆகஸ்
25
செவ்வாய்

# ஆவிக்குரிய விபச்சாரம்

"...காரியம் இப்படி ஆயிற்றென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." (எசேக்கியேல் 16:19)

தன் கணவனைவிட்டு வேறொரு தொடர்பை ஏற்படுத்துகின்ற, அல்லது மணமுடித்த பின் முன்பிருந்த தொடர்பை தேடி ஓடுகின்ற ஒரு பெண்ணைக் குறித்து என்ன சொல்லுவோம்? இப்படியொரு உதாரணத்தினால்தான் அன்று தேவன் யூதாவின் நிலையை யூதாவுக்கு உணர்த்தினார். தன் இரத்தத்திலே கிடந்த யூதாவைக் கண்டெடுத்து, கழுவி, இரட்சிப்பு என்ற ஆடையினால் அவமானத்தை மூடி, தமக்கே சொந்தமாக்கி, தன் ஆபரணங்களினால் அதாவது தம்முடைய நற்குணங்களினால் அலங்கரித்து, தமது மகிமையை அவள்மேல்வைத்து, அவளைத் தமது ஜனம் என்று பிரகடனப்படுத்தினார் தேவன். யூதா வளர்ந்தாள்; அவளுடைய கீர்த்தி பிற மக்கள் மத்தியில் பிரசித்தம் பெற்றது. ஆனால், தன் சிறுவயது நாட்களையும், இப்போ தனக்குக் கிடைத்த கீர்த்தி யாரால் வந்தது என்பதையும் யூதா மறந்துபோனாள். கர்த்தர் கொடுத்த அழகையும் கீர்த்தியையும் தனக்கென்று எடுத்துக்கொண்டு, தன்னை மீட்டு சொந்தமாக்கிக்கொண்ட அவரை மறந்து, வேறு தெய்வங்களுக்கு தன்னை விற்றுப்போட்டாள். கர்த்தர் கொடுத்த இரட்சிப்பின் ஆடையை எடுத்து, அந்நிய தெய்வங்களை மூடினாள். கர்த்தர் கொடுத்த மகிமையை இச்சைக்கென்று விற்றாள். கர்த்தர் கொடுத்த பிள்ளைகளையும் நரபலியாய் செலுத்துமளவுக்குத் துணிந்தாள். காரியம் இப்படியாயிற்று என்று கர்த்தர் கண்டார்.

இது அன்றைய யூதாவின் ஆவிக்குரிய விபச்சார பாவம். இதற்கும் நமக்கும் என்ன சம்மந்தம் என்று நாம் நினைக்கலாம். ஆனால் கர்த்தரோ நம்மையும் பார்த்து காரியம் இப்படி ஆயிற்றென்று சொல்லுகிறார். ஆம்! தேவன் இருக்க வேண்டிய முதல் இடத்தில் பணம் புகழ் அந்தஸ்து என்றும், படிப்பு வேலை அதிகாரம் என்றும், கோபம் பழிவாங்கல் பிரிவினைகள் என்றும் இன்று நமக்கு எத்தனை தேவர்கள்! தம்மை மகிமைப்படுத்தவென்றே தேவன் அருளிய அற்புதமான தாலந்துகள் கொடைகளைப் பாவித்தே தமக்கென்று புகழைச் சேர்த்து, தம்மைப் புகழுகிறவர்கள் யார் என்ற விவஸ்தையே இல்லாமல் உலகத்தின் வஞ்சனையில் விழுந்துகிடக்கிற தேவபிள்ளைகள் எத்தனைபேர்! தேவனுக்குப் பயப்படும் பயத்திலும் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் வளர்க்கவேண்டிய பிள்ளைகளை நவீனமான வளர்ப்பிலும், அளவுக்கு மிஞ்சிய சுதந்திரத்திலும் வளர்த்து உலக ஞானத்திற்கு அவர்களை விற்றுப்போட்ட பெற்றோர் எத்தனைபேர்! இவர்களில் நானும் ஒருவனா? சிந்திப்போம். காரியம் இப்படி ஆயிற்று என்று கர்த்தர் என்னையும் பார்த்து சொல்லுவாரா? இந்த ஆவிக்குரிய விபசாரத்தை கர்த்தர் வெறுக்கிறார். மனந்திரும்பி தேவபாதத்தில் விழுவோமாக.

"பிதாவே, என்னைக் கண்டெடுத்து, கழுவி, இரட்சித்து, நடத்துகிறவர் நீரே. உம்மைவிட்டு நான் எங்காவது வழுவியிருந்தால் இன்றே இப்போதே உம் பாதம் விழுகிறேன். என் பாவத்தை மன்னித்து என்னை ஏற்றுக்கொள்ளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
26
புதன்

வாசிப்பு: எசேக்கியேல் 16:44-54

# என்னை முதலில்...

மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்?
(யாக்கோபு 4:12)

பரிசுத்த வேதாகமம், மனிதனிடம் கேட்கும் கேள்விகள் பல. அவை நம்மைக் குற்றப்படுத்த அல்ல; நம்மைச் சீர்செய்வதற்காகவே எழுதப்பட்டுள்ளன. அதைப் புரிந்துகொண்டோமானால் அதுவே நமது பரலோகப் படிகளாகிவிடும். அடுத்தவனைக் குற்றப்படுத்துவது வெகு இலகு. அதையே அன்று யூதா மக்களும் செய்தார்கள். சீர்கேட்டுக்கு மாதிரியாய் இருந்த சோதோமை, அதன் கெட்ட நடத்தையினிமித்தம் கர்த்தர் அழித்தார்(ஆதி.19:24). இஸ்ரவேலின் தலைநகரான சமாரியாவை யூதா தள்ளி வைத்திருந்தது. இவர்களுடன் உறவு என்று சொல்வதையே யூதா விரும்பவில்லை. ஆனால், 'உன் சகோதரிகளைக் குற்றவாளிகள் என்று தீர்த்த நீ அவர்களைப் பார்க்கிலும் அருவருப்பாகச் செய்த உன் பாவங்களினிமித்தம் உன் இலச்சையைச் சுமந்துகொள்' என்று கர்த்தர் யூதாவிடம் சொன்னார். அப்படியென்ன பெரிய பாவத்தை யூதா செய்தது? பாவம் பெரிதா, சிறிதா என்பதல்ல; இந்த யூதா சோதோமிலும் பார்க்க தன் தேவனை நன்கு அறிந்திருந்தது. அப்படியிருந்தும் அது தேவனைவிட்டுத் தூரம்போனது; அதுதான் காரியம். இந்த யூதா சோதோமைக் குற்றப்படுத்துவது எப்படி?

அடுத்தது, ஒருவன் விபசார பாவத்தில் விழுந்துவிட்டால் நாம் அவனை எவ்வளவாய் குத்திக் குதறிப்போடுகிறோம். அது கேடான பாவம்தான். இப்படியே அன்று யூதாவும் சோதோமை அதன் தகாத காரியங்களுக்காக குற்றம்சாட்டியது. ஆனால் கர்வம் அதாவது தற்பெருமை, ஆகாரத் திரட்சி அதாவது சாப்பாட்டுப் பிரியம், நிர்விசாரமான சாங்கோபாங்கம் அதாவது தேவையிலுள்ளவர்களைக் குறித்து எதுவித கரிசனையுமற்ற தன்மை, இவற்றினிமித்தமும் கர்த்தர் சோதோமைத் தண்டித்தார் என்று எசேக்கியேல் யூதாவுக்கு உணர்த்துகிறார். இது இன்று நமக்கும் பொருந்துமல்லவா.

தேவபிள்ளையே, அந்த யூதாவிலும் பார்க்க, அதிகமாக ஆண்டவரை அனுபவிக்கும் நாம் இன்று என்ன செய்கிறோம்? கொலை, தகாத உறவு, களவு எதுவும் நம்மிடம் இல்லை; நாம் நல்ல வாழ்வு வாழுகிறோம் என்று நினைக்கலாம். ஆனால் கிறிஸ்தவன் என்ற பெருமையே நம்மைக் கெடுத்துப்போடுகிறது என்பது தெரியுமா? எந்தவொரு ஜெபகூட்டம் ஆயத்தப்படுத்தினாலும், உபவாசக் கூட்டமானாலும்கூட முடிந்தவுடன் என்ன சாப்பாடு என்பதுதான் நமது முதல்கண். நம்மைச் சுற்றிலும் தேவையுள்ளவர்கள் ஏராளமாயிருக்க நமது சுகபோக வாழ்வை தேவன் எந்தக் கணக்கில் வைப்பார்? இவ்வளவு காரியங்களையும் சுமந்துகொண்டிருக்கும் நாம் அடுத்தவனைக் குற்றப்படுத்துவது எப்படி? அது நமக்கு வேண்டாம். நம்மைச் சரிப்படுத்துவோம். தேவன் உதவுவார்.

"பிதாவே, பிறர் குற்றத்தையே கணக்கிடுகின்ற என் நிலையை எனக்கு உணர்த்தும். நான் என்னைச் சீர்ப்படுத்த நீரே என்னை முதலில் சீர்ப்படுத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: எசேக்கியேல் 18:19-32

ஆகஸ்
27
வியாழன்

# விளைவா? தண்டனையா?

'இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்.
....பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்.' (எசேக்கியேல் 18:4)

'இது தலைமுறையினர் செய்த பாவமோ?', 'தகப்பன் செய்த பாவமோ?' இவை நம்மிடையே எழுகின்ற சாதாரண கேள்விக்குறிகள். ஆதாம் ஏவாளைக் குற்றஞ் சொல்லுகிறவர்களும் பலர் உண்டு. ஆதாமின் பாவத்தால் மனுக்குலமே பாவத்தில் தள்ளப்பட்டது உண்மை. ஆனால், இயேசு அதைப் பரிகரித்தாரே! ஆதாமின் பாவத்தின் விளைவால் இன்று நமக்கு போராட்டம் இருந்தாலும் இயேசுவின் பெலத்தால் நாம் அதை மேற்கொள்ளலாமே! பெற்றோரின் தகாத வாழ்க்கைமுறையின் விளைவால் ஏற்படுகின்ற சில நோயினால், கர்ப்பத்தில் உற்பத்தியாகும்போதே பிள்ளைகள் பாதிக்கப்படுவதும் உண்மை. அதற்காக இவை பிள்ளைகளுக்கு வந்திருக்கும் தண்டனை என்று சொல்லமுடியுமா? இல்லையே, பெற்றோரின் பாவத்தின் விளைவுதான் இவை.

அன்று யூதரும் யாத்திராகமம் 20:5ஐ ஒரு சாட்டாக எடுத்துக்கொண்டு, வரும் பிரச்சனை அனைத்தையும் தலைமுறையினரின் தலையில் சுமத்திவிட்டுத் தப்பித்துக்கொண்டார்கள். இது, முழு இஸ்ரவேலின் பொறுப்பற்ற வாழ்வுக்கும் அழிவுக்கும் காரணமானது. ஆகவே, எசேக்கியேல் கர்த்தருடைய வார்த்தையை தெளிவாக அறிவித்தார். ஒவ்வொருவரும் கர்த்தருக்கே சொந்தம். கர்த்தர் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார்; ஆகையால் தனித்தனியே நியாயம் தீர்ப்பார். முன்னோர் செய்த பாவத்தின் விளைவுகள் நமது வாழ்வில் வெளிப்படலாம். அதற்காக, நமது பாவத்திற்குரிய நியாயத்தீர்ப்புக்கு இன்னொருவர் ஆளாவது எப்படி? ஒருவர் செய்த பாவத்தினிமித்தம் இன்னொருவரைத் தண்டிக்க தேவன் அநீதியுள்ளவரும் அல்ல. விளைவு வேறு, தண்டனை வேறு. ஒரு பிறவிக்குருடனைக்குறித்து, இவன் குருடனாய் பிறந்தது இவன் பாவமா, பெற்றோரின் பாவமா என்று சீஷர்கள் கேட்டபோது, குருட்டுத்தன்மை பாவத்தின் நியாயத்தீர்ப்பு என்ற எண்ணமே அவர்கள் மனதில் இருந்தது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் இயேசுவின் பதிலோ வேறாயிருந்தது (யோவா. 9:1-3). இதேமாதிரி, முன்னோரின் நீதியினிமித்தம் நாம் பரலோகம் செல்லவும் முடியாது.

தேவபிள்ளையே, வரும் தண்டனைகளை தவறாக அர்த்தப்படுத்தி முன்னோர்களில் பழியைப்போடவேண்டாம். அதேசமயம், பெற்றோர் தேவபக்தியுள்ளவர்கள் என்பதால் பரலோகம் போகலாம் என்று எண்ணவும் வேண்டாம். பாவத்திலிருந்து மனந்திரும்பிவிட்டால் கேடான விளைவுகளிலிருந்து நம்முடைய பிள்ளைகளைத் தப்புவிக்கலாமே. மனந்திரும்பாவிட்டால் தண்டனை, விளைவு இவ்விரண்டிலிருந்தும் தப்பமுடியாது. ஒவ்வொருவரும் மனந்திரும்புவதையே தேவன் விரும்புகிறார். மனந்திரும்பும் ஒவ்வொரு பாவியையும் தப்புவிப்பார்.

"பிதாவே, என் கண்களைத் திறந்தீர் நன்றி. கிறிஸ்துவின் இரத்தம் எனக்குத் தரும் விடுதலையைப் பெற்றுக்கொள்ள என்னை நடத்தினீரே நன்றி. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்

28

வெள்ளி

வாசிப்பு: எசேக்கியேல் 20:1-29

## பாமா

"...நீங்கள் போகிற அந்த மேடு என்ன..." (எசேக்கியேல் 20:29)

'பாமா' என்றால் 'உயர்ந்த மேடு' என்று அர்த்தம். அன்று கர்த்தர் 'நீங்கள் போகிற அந்த மேடு என்ன' என்று இஸ்ரவேலிடம் கேட்டதையே இன்று நம்மிடமும் கேட்கிறார். இன்றைய வாசிப்புப் பகுதியில் தேவனது வேதனையை நம்மால் உணரமுடிகிறதா? இஸ்ரவேலைத் தெரிந்துகொண்ட நாளிலிருந்து எத்தனை தரம் கர்த்தர் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி நடத்தினார்; எத்தனை தரம் இஸ்ரவேலர் கர்த்தரைவிட்டு சோரம்போனார்கள் என்பதைக் கவனித்தீர்களா? 'ஆனாலும்' என்ற சொல்லும், 'என் நாமத்தினிமித்தம் கிருபை செய்தேன்' என்றும், 'நானே உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறியும்படிக்கு' என்றும் கர்த்தர் திரும்பத் திரும்ப சொல்லுவதையும் அவதானிக்கவேண்டும்.

கர்த்தர் தமது பிள்ளைகளுக்காக வைராக்கிய வாஞ்சையுள்ளவர். இதனை அன்றைய இஸ்ரவேலின் சரித்திரத்தில் மாத்திரமல்ல, கிறிஸ்துவைத் தந்ததிலிருந்தாவது நாம் உணரவில்லையென்றால் நம்மை என்னவென்று சொல்லுவது! பிழைத்திருக்கும்படிக்கு கட்டளைகளைக் கொடுத்த கர்த்தர், தாமே பரிசுத்தம் பண்ணுகிறவர் என்பதை அறியும்படிக்கும், தம்மோடு தரித்திருக்கும் படிக்கும் விசேஷமாக ஓய்வுநாள் கட்டளையைக் கொடுத்தார். இஸ்ரவேலரோ அதைக் குலைத்துப் போட்டார்கள். அப்போதும் தேவன் பொறுமையாயிருந்தார் என வாசிக்கிறோம். தேவனை வணங்கி ஆராதிக்கவேண்டியவர்கள், வாரத்தில் ஒருநாள் அவரோடு ஓய்ந்திருந்து உறவாடி தம்மைப் புதுப்பிக்கவேண்டியவர்கள், அந்நிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, உயர்ந்த மேடுகளிலே பலி செலுத்தி, தங்கள் பிள்ளைகளையும் பலியாக்கினார்கள். கர்த்தரோ, இது என்ன மேடு என்று கேட்டார்? இவ்வளவையும் செய்துவிட்டு, தண்டனை பற்றியெரியும் போது கர்த்தர் கைவிட்டார் என்று சொல்லுவது எப்படி?

தேவபிள்ளையே, தேவனோடு தரித்திருக்கவேண்டிய பரிசுத்தநாளாயினும், அவரோடு தனித்திருக்க வேண்டியது அதிகாலையாயினும், எதுவானாலும் தேவனுக்கே முதலிடம் கொடுக்கவேண்டும். அதைக் களவாடி நமது சுய சந்தோஷத்திற்கோ உலக காரியத்திற்கோ வேறெதற்கோ கொடுப்போமானால், அன்றைய இஸ்ரவேலுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? பின்னர் பிரச்சனைகள் தலைதூக்கும்போது கர்த்தர் கைவிட்டார் என்று சொல்லுவது தகுமா? தேவனுடைய பிரமாணங்களையும் ஒழுங்குகளையும் மீறும்போது இஸ்ரவேலலென்ன, கிறிஸ்தவர்களென்ன எல்லாருக்கும் தேவநீதி ஒன்றுதானே? கர்த்தர் இந்நாளிலே நம்மிடம் கேட்கிறார், என்னோடிருக்கவேண்டிய நேரத்தில் எங்கே இருக்கிறாய்? நீ நாடிப்போகிற அந்த மேடு என்ன? கர்த்தருக்கு என்ன பதில் கொடுப்போம்?

"கர்த்தாவே, என்னை மன்னியும். நான் உணர்வற்றுப்போனேன். உமக்கென்று அழைத்த உமக்கே உண்மையாய் வாழ என்னை அர்ப்பணிக்கிறேன். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: எசேக்கியேல் 22:23-31

ஆகஸ்
**29**
சனி

# அந்த ஒருவன் யார்?

'...திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன். ஒருவனையும் காணேன்.' (எசேக்கியேல் 22:30)

சுவரில் துவாரம் வந்தால் தகுதியான கல் வைத்து அடைக்கவேண்டும். இல்லாவிட்டால் மீதி சுவரும் இடிந்துவிழும். இங்கே, கர்த்தர் சொல்லுகின்ற சுவர் வெறும் கற்களினாலான சுவர் அல்ல. தீமையை எதிர்த்து நிற்க தேவமக்கள் ஒன்றிணைந்து எடுக்கும் முயற்சியினால் கட்டப்படும் சுவர்தான் இது. அதிலேதான் துவாரம்; அதாவது மக்கள் தேவனுடைய வழியைவிட்டு வழுவ ஆரம்பித்ததால் சுவர் திறப்புக் கண்டுவிட்டது. அந்தத் திறப்பை அடைத்து, சுவரை மறுசீரமைக்க கர்த்தர் ஒருவனைத் தேடினார். தீர்க்கதரிசிகள் ஆசாரியர்கள் பிரபுக்கள் என்று பலர் இருந்தார்கள். ஆனால் அவர்கள் வெறும் மதநம்பிக்கையினாலும், சொந்த அறிவினாலும் முயற்சித்தார்களே தவிர, தேவனுடைய வழியை பின்பற்றவில்லை. மேற்பூச்சுப் பூசுவதைப்போல பிரச்சனைகளை தங்கள் முயற்சியினால் மூடி மறைக்க எத்தனித்தார்கள். ஜனத்திற்கு சரியான வழிநடத்துதலைக் கொடுக்காமல், அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வைக் கட்டி எழுப்பாமல், ஆத்துமாக்களைக் கொள்ளையிட்டார்கள். இதனால் கர்த்தருடைய மக்கள் பெலவீனப்பட்டுவிட்டார்கள். அப்போது எதிரி என்ன செய்வான் ???

இன்றும் அதுதான் நடக்கிறது. ஆனால் கொள்ளையிடும் முயற்சிகள் இக்காலத்திற்கேற்ற நாகரீகத்தில் நடைபெறுகிறது. அவ்வளவுதான் வித்தியாசம். அன்று விடுதலையாக்கப்பட்ட இஸ்ரவேலர், கன்றுக்குட்டியை ஆராதித்தபோது அங்கேயும் ஒரு துவாரம் ஏற்பட்டிருந்தது. ஆனால் மோசேயோ அந்த திறப்பிலே நின்றார். அதற்காக ஜனத்தின் பாவத்தை மூடிமறைக்கவில்லை. அன்றையதினம் மூவாயிரம்பேர் செத்தார்கள். பின்புதான் மோசே, 'எமது பாவத்தை மன்னியும். இல்லையானால் உமது புஸ்தகத்திலிருந்து என் பெயரைக் கிறுக்கிப்போடும்' என்று ஜெபித்தார். மோசேயைப்போல திறப்பை அடைக்க, பிறரையும் கர்த்தருடைய வழியிலே நடத்தி சுவரைப் பெலப்படுத்த நாம் ஆயத்தமா?

தேவபிள்ளையே, கர்த்தருடைய வழியைப் புறக்கணித்து பக்தியுள்ளவர்கள்போல வாழுவோமானால் அது மேற்பூச்சு மாத்திரமே. அது திருத்தமுடியாத அழிவுக்குள் நடத்திவிடும். இன்று ஆவிக்குரிய சுவரில் பல திறப்புகள் வந்திருக்கிறதே, சாத்தான் பலங்கொண்டு எழும்பியிருக்கிறானே, அதற்கு யார் காரணம்? பிறரைச் சுட்டிக்காட்டாமல் தேவவார்த்தையினால் நம்மைச் சுத்திகரிப்போமாக. கர்த்தர் தேடிய அந்த ஒருவராக, இயேசு தம்மையே கொடுத்து, நம்மை அழிவில் இருந்து காத்தார். அவர் பெயர் சொல்லும் நம்மால் அவருடைய பெலத்தோடு அந்த துவாரங்களை அடைத்து, இந்த உலகில் ஒரு வித்தியாசத்தைக் கொண்டு வரமுடியாதா? திறப்பை அடைக்க நாம் ஆயத்தமா?

"கர்த்தாவே, சாத்தானை எதிர்க்கும் ஆவிக்குரிய சுவரில் என்னாலேற்பட்ட திறப்பையடைத்து, பிறரையும் தேவனுக்குள் திடப்படுத்த, இதோ என்னைத் தருகிறேன். ஏற்று வழிநடத்தும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
30
ஞாயிறு

வாசிப்பு: எசேக்கியேல் 33:10-20

# மனந்திரும்பு!

...நீங்கள் ஏன் சாகவேண்டும்... (எசேக்கியேல் 33:11)

அதுதானே, நாம் ஏன் சாகவேண்டும்? சரீர சாவு நமக்குண்டு. அதற்காக தேவனைவிட்டு நிரந்தரமாகப் பிரியும்படி நாம் ஏன் சாகவேண்டும்? பாபிலோனில் அன்று சிறைப்பட்டிருந்த யூதர்களிடம் 'நீங்கள் ஏன் சாகவேண்டும். துன்மார்க்கனே சாவதை விரும்பாத நான், நானே தெரிந்துகொண்ட ஜனம் செத்துப்போவதை விரும்புவேனோ' என்று கர்த்தர் கேட்டார். அப்படியானால் பிரச்சனை எங்கே? இந்த ஜனம் தங்கள் பாவத்தினிமித்தம் பிழைக்கமுடியாது என்று சோர்ந்துபோயிருந்தனர். கர்த்தரோ எசேக்கியேல் போன்றவர்களை எழுப்பி, சாகாமல் பிழைக்க வழிகாட்டினார். 'உங்கள் கீழ்ப்படியாமையினாலேயே அழியப்போகிறீர்கள், பொல்லாத வழிகளைவிட்டு மனந்திரும்பி வாருங்கள்' என எச்சரித்தார். அந்த எச்சரிப்பு சரியாகக் கொடுக்கப்பட்டும், அழிவு வந்ததேயானால் பிரச்சனை எங்கிருந்தது? கர்த்தரிடமா? ஜனத்தினிடமா? எசேக்கியேல் தவறு செய்திருந்தால் காரியம் வேறாயிருந்திருக்கும். ஆனால் அப்படியல்ல; அப்படியானால் ஏன் செத்தார்கள்?

இன்று ஏன் நாம் தேவசமுகத்தைவிட்டு நித்திய சாவைச் சந்திக்கவேண்டும்? சரீர சாவிலும் பார்க்க, தேவனைவிட்டு நித்தியசாவுக்குள் பிரவேசிப்பதுதான் மனுஷனுக்கு நேரிடக்கூடிய மிகப்பெரிய தீங்கு. வரப்போகும் அழிவைக்குறித்து கர்த்தர் எச்சரிப்புக் கொடுக்காமலா இருக்கிறார்? இன்றுபோல அன்றும் பொய்த் தீர்க்கர்கள் இருந்தார்கள். மக்களை தீமைக்கு நேராய் நடத்திய ராஜாக்களும் தலைவர்களும் இருந்தார்கள். அதை ஜனம் உணரவில்லை. அதற்காக, இன்று கிறிஸ்துவின் ஆவியால் நடத்தப்படும் நாமும் தவறான செய்திகளையும் ஆலோசனைகளையும் உணராமல் இருக்கலாமா? இன்று கர்த்தர் விநாடிக்கு விநாடி எச்சரித்தபடியே இருக்கிறார். ஏனெனில் முடிவு வெகுசமீபத்தில் வந்துவிட்டதென்பதை வேதஅடையாளங்கள் நிறைவேறிக் கொண்டிருப்பதிலிருந்து நாம் உணராமல் இருக்கமுடியாது. அதேசமயம் நவீனங்களும் நவீன உபதேசங்களும் நம்மையறியாமலேயே தேவனைவிட்டு நம்மைப் பிரித்துக்கொண்டிருக்கும் பெரிய ஆபத்தில் சிக்கியிருக்கிறோம் என்பதைக்குறித்து நாம் விழிப்படையவேண்டும். 'அனுதினமும் தேவனுடன்' தியான வாசகர்களாகிய நாம் தேவ வார்த்தையினால் எச்சரிக்கப்படுகிறோம். வீண்ஆரவாரங்கள், கவர்ச்சியான ஆராதனைகள், நவீன ஜெப அழைப்புகள் இன்று ஏராளம். எச்சரிக்கை! இவை நம்மை வாழ்வுக்கு நேராகவா, சாவுக்கு நேராகவா நடத்துகின்றன என்றுச் சிந்திப்போம்.

நாம் ஏன் வீணாய் சாகவேண்டும்? தேவனிடம் திரும்புவோம். குருடாகிவிடாதபடி கண்களையும், மந்தமாகாதபடி காதுகளையும், பாவத்தைப் பகுத்து அறிந்து அருவருக்கும்படி நமது அறிவையும் தொடும்படி ஜெபிப்போமாக.

"பிதாவே, நான் உம்மைவிட்டு ஏன் சாகவேண்டும். இதோ மனந்திரும்பி வருகின்றேன். என்னை முற்றுமாய் தொடும் ஆண்டவரே. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்
31
திங்கள்

வாசிப்பு: எசேக்கியேல் 34:1-16

# வீண்கவலை ஏன்?

'என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.' (எசேக்கியேல் 34:15)

இந்த வார்த்தைகள் இன்றைய காலகட்டத்திலே நமக்கு ஆறுதலும் நம்பிக்கையும் பெலத்தையும்கூட தருகிறது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி, ஏராளமான பணத்தை வாங்கிக்கொண்டு அழைத்துச் சென்ற தரகர் ஒருவர், நடுவழியிலே, உள்ள பணத்தையும் பறித்துக்கொண்டு தன்னை நிர்க்கதியாக விட்டுச் சென்றதாக ஒரு வாலிப தம்பி தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். வீதியில் அநாதரவாக விடப்பட்ட இவரையும் நண்பர்களையும் அவதானித்த ஒருவர், தானாக முன்வந்து, திரும்பவும் அவர்கள் தங்கள் சொந்த நாட்டுக்கு பத்திரமாக வந்துசேர உதவிசெய்ததாகவும் சொன்னார்.

அன்று இஸ்ரவேல் மக்களை நடத்தியவர்களும் தங்கள் பணியிலே உண்மையற்றுப் போனார்கள். ஜனங்களோ சிதறுண்டுபோனார்கள். 'என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற்போனார்கள். மேய்ப்பனில்லாமல் சிதறுண்டவர்கள் காட்டுமிருகங்களுக்கு இரையானார்கள்' என்று, இஸ்ரவேல் மக்கள் சிதறுண்டு காணாமற்போய் விட்டதைக் குறித்து கர்த்தர் மனம் வருந்தினார். அதற்காக கர்த்தரும் அவர்களை விட்டுவிட்டாரா? இல்லை. தாமே மேய்ப்பதாக உறுதிகொடுத்தார். 'நானே அவர்களைத் தேடி, அவர்களைத் திரும்பவும் கொண்டு வருவேன்' என்றார். அப்படியே கொண்டுவந்தார் என்றும் வேத சரித்திரத்திலே நாம் காண்கிறோம்.

தேவபிள்ளையே, எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டிலேதான் இன்னும் இருக்கின்றது; இருக்கும். ஆகவே, தலைவர்களோ, நாம் நம்பியவர்களோ தவறும்போது, நாம் மனந்தளரத் தேவையில்லை. ஏனெனில் நமக்கு ஒரு மேய்ப்பர் உண்டு. அவர் உடன்படிக்கையின் தேவன். வாக்குமாற மாட்டார். ஆனால், இன்று நமக்கிருக்கும் பெரிய சவால் என்னவென்றால், நாம் சிதறடிக்கப்படுகிறோம் என்ற உணர்வு நமக்கு வராதபடி மிகவும் தந்திரமாக தேவபிள்ளைகளை சாத்தான் சிதறடித்துக் கொண்டிருக்கிறான் என்பதேயாகும். ஆனால் அங்கேயும் நமக்கு நம்பிக்கை உண்டு. தேவனோடு நல்லுறவில் நிலைத்து, அவருடைய கூடாரத்தையே வாஞ்சித்து நாடி, கைசுத்தத்தோடும் மாசற்ற இருதயத்தோடும் தேவனையே பற்றியிருப்போமானால் கர்த்தர் நம்மை தீங்குக்கு விலக்கிக் காப்பது உறுதி. நாம் காணாமற்போயிருந்தாலும் தேவன் நம்மைச் தேடிப்பிடித்துச் சேர்ப்பார். மனமுறிவுடன் இருந்தாலும் அவர் நமது காயங்களைக் கட்டுவார். நல்ல மேய்ச்சலையும் அமர்ந்த தண்ணீரையும் நமக்குத் தரவல்ல பெரிய மேய்ப்பர் நமக்கிருக்க நமக்கு ஏன் வீண்கவலை? ஆகவே, சுயவழிகளையும், துர்ஆலோசனைகளையும் விட்டு தேவனிடம் மனந்திரும்புவோமாக.

"என் நேச மேய்ப்பரே, சிதறுண்ட என்னை உம்மண்டை இழுத்தருளும். எனக்கு நீர் இருக்க உம் கரத்தில் நான் இருக்க எனக்கு என்ன கவலை? ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்**
**1**
**செவ்வாய்**

வாசிப்பு: மத்தேயு 6:1-6

# அந்தரங்கமான உறவு

...அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் (மத்தேயு 6:4)

தேவனின் மீட்பைப்பெற்று, அவருடைய பிள்ளைகளாக்கப்பட்ட நாம், தேவனுக்குச் சீடர்களாய் இருக்கும்படி சீடத்துவப்பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த சீடத்துவத்தைக் குறித்து சில காரியங்களை ஆராய்ந்து படிப்பது எமது வாழ்வுக்குப் பிரயோஜனமாகவும், எமது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மெருகூட்டுவதாகவும் இருக்கும். ஒரு சீடனுக்கு அவனது குருவோடு உறவு இருப்பது மிக முக்கியம். அதேவேளை அவ்வுறவானது பத்துப்பேர் காணும்படியாக பறைசாற்றித் திரியும் உறவல்ல, குருவின் விருப்பு வெறுப்புக்களை இனங்கண்டு அதற்கேற்ப நடக்கும்படியாகவும், அவருக்குப் பணிவிடை செய்யும்படியாகவும் உள்ள ஒரு அந்தரங்கமான உறவே அது.

இன்றைய தியானப்பகுதியிலே இயேசுவானவர் அந்தரங்கமாய் செய்யப்படவேண்டிய இரு காரியங்களைக் குறிப்பிடுகிறார். ஒன்று தர்மம்செய்தல்; மற்றையது ஜெபம். ஒன்று மனுஷரோடுள்ள உறவு, மற்றையது தேவனோடுள்ள உறவு. தேவனோடு ஒருவன் உறவில் நெருங்கி வரும்போது அதன் உந்துதலால் அவன் மனுஷர் மத்தியில் தேவனின் அன்பை பலவழிகளிலும் வெளிப்படுத்துகிறான். அப்போது சுற்றியுள்ள மனுஷர் வாழ்விலும் மாற்றம் ஏற்படுகிறது. இந்த இரண்டும் அந்தரங்கமாய் செய்யப்படவேண்டியவைகள். இதன் பலன்தான் பகிரங்கமாய் காணப்படவேண்டும். பலன் பகிரங்கமாய்க் காணப்படும்போது, இதனூடாகத் தேவனுடைய நாமம் புகழப்படுகிறது.

சகல புகழையும் மேன்மையையும் தன் குருவுக்குச் செலுத்தும் வண்ணம் ஜீவிக்கவேண்டியது ஒரு சீடனுக்கு இருக்கவேண்டிய தகைமைகளில் மிக முக்கியமானதாகும். சீடனுடைய செயல் பேச்சு மற்றும் அவனது எல்லாக் காரியங்களும் குருவாகிய தேவனுக்கே மகிமை செலுத்துவதாய் அமைய வேண்டும். மாறாக, குருவைப் பாவித்து தனக்குப் பேரும் புகழும் சேர்க்கும் வண்ணம் தனது காரியங்களைக் குறித்து பெருமைபாராட்டி நாம் வாழக்கூடாது.

நாம் இயேசுவுக்குச் சீடரா? அப்படியானால் நம்மைக்குறித்து பிறர் புகழ்ந்து பேசுகிறார்களா; தாராளமாகவே நன்றிகள் நமக்குக் கிடைக்கின்றதா என்பவற்றைக் குறித்து விழிப்போடு பார்த்துக்கொண்டிருக்கிறோமா? இன்னும், எத்தனை மணிநேரம் ஜெபிக்கிறோம், வாரத்தில் எத்தனை நாட்கள் உபவாசிக்கிறோம் என்று நம்மைக் குறித்து நாமே பெருமையாகப் பேசித் திரிகிறோமா? அருமையானவர்களே. உண்மையான ஒரு சீடன் அந்தரங்கமாகக் காரியங்களைச் செய்து, பகிரங்கமாக குருவாகிய தேவனுக்கே மகிமையைக் கொண்டுவரும் பொருட்டாகவே வாழ அழைக்கப்பட்டிருக்கிறான். எமது அழைப்பைக் குறித்து நிதானமாய்ச் சிந்திப்போம்.

"உமக்கு மகிமையுண்டாகும்படியாக எனது வாழ்க்கை முறைகளை மாற்றி வாழ எனக்குக் கற்றுத்தாரும் என் அன்பின் ஆண்டவரே, ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: எபிரெயர் 11:32 - 12:3

செப்
2
புதன்

# அடிச்சுவட்டைத் தொடர்ந்து...

"....இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்." (எபிரெயர் 12:1)

குருவின் அடிச்சுவட்டைத் தொடர்ந்து பின்பற்றிச் செல்லுதல் சீடத்துவத்தின் ஒரு பகுதி. பழைய ஏற்பாட்டு விசுவாசிகளின் வாழ்க்கையை நாம் ஆராய்ந்து பார்த்தால், தாம் ஆராதித்த தேவனுக்காக அவர்கள் எடுத்த தீர்மானங்கள் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அவர்கள் யுத்தங்களைக் கண்டு பின்வாங்கவில்லை; கர்ச்சிக்கும் சிங்கங்களைக் கண்டு அஞ்சவுமில்லை. அக்கினிக்குப் பயந்து சிலைகளுக்கு முன்பாக தாழவிழுந்து வணங்கவுமில்லை. தேவனுக்காக உறுதியோடு செயற்பட்டுத் துணிவோடு நிமிர்ந்து நின்றார்கள்.

ஏதேனிலே பாவத்தில் வீழ்ந்த மனுக்குலத்திற்கு தேவன் மீட்பை வாக்களித்தார். பிதாவின் சித்தப்படி அந்த மீட்பை நிறைவேற்றும்படி, பரலோகத்தின் மேன்மைகளையெல்லாம் துறந்து, இப்பூமிக்கு வந்த கிறிஸ்து, மரணபரியந்தமும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதையே தன் சித்தமாகக் கொண்டிருந்தார் என்பது நமக்குத் தெளிவாக தெரியும். மனுக்குலத்தை மீட்கும் பொருட்டு பாடுபட்டு, வாரினால் அடிக்கப்பட்டு சிலுவையில் தன்னை பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பதே பிதாவின் சித்தம் என்பதும் இயேசுவுக்குத் தெரியும். ஆனால், "என்னை நீர் பணிந்துகொண்டால், உலகம் முழுவதையும் உமக்கே தந்துவிடுகிறேன்" என்று ஆசைகாட்டி இயேசுவை வீழ்த்திவிடப் பார்த்தான் சாத்தான். அவனுடைய தந்திரத்தை வேத வார்த்தைகளைக்கொண்டு ஜெயித்துவிட்டு, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதையே முழு நோக்கமாகக்கொண்டு துன்பமான பாதையைத் தொடர்ந்து சென்றார் ஆண்டவராகிய இயேசு.

இந்த இயேசுவைப் பின்பற்றிச் செல்லும்படியாக சீடர்களாய் அழைக்கப்பட்ட நாம், இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதற்குப் பதிலாக, எமக்கொரு தனிவழிப் பாதையை அமைத்துக் கொள்வதேன்? அவர் அடிச்சுவட்டில் நடக்கும்போது துன்பங்களையும் பாடுகளையும் கண்டதும் ஒரு பக்கவழி பாதையைத் தெரிந்து கொள்வது ஏன்? "குரு எவ்வழியோ சீடனும் அவ்வழியே" என்பார்கள். அப்படியாயின், எமது குருவாகிய கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாம் நடக்கவேண்டாமா? அதுவே சீடத்துவத்தின் சிறந்த பண்பாகும். இதில் நாம் எங்கே நிற்கிறோம் என்பதைச் சிந்திப்போம். "அடிமேல் அடிவைத்து இயேசுவையே, கரமதில் கரம் வைத்து அவருடனே, பின்செல்வேன் நான் தினம் தினமே. தவறினால் தாங்குவார், கவலைகள் போக்குவார், பின்செல்வேன் நான் தினம் தினமே" என்னும் பாடல்களின் வரிகள் எம் தீர்மானமாய் அமையட்டும். அத்தீர்மானத்தைச் செயல்படுத்த தடைகள் பாடுகள் கட்டாயம் வரக்கூடும். ஆனாலும் குரு வழிசெல்லும் மனநிறைவு நமக்குக் கிடைக்குமல்லவா!

"உம் அடிச்சுவட்டைப் பின்பற்றி, எனக்காக நீர் நியமித்திருக்கும் ஓட்டத்தில் உண்மையோடு ஓட எனக்குப் பெலன் தாரும் ஆண்டவரே, ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்**
**3**
*வியாழன்*

வாசிப்பு: யோவான் 6:48-69

# கடினமான உபதேசம்

'அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்.' (யோவான் 6:67)

தேவனுக்குள்ளே உறுதியாக இருந்து பல வாலிபர்களையும் தேவனுக்குள்ளாக வழிநடத்திய ஒரு வாலிபன், வெளிநாட்டுக்குச் சென்று பலவருடங்களின் பின் திரும்பியபோது, தான் இப்போது ஒரு ஏத்திஸ்ட் (கடவுள் நம்பிக்கை இல்லாதவர்) என்ற உண்மையைக் கூறி எங்கள் மனங்களை உடைத்துப் போட்டார். ஒரு காலத்திலே தேவனுக்குள்ளாக அவர் கொண்டிருந்த உறுதி உடைந்துபோகக் காரணம் என்ன? தேவனே இல்லையென்று மறுதலிக்கும் அளவுக்கு மாற்றங்கள் ஏற்படக் காரணம் என்ன?

தேவனைப் பின்பற்றுவோர் வாழ்விலே, இவ்வித திடீர் திருப்புமுனைகள் வரக்காரணம் என்ன? வாழ்விலே எடுக்கும் சில தீர்மானங்கள் தேவ கட்டளைகளுக்கு முரணாக இருக்கும்போதும், விரும்பிச் செய்ய நினைக்கும் காரியங்களுக்கு தேவனின் கட்டளைகள் தடையாக எழும்பும்போதும் அநேகர் இது மிகவும் கடினமான உபதேசமாய் இருக்கிறதே என்று அதைவிட்டு ஓடிப்போவதுண்டு. இயேசு தனது மரணத்தைக் குறித்தும், அவரது சரீரத்திலும், இரத்தத்திலும் எமக்கிருக்கும் பங்கைக் குறித்தும் பேசியபோது அநேக சீடர்கள் இது கடினமான உபதேசம் எனக்கூறி அவரை விட்டு ஓடிப்போனார்கள். அந்தவேளையில்தான், இயேசு தனது பன்னிரு சீடரையும் பார்த்து நீங்களும் போய்விட மனதாய் இருக்கிறீர்களோ எனக் கேட்கிறார். எமக்கும்கூட, ஆண்டவர் "உங்களை நேசிக்கிறார். அவர் உங்கள் வாழ்வில் ஒரு அற்புதம் செய்வார். அவர் உங்கள் கண்ணீர் யாவற்றையும் துடைக்கிறார்." போன்ற காதுக்கினிமையான செய்திகளை எப்போதும் கேட்க விருப்பம். ஆனால் எமது பாவங்களை உணர்த்தும் வேதவசனங்களையோ அல்லது எமது விருப்பங்களுக்குத் தடைவிதிக்கும் கட்டளைகளை கேட்கவோ, கீழ்ப்படியவோ விருப்பம் இல்லை. அப்பொழுது அவைகள் எமக்குக் கடினமான உபதேசங்களாய்த் தோன்றும்.

நாம் இயேசுவுக்கு உண்மையான சீடரானால், அவரது கட்டளைகள் கடினமானாலும் இலகுவானாலும், அனைத்திற்கும் செவிசாய்க்கிறவர்களாய், கீழ்ப்படிகிறவர்களாய் இருக்கவேண்டும். நமக்கு விருப்பமான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்துவிட்டு, சிலவற்றைப் பாராமுகமாய் விட்டுவிட இயலாது. முற்றிலுமாய் அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க நாம் ஆயத்தமா? "அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை." (1யோவா.2:4) அப்படியானால், நாம் உண்மையான சீடரா? அல்லது பொய்யரா?

"எல்லாச் சூழ்நிலைகளிலும் உமது வசனத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்க எனக்கு அதிகமான விருப்பத்தையும், வாஞ்சையையும் தந்தருளும் என் அன்பின் ஆண்டவரே, ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: 2தீமோத்தேயு 3:1-17

செப்
4
வெள்ளி

# கறைபடாத வாழ்வு

'நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு'
(2தீமோத்தேயு 3:14)

நான் பரிசுத்தராய் இருப்பதுபோல, நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் என்று சொன்ன தேவன், பாவமேயில்லாத இடத்தில் சென்று தனிமையாக வாழவோ, அல்லது அனைத்தையும் ஒறுத்து ஒரு துறவியைப்போல வாழவோ, நம்மை அழைக்கவில்லை. பாவம் நிறைந்த இந்த உலகத்திலேயே, தேவனை அறியாதோர் மத்தியிலேயே வாழும்படியாகவே அழைத்திருக்கிறார். ஒரு புளியம்பழம் ஓட்டுக்குள்ளே இருந்தாலும் எப்படியாக ஓட்டுடன் ஒட்டாமல் இருக்கிறதோ அதுபோலவே நாம் உலகத்தில் இருந்தாலும் உலகத்தால் கறைபடாத படிக்கு, உலகத்தின் காரியங்களில் ஒட்டாமல் பரிசுத்த வாழ்வு வாழவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். "திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று சொன்னவருக்கு சீடராக வாழவேண்டிய நாம், உலகத்துக்குள்ளும் அதன் ஆசைகளுக்குள்ளும் விழுந்து போவது ஏன்?

தீமோத்தேயுவை ஒரு நல்ல சீடனாகப் பயிற்றுவித்த பவுல், அவருக்குக் கொடுத்த ஆலோசனைகளையும், வழிநடத்துதல்களையும் இன்றைய வாசிப்பு பகுதியிலே காண்கிறோம். உலகத்தில் மக்கள் எப்படி எப்படியோ வாழுவார்கள்; ஆனால் நீயோ கற்றுக்கொண்டவைகளில் நிலைத்திரு. உனக்குக் கற்றுக் கொடுத்த எனது வாழ்க்கையையும் பார். சிறுவயதுமுதல் நீ கற்றுக்கொண்ட தேவனுடைய வார்த்தைகளை பற்றிப் பிடித்துக்கொள். ஏனெனில் அவைகள் எமது வாழ்வுக்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உதவியாகவும், வழிகாட்டியாகவும், இருக்கக்கூடியவைகள் என சிறந்ததொரு ஆலோசனையைக் கொடுத்து தீமோத்தேயுவை தேவனுக்குள்ளாகப் பெலப்படுத்துவதைக் காண்கிறோம்.

"குப்பையிலே கிடந்தாலும் குண்டுமணி மங்காது" என்பார்கள். ஆம், தேவனை அறியாதோர் மத்தியிலும், பாவம் நிறைந்த இந்த உலகத்தின் மத்தியிலும், தேவனையும் அவர் அன்பையும் மறுதலிக்கும் ஜனங்கள் மத்தியிலும், தேவனுக்காய் ஒரு குண்டுமணியைப்போல மங்காது என்றும் ஒளிருவாயா? நாம் வேலைசெய்யும் ஸ்தலத்திலும், அயலவர் மத்தியிலும், எமது குடும்பத்திலும், லௌகீக இச்சைகளால் இழுப்புண்டுபோகாமல் பாவத்தால் கறைபடாத வாழ்வு வாழ நாம் நினைத்ததுண்டா? நான் உலகத்தான் அல்லாததுபோல அவர்களும் உலகத்தார் அல்ல என தனது சீடர்களைப் பார்த்து கூறிய ஆண்டவருக்குச் சீடனாக வாழவேண்டுமானால் உலகத்தால் கறைபடாத வாழ்வு வாழ முழுப் பிரயத்தனம் செய்யவேண்டுமே. இது தேவனின் பெலத்தால்தான் முடியும். முயற்சித்து வெற்றிகொள்ளுவோமாக.

"ஆண்டவரே, உம்மைப்போலவே உலகத்தை ஜெயித்து வாழ, எனக்கும் உமது பெலனைத் தாரும். உலகத்தால் கறைபடாத வாழ்வை என்றும் வாழ உமது வழிநடத்துதலைத் தாரும், ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
5
சனி

வாசிப்பு: மத்தேயு 21:28-32

# உறுத்துதல் இல்லாத நிலை

'அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்.' (நீதிமொழிகள் 29:1)

சிலவேளைகளில் பிள்ளைகளிடம் ஒரு காரியத்தைச் செய்யும்படிக்குச் சொன்னால், "ஆம்" என்று பதில் உடனடியாக வரும். ஆனால் வேலை நடைபெறாது. கேட்டால், "நான் செய்வேன் என்று சொன்னேன், நான் செய்வேன்" என்று பதில் வரும். மறுநாளும் வேலை நடைபெறாது. கேட்டால் "இன்றைக்குத் தான் செய்ய இருந்தேன்" என்று பதில் வரும். அன்றும் வேலை நடைபெறாது. மறுநாள் கேட்டால். "ஐயோ, மறந்துவிட்டேன்" என்று அனைவரும் சொல்லும் நொண்டிச்சாட்டு வெளிவரும். ஆனால் வேலையோ கடைசிவரைக்கும் நடைபெறாது. இன்றைய நாளின் தியானப் பகுதியும் இப்படியான ஒரு சந்தர்ப்பத்தைத் தான் குறிப்பிடுகிறது.

"செய்யமாட்டேன்" என்று சொன்னவன், மனஸ்தாபப்பட்டு தகப்பனின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தவனாய் காரியத்தை நிறைவேற்றுகிறான். ஆனால், "செய்கிறேன்" என்று சொன்னவனோ ஒருக்காலும் செய்யவில்லை. கீழ்ப்படிவேன் என்று சொல்லுபவன் அல்ல, உண்மையாகக் கீழ்ப்படிபவனே உண்மைச் சீடனாய் இருக்கத் தகுதிபெற்றவன் ஆவான். எமது வாயினால் தேவனுக்கு அநேகம் வாக்குகளைக் கொடுக்க நாம் பின்நிற்பதில்லை. ஆனால் அவற்றில் எத்தனை காரியங்களை நிறைவேற்றினோம், நிறைவேற்றுகிறோம் என்பதுதான் கேள்விக்குறி. இத்தனை வருடகால எமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் தேவனுக்குச் செய்வோம், அல்லது தேவனுக்குக் கீழ்ப்படிவோம் என்று கூறிய காரியங்களை சற்றே சிந்தித்துப் பாருங்கள். அவற்றில் எத்தனை காரியங்களை நாம், இதுவரைக்கும் முழு மனதோடு நிறைவேற்றியுள்ளோம்?

காலையிலே அலாரம் அடித்ததும் உடனே எழும்பிவிடுவோர் சிலர். அலாரத்தை அழுத்திவிட்டு மீண்டும் நித்திரைக்குச் செல்வோர் பலர். சிலருக்கு அலாரமே தாலாட்டாக மாறிவிடுகிறதும் உண்டு. அலார சத்தத்திற்கு உடனே எழுந்திருக்காவிட்டால், அது எப்படி நம்மை அயர்ந்த நித்திரைக்கு இட்டுச் சென்று தாலாட்டாக மாறிவிடுகின்றதோ, அதுபோலவே, தேவனின் மெல்லிய சத்தத்திற்கு உடனடியாகச் செவிகொடுக்காவிட்டால், காலப்போக்கில் அவரது சத்தமும் எமக்கு உறுத்துதல் இல்லாத சத்தம் போலாகிவிடும். அதன் பின்னர் நமது நிலை வாழ்க்கையில் எவ்வித உறுத்துதலும் இல்லாத ஒரு உயிரற்ற நிலையாகிவிடும். அந்நிலை வருவதற்கு இடங்கொடாமல், தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து உண்மைச் சீடராய் வாழ்ந்து அவரையே சேவிப்போம். நாம் தற்போது எப்படியான நிலையில் இருக்கிறோம் என்பதை சிந்தித்துப் பார்த்து சரிப்படுத்திக்கொள்வது நல்லதல்லவா!

"கர்த்தாவே, நீர் என்னோடு பேசும் மெல்லிய சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு கீழ்ப்படிந்து வாழ உதவிசெய்யும், ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: 2தீமோத்தேயு 1:13-2:2

**செப்**
**6**
**ஞாயிறு**

# ஒப்புவிக்கப்பட்டதைக் காத்துக்கொள்

'அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.' (2தீமோ. 2:2)

குழந்தை பிறந்துவிட்டது. இனி அது தானாகவே வளர்ந்துவிடும் என்று நாம் எப்போதாவது சொல்லுவதுண்டா? பிறந்த குழந்தையை வளர்க்கவேண்டும் என்றல்லவா நாம் சொல்லுவோம். இதிலிருந்து என்ன புலனாகின்றது? பிறக்கும் குழந்தைகளை வளர்ப்பதற்கு ஒருவர் தேவை. சீடத்துவப் பணியும் அதுபோன்றதே. எமது கையில் ஒப்புவிக்கப்பட்டதைக் காத்துக்கொண்டு மற்றவர்களுக்கும் போதிக்க நாம் பழகிக்கொள்ளவேண்டும். வாலிபனாகிய தீமோத்தேயுவை உண்மையுள்ள ஒரு சீடனாக பயிற்றுவிப்பதில், பவுல் அதி சிரத்தை எடுப்பதைக் காண்கிறோம். தன்னிடத்தில் கற்றுக்கொள்ளும் சத்திய வார்த்தைகளை கவனத்தோடு காத்துக்கொள்ளவும், அதை மற்றவர்களுக்குப் போதிக்கவும் வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பதை பவுல் வலியுறுத்திக் கூறுகிறார். அதேநேரம் சத்தியத்தைவிட்டு விலகிப்போனவர்களைக் குறித்தும் எச்சரிக்கிறார்.

கர்த்தருக்குள்ளாக மிகவும் அனலாய் இருந்த எத்தனையோ பேர், சிறிது காலத்தில், எல்லாவற்றையும் விட்டு வழிவிலகிப்போய் தேவனை மறந்து வாழுவதை நாம் பலதடவைகளில் கண்டிருக்கலாம். கிறிஸ்துவுக்கு உள்ளாக ஒருவன் பிறக்கும்போது, அவன் குழந்தையாகவே இருக்கிறான். அப்படிப்பட்டவர்களை கிறிஸ்துவுக்குள்ளாக சரியானபடி வளர்ப்பது சீடத்துவத்தில் ஒரு முக்கியமான பணியாகும். சரியான வழியில் வழிநடத்தப்படாத குழந்தை எப்படி வழி தப்பிப்போகிறதோ, அதுபோலவே கிறிஸ்துவுக்குள்ளாகப் பிறந்த ஒருவனை, அவரின் போதனையில் சரியானபடி வளர்க்காவிட்டால் அவனும் வழி தப்பிக் கெட்டுப்போகக்கூடிய சூழ்நிலைகள் ஏராளமாகவே உண்டு. ஆகவே கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கும் நாம், மீட்கப்பட்டவர்களாக தொடர்ந்தும் சரியான பாதையில் நடக்க அவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும்.

சத்தியம் தெளிவாகப் போதிக்கப்படாவிட்டால், அவர்கள் தவறான போதனைகளுக்குச் செவிமடுத்து, வழிதவறிவிட வாய்ப்புகளுண்டு. சோதனைகளுக்கு முகங்கொடுக்கவும், பாவத்தை எதிர்த்து வாழவும், துன்பவேளைகளில் துவண்டுவிடாமல் தேவனுக்குள் உறுதியாக இருக்கவும், ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடையவும், அவர்கள் வழிநடத்தப்படவேண்டியது மிகமிக முக்கியமான விடயம். கிறிஸ்துவின் சீடராகிய எமது கிறிஸ்தவ வாழ்வின் பயணத்தில் இப்படியாக எத்தனை சீடர்களை நாம் தேவனுக்காய் உருவாக்கி இருக்கிறோம் என்பதைக்குறித்து சிந்தனை செய்வோம். நாம் மாத்திரம் கிறிஸ்துவைப் பின்பற்றினால் போதுமா? மனந்திரும்பியவர்களையும் அந்த சீடத்துவத்திலே வளர்க்க இன்றே முன்வருவோமாக.

"அன்பின் ஆண்டவரே, எனது கையில் நீர் தந்திருக்கும் பொறுப்புக்களை செம்மையாய்ச் செய்ய உமது பெலனைத் தாரும் ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
7
திங்கள்

வாசிப்பு: 1தெசலோனிக்கேயர் 1:1-10

# ஜெபத்திலே தாங்குதல்

"எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்." (1தெச. 1:4)

தேவனுடைய பிள்ளைகளாகிய எங்கள் ஒவ்வொருவரிடமும் தேவன் சீஷத்துவப் பணியைக் கொடுத்திருக்கிறார். தேவனைப் பின்பற்றும் சீடர்களாகிய நாம், இன்னும் பல சீடர்களை எங்களுக்காக அல்ல, தேவனுக்காக உருவாக்க, பயிற்றுவிக்க தேவன் எம்மை அழைத்திருக்கிறார். நாம் பயிற்றுவிக்கும் ஒவ்வொருவருக்காகவும் இடைவிடாமல் ஜெபிப்பது எம்மேல் விழுந்த கடமை. நம்மால் வழிநடத்தப்படுவோருக்கு ஜெபத்தின் முக்கியத்துவத்தைச் சொல்லிக் கொடுக்கவேண்டிய நாம், எமது வாழ்வில் ஜெபத்துக்கு முதலிடம் கொடுத்திருக் கிறோமா? நாம் வழிநடத்துகிறவர்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறோமா?

இயேசுவானவர் பன்னிரண்டு சீடர்களைப் பயிற்றுவித்து, அவர்களுக்கு ஆலோசனை கொடுத்தார்; கடிந்துகொண்டார்; ஜெபத்தின் முக்கியத்துவத்தைச் சொல்லிக்கொடுத்தது மட்டுமன்றி, ஜெபிக்கவும் கற்றுக்கொடுத்தார் என்று காண் கிறோம். நம்மால் வழிநடத்தப்படுவோருக்கு சத்தியத்தைச் சொல்லிக் கொடுப்ப தோடு எமது கடமை முடிந்துவிடவில்லை. இந்தப் பாவமான உலகில் அவர்கள் வழிதப்பிப் போகாதவாறு அவர்களைத் தொடர்ந்தும் ஜெபத்தில் தாங்குவது எம் மீது விழுந்த கடமையே. பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதியபோது, "எங்கள் ஜெபங்களில், இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்க ளெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்" என்றும், பிலிப்பியருக்கு எழுதியபோது, "நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி" (பிலி.1:4). என்றும் குறிப்பிட்டுள்ளார். பவுல் எத்தனையோ இடங்களுக் குச்சென்று, எத்தனையோ பேர்களை தேவனுக்குள்ளாக வழிநடத்தியிருக்கிறார். அதேசமயம் அவர்களுக்காக ஜெபிப்பதற்கும் அவர் எவ்வளவு முக்கியத்து வத்தைக் கொடுத்திருந்தார் என்பதை சிந்தித்து பாருங்கள்.

இன்று ஜெபம் இல்லாமலேயே ஊழியம் செய்வோர் எத்தனைபேர்! வெளிநாட்டுப் பணம் இருந்தால் ஊழியத்தை வெற்றியாக செய்துவிடலாம் என்ற குருட்டு நம்பிக்கையில் வாழுவோர் எத்தனைபேர்! தேவனுக்காய் பணியாற்று வோருக்கு, அதே தேவனுடன் உறவில்லாவிட்டால் அவர்கள் செய்யும் அந்தப் பணியினால் என்ன பயன்? நாம் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்? பவுலின் ஜெப வாழ்வின் உதாரணத்தை நாமும் பின்பற்றப் பழகிக்கொள்ளுவோம். சீடத்துவ பணியை பக்தியோடு முன்னெடுப்போமாக.

"கர்த்தாவே, என்னிடம் நீர் தந்திருக்கும் பணியை, ஜெபத்தோடுகூட நிறைவேற்றும்படி, என் வாழ்வில் முதலாவது ஜெபத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க எனக்கு உதவி செய்தருளும், ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
**8**
செவ்வாய்

# துன்பங்கள் வந்தாலும்...

"நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்." (சங்கீதம் 34:19)

குருவைப் பின்பற்றிச் செல்லும் சீடன், குரு நடந்த வழியே தானும் நடக்கவேண்டும் என்றே பிரயாசிப்பான். குரு தரையிலே படுக்கும்போது, சீடன் தான் மெத்தையிலே படுக்கப்போகிறேன் என்று சொல்லமுடியுமா? முடியாதே! எமது குருவாகிய இயேசு எத்தனையோ பாடுகளுக்கூடாகக் கடந்து சென்றாரே! அவர், தன்னைப் பின்பற்றி, சிலுவையைச் சுமந்து வரும்படிக்கு எம்மை அழைத்திருக்க, நாம் சொகுசு வாழ்வை நோக்கி ஓடுவதேன்? வாழ்விலே துன்பங்கள் வரும். ஆனாலும் அவற்றின் மத்தியிலும் எம்மோடுகூட இருக்க எம்மைப் பெலப்படுத்த ஒருவர் உண்டு என்பதை நாம் ஒருநாளும் மறக்கக்கூடாது. சங்கீதத்தில் சொல்லப்பட்டிருப்பது என்ன? நீதிமானுக்கு துன்பங்கள் அநேகம் வருமாம்; ஆனாலும் அவைகள் எல்லாவற்றிலும் நின்றும், தேவன் அவனை விடுவிப்பாராம். நாம் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காணலாம்.

இந்தச் சங்கீதத்தை தாவீது, ஒரு சந்தோஷமான மனநிலையில் பாடவில்லை. பைத்தியக்காரனைப்போல வேஷமிட்டு, அபிமலேக்கினால் துரத்திவிடப்பட்ட ஒரு சூழ்நிலையிலேயே இதனை பாடிவைத்தார். எல்லாச் சூழ்நிலையின் மத்தியிலும் தாவீது தேவன்மீது கொண்டிருந்த விசுவாசத்தையே இது எமக்கு வலியுறுத்திக் காட்டுகிறது. ஒரு உண்மைச் சீடன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ பிரயாசப்படும்போது, பாவமான உலகில் அவன் பாவத்துக்கு எதிராக எதிர்நீச்சல் போடவேண்டித்தான் வரும். அதனால் வரும் சகல துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் அவன் பயப்படக்கூடாது. தேவனை அதிகமாய் நேசிக்கும் 80 வயது நிரம்பிய ஒரு பெரியவர், வீதியிலே சைக்கிளில் செல்லும்போது சுட்டுக்கொல்லப்பட்டார். ஆனால் அவர் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தை, வசனம் 7ல் சொல்லப்பட்ட "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" என்பதாகும். அப்படியானால் தேவவார்த்தை பொய்யாகிவிட்டதா? இல்லவே இல்லை. இந்த வார்த்தை பொய்யல்ல. உலகத்தில் உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு என்று ஆண்டவர் சொன்ன அந்த வார்த்தையும் பொய்யல்ல.

உண்மைச் சீடனாக ஆண்டவருக்காய்ப் பாடுகள் அனுபவிக்க எம்மை அவர் கரத்தில் ஒப்புக்கொடுக்க நாம் ஆயத்தமா? நீதியின் தேவனுக்கு சீடராய் இருக்க அழைக்கப்பட்ட நாம், எமது வாழ்வின் அநீதிகளைக் களைந்து, அவருக்குப் பணிசெய்ய பாரத்தோடு புறப்படுவோம். "நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு. மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்று சொன்னவர் நம் குரு. அவரது சீடர்களாகிய நாம் இக்கடைசிக் காலத்திலே கால்நீட்டிப் படுத்து உறங்குவது எப்படி?

"ஆண்டவரே, எத்துன்பத்திலும் உம் வழிசென்று, பாடனுபவிக்கும் சீடனாய் உம்மைப் பின்பற்றி வாழுகின்ற ஒருவனாக என்னை உருவாக்கும், ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
**9**
புதன்

வாசிப்பு: சங்கீதம் 96:1-13

# சுவிசேஷமாய் அறிவியுங்கள்

"நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்." (சங்கீதம் 96:2)

அறிவுபூர்வமாக நாம் சொல்லும் காரியத்துக்கும், அனுபவரீதியாக நாம் சொல்லும் காரியத்துக்கும், இன்னுமொருவர் சொல்வதைக் கேட்டுச் சொல்வதிலும், அதையே எமது வாழ்வில் அனுபவித்துச் சொல்வதற்கும் நிறையவே வித்தியாசம் உண்டு. சுவிசேஷம் என்பது இன்னுமொருவர் சொல்வதை கேட்டு சொல்வது அல்ல; அதை நாம் அனுபவித்துச் சொல்லுவதே சாலச் சிறந்தது. பாவிகளாகிய எம்மை மீட்கும்பொருட்டு, ஆண்டவராகிய இயேசு, பரலோகத்தின் மேன்மையைத் துறந்து, இவ்வுலகில் மானிடனாய்ப் பிறந்து, எமது பாவங்களைச் சுமந்து சிலுவையிலே மரித்து, மூன்றாம் நாள் உயிரோடே எழுந்து, இன்றும் ஜீவிக்கிறார். அவரிடம் எமக்குப் பாவமன்னிப்பு உண்டு. இதனை விசுவாசித்து ஆண்டவரைத் தமது இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிற எவரும் இரட்சிக்கப்பட்டு தேவ பிள்ளைகளாகிறார்கள். இதுவே சுவிசேஷம்.

ஒரு கேக் துண்டைப் பார்த்து, இது ருசியானது என்று யாரும் சொல்லலாம். ஆனால் அதனை ருசிபார்த்தால்தான் உண்மையான ருசியை அனுபவிக்க முடியும். அப்படியே சுவிசேஷத்தினால் உண்டாகும் மகிழ்ச்சியும் இன்னுமொருவர் சொல்வதைக் கேட்பதில் மாத்திரமல்ல, அதை ஏற்றுக்கொண்டு, அதன்மூலம் தேவன் தரும் உண்மையான விடுதலையை வாழ்வில் அனுபவிப்பதிலும், அதே சுவிசேஷத்தைப் பிறருக்கும் சொல்லி, அவர்களையும் அந்த விடுதலைக்குள் வழிநடத்துவதிலுமேயே தங்கியுள்ளது.

நாம் ஒரு இடத்துக்கு பஸ்சில் செல்ல வேண்டுமானால், அதற்குரிய பிரயாணச் சீட்டை வாங்கி, ஆசனத்தில் அமர்ந்திருப்போம். பஸ்சில் பிரயாணம் செய்யும் மற்றவர்களைக் குறித்து நாம் கவலைப்படுவதில்லை. அவர்கள் எங்கு போகிறார்கள் என்பதைக்குறித்து எமக்குக் கவலையில்லை. ஆனால், நாம் செல்லவேண்டிய இடத்துக்குச் சீக்கிரமாய் சென்றுவிட்டால் போதும் என்றவொரு மனநிலையில் அமர்ந்திருப்போம். இதுபோன்று எமது இரட்சிப்பின் வாழ்விலும், நாம் இருந்துவிடமுடியாது. கிறிஸ்துவின் சீடனின் பொறுப்பு யாதெனில், கிறிஸ்துவின் மீட்பை, தன் வாழ்வில் அனுபவிப்பதுடன், பலருக்கும் சுவிசேஷத்தை அறிவித்து அவர்களையும் கிறிஸ்துவின் அன்புக்குள் கொண்டுவரவேண்டும். நற்செய்தியைப் பிரசித்தப்படுத்துவது, எம் ஒவ்வொருவர் மீதும் விழுந்துள்ள தலையாயக் கடமை. அதை நாம் மறந்து வாழலாமா? நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன், இனி நானும் என் தேவனும் என்று சொல்லி, ஒரு சுயநலமான வாழ்வு வாழ தேவன் நம்மை அழைக்கவில்லை. நாளுக்குநாள் எமது இரட்சிப்பை நாம் சுவிசேஷமாய் அறிவிக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம். எமது அழைப்புக்கு நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்போமா?

"என்னை நம்பி அழைத்த அன்பின் தேவனே, உமக்காய்ப் பலரை உம்மண்டை அழைத்துவர எனக்கு உதவிசெய்தருளும், ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: லூக்கா 2:46-52

செப்
10
வியாழன்

# எமது பொறுப்பு

'உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள். உன்னைப் பெற்றவள் மகிழுவாள்.' (நீதிமொழிகள் 23:25)

பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் இவ்வுலகத்தில் வாழும் எம்மிடம், 'உங்களது பொறுப்புத்தான் என்ன' என்று கேட்டால், 'என் குடும்பத்தைப் பராமரிப்பது, என் பிள்ளைகளைப் பொறுப்புடன் வளர்ப்பது' என்போம். இன்னும் சிலர், 'படித்து நல்ல நிலமைக்கு வருவது, நல்ல உத்தியோகத்தைத் தேடிக் கொள்வது...' என்று சொல்வார்கள். யாராவது, 'தேவனுடைய காரியங்களில் ஈடுபட்டு அவருக்காக மக்களைக் கண்டுபிடிப்பதுதான் என் பொறுப்பு' என்று சொல்லுவோமா? ஏன் நாம் சொல்லுவதில்லை? இதுவும் எமது முக்கியமான தொரு பொறுப்பு என்பதை நாம் ஏன் உணர்ந்து கொள்வதில்லை?

கிறிஸ்து இவ்வுலகிற்கு தனது பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே வந்தார். அந்த தாகம் அவரது குழந்தைப் பருவமான பன்னிரண்டு வயதிலேயே வெளிப்பட்டது. அந்த தாகமானது, மரணபரியந்தமும் பிதாவின் சித்தத்தை மட்டுமே செய்ய அவரை உந்தித் தள்ளியது. இன்று எமது பன்னிரண்டு வயதுக் குழந்தைகளின் விருப்பம் என்ன? ஒரு குழந்தை ஸ்பைடர்மேன் (spider man) உடுப்புத்தான் வேண்டும் என்று அடம்பிடிக்கிறது. இன்னுமொரு குழந்தை பிட்ஸ்சா (pizza) வாங்கித்தந்தால்தான் ஆலயம் வருவேன் என்கிறது. நாமும் என்ன செய்கிறோம், குழந்தைதானே, பதினெட்டுவயது வந்து பெரியவனானதும் தானாகவே தேவனுடைய காரியங்களைப் புரிந்துகொண்டு விடுவான் என்று சொல்லி கண்டும் காணாதவர்கள்போல இருந்துவிடுகிறோம். பின்னர் பதினெட்டு வயதாகும்போது, அவனுக்காக நாம் கண்ணீர் விடுவதில் என்ன பயன்?

பிரியமானவர்களே, வேதம் இவ்விதமாய்ச் சொல்லுகிறது. "நம்பிக்கை யிருக்கு மட்டும் உன் மகனைச் சிட்சைசெய்." (நீதி. 19:18). பிள்ளைகளை கர்த்தருக்குரியவர்களாய் வளர்ப்பது, பெற்றோராகிய எமது கைகளில் தேவன் தந்துள்ள ஒரு முக்கிய பொறுப்பாகும். அத்தோடு நமது பிதாவின் சித்தத்தைச் செய்வதும், சுவிசேஷத்தை அறிவிப்பதும்கூட எமது பொறுப்புத்தான். இந்த பெரிய பொறுப்பைச் செய்யக்கூடிய நல்ல சீடராக, எமது பிள்ளைகளையும் சிறுவயது முதல் பயிற்றுவிக்கும் பொறுப்பு பெற்றோராகிய எமது கைகளிலேயே கொடுக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் தாமாக வளர்ந்து வர அவர்கள் ஒன்றும் மரஞ்செடிகள் அல்ல. அவர்களை கர்த்தருக்குரியவர்களாக நாம்தான் வளர்க்க வேண்டும். இதுவும் பெற்றோராகிய எம் ஒவ்வொருவர் கையிலும் கொடுக்கப்பட் டுள்ள பாரிய பொறுப்பு என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

"கர்த்தாவே, நான் என் பிதாவாகிய உமக்குக் கீழ்ப்படிந்து உமது சித்தத்தை செய்வதுடன், நீர் தந்த பிள்ளைகளைக் குறித்த பொறுப்பை உணர்ந்துசெயற்பட என்னை நீரே வழிநடத்தியருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
11
வெள்ளி

வாசிப்பு: ஏசாயா 50:4-6

# காலைதோறும் எழுப்புகிறார்

காலைதோறும் என்னை எழுப்புகிறார். கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல. நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார். (ஏசாயா 50:4)

மறுமலர்ச்சிக் கூட்டத்துக்காக ஜெபிக்க வந்திருந்த ஒரு சகோதரி, "இன்று என்னை யாரோ தட்டி எழுப்பியதுபோல அதிகாலை இரண்டு மணிக்கே எழுந்துவிட்டேன். இக்கூட்டங்களுக்காக ஜெபிக்கவே ஆண்டவர் எழுப்பியிருக்கி றார் என்று எண்ணி ஜெபித்தேன்." என்று தனது சாட்சியைப் பகிர்ந்துகொண்டார். "நான் இரவில் ஜெபித்துவிட்டுப் படுத்தால், அதிகாலையில் ஆண்டவர் என்னை எழுப்புகிறார்" என்பது இன்னுமொரு சகோதரனின் அனுபவம். நானும்கூட அதிகாலையில் இத்தனை மணிக்கு எழும்பி இன்ன காரியத்துக்காக ஜெபிக்க வேண்டும் என்று நினைத்து அலாரத்தை வைத்துப்படுத்தாலும், சிலவேளை களில் அலாரம் அடிப்பதற்கு ஐந்து, பத்து நிமிடத்துக்கு முன்பதாகவே நல்ல விழிப்பு வந்துவிடும். இப்படியாக எத்தனை எத்தனையோ அனுபவங்கள்.

சாதாரணமாக குடும்பங்களில், பிள்ளைகள் எங்கு செல்லவேண்டியி ருந்தாலும், அல்லது கணவர் எங்கு செல்லவேண்டியிருந்தாலும், காலையிலே இத்தனை மணிக்கு எழுப்புங்கள் என்று தாயானவளிடமே சொல்லிப்படுப்பார்கள். அவளும் காலையிலே எழுந்து அந்தந்த நேரத்தில் அவர்களை எழுப்பி, அவர்க ளுக்குச் செய்யவேண்டியவற்றைச் செய்து, அவர்களை வழி அனுப்பிவைப்பாள். அதுபோலவே ஆண்டவரும், எம்மை ஒரு நல்ல பயிற்சிக்காக காலைதோறும் எழுப்புகிறாராம். இளைப்படைந்தவனுக்கு சமயத்துக்கு ஏற்ற வார்த்தை சொல் லும்படிக்கு எமக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளி, கற்றுக்கொள்ளுகிறவர் களைப்போல நாம் கேட்கும்படிக்கு எமது செவியையும் கவனிக்கச் செய்கி றாராம். ஒரு குருவானவர் தனது சீடனுக்கு எப்படிப் பேசவேண்டும் என்றும், எதைப் பேசவேண்டும் என்றும், எதற்குச் செவிசாய்க்கவேண்டும் என்றும், எதைக் கேட்கக்கூடாது என்றெல்லாம் பயிற்சி கொடுப்பதுபோல ஆண்டவரும் தமது பிள்ளைகளை காலைதோறும் எழுப்பிக் கற்றுக் கொடுக்கிறார். இது எவ்வளவு ஆசீர்வாதம் பார்த்தீர்களா?

யோபுவின் சிநேகிதர்கள் போன்று இன்று நாம் இளைப்படைந்தவர்க ளுக்கு ஆறுதல் சொல்வதாகப்போய், எதை எதையோ பேசி, அவர்கள் மனதை நோகப்பண்ணி, வேதனைப்படுத்திவிட்டு வந்துவிடுகிறோம். கேட்க வேண்டிய சத்தியத்தை விட்டுவிட்டு கேட்கக்கூடாத எதை எதையோ கேட்டு எங்களை நாங்களே கறைப்படுத்திக் கொள்ளுகிறோம். இந்த நிலைதான் மாறவேண்டும். சரியானவற்றைக் கற்றுக்கொள்ளவேண்டுமானால் கற்றுக்கொள்ளும் மனதுடன், பிறருடைய இடையூறு இல்லாது, காலைதோறும் எழுந்து, தேவபாதத்தில் நாம் அமர்ந்திருந்து, எம்மை நாமே ஆராய்ந்து பார்க்கவேண்டும்; செய்வோமா?

"அதிகாலையில் எழுந்து, மரியாளைப்போல உம் பாதம் அமர்ந்து நலமான தைக் கற்றுக்கொள்ள என்னைப் பயிற்றுவியும் ஆண்டவரே. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
12
சனி

# கர்த்தருக்குப் பயப்படுதல்

'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.'
(நீதிமொழிகள் 1:7)

தன் நண்பர்களுடன் அரட்டையடித்து, பெரிய சத்தமாகச் சிரித்துக் கொண்டிருந்த மகன், தனது தகப்பன் வருவதைக் கண்டதும், மிகவும் அமைதி யானான். தகப்பனார் அவ்விடத்தைக் கடந்து சென்றதும், அவனது நண்பர்கள் "அப்பாவைக் கண்டதும் அமைதியாகிவிட்டாய். அப்பா என்றால் அவ்வளவு பயமா?" எனக் கிண்டல்பண்ணத் தொடங்கினார்கள். அதற்கு அவன், "பயமெல் லாம் இல்லை; ஒரு மரியாதைதான்" என்றான். அதேபோல் கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது, கர்த்தரைப் பார்த்து பயந்து ஓடுவதல்ல. மாறாக அவருக்கு உண்மையுள்ளவனாக, அவர் வழியில் நடப்பவனாக, அவரை மகிமைப்படுத்தி வாழுவதைத்தான் குறிக்கும். கர்த்தரின் சீடனானவன் அவருக்குப் பயந்து வாழ அழைக்கப்பட்டிருக்கிறான்.

பாவமான இவ்வுலகில் வாழும் எமக்கு, பாவத்திலிருந்து விலகி, கட்டுப்பாடுடனான வாழ்வை வாழ, நமக்கு அவசியமானது, தேவபயமும் அவர் எமக்காகத் தந்துள்ள வார்த்தைகளுமேயாகும். அதைக் கிரமமாகப் படிக்கத் தியானிக்க நேரம் ஒதுக்கிக்கொள்ள வேண்டியது மிக அவசியம். எந்தக் காரியத் தைச் செய்தாலும், என்ன தீர்மானத்தை எடுத்தாலும், எங்கு சென்றாலும் கர்த்தர் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்ற உணர்வோடு வாழுதலும், கர்த்தருக்குப் பிரியமற்ற, கற்பனைகளுக்கு முரணானவற்றைச் செய்யாமல் வாழுதலுமே கர்த்தருக்குப் பயப்படும் பயம். தேவனுடைய கையிலிருந்து அதி உன்னத ஞானத்தைப் பெற்றுக்கொண்ட ஞானியாகிய சாலொமோன்கூட, "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று எழுதியுள்ளார். உங்கள் வழிகளிலெல்லாம் ஞானமாய் வாழ கர்த்தருக்குப் பயந்து நடக்கப் பிரயாசப்படுவீர்களா? உங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்குரிய போதனையி லும், சிட்சையிலும் வளர்த்து அவர்களைச் சிறுவயதுமுதலே கர்த்தருக்குப் பயப்படும் பிள்ளைகளாக வளர்க்க முயற்சி செய்வீர்களா? "வெள்ளம் வந்தபின் அணைகட்ட முடியாது" அதுபோலவே காலங்கடந்தபின் பிள்ளைகளை நினைத்து கண்ணீர் வடிக்கும் பெற்றோரின் நிலை கவலைக்கிடமானது.

பிரியமானவர்களே, "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." (நீதி. 22:6). கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாதபட்சத்தில், ஒருவன் கர்த்தருக்குச் சீடனாய் இருக்கமுடியாது. ஏனெனில் குருவுக்குப் பயந்து நடப்பவனே சீடன். ஒரு நல்ல சீடனாய் நாம் குருவுக்குக் கொடுக்கவேண்டிய கனத்தைக் கொடுத்து, நமது பிள்ளைகளும் தேவபயத்தில் வளர முழுப் பிரயாசமும் எடுப்போமாக.

"உமக்குப் பயந்து உமக்குப் பிரியமானதைச் செய்து வாழ எனக்குக் கிருபை தாரும் என் அன்பின் ஆண்டவரே. ஆமென்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
13
ஞாயிறு

வாசிப்பு: மாற்கு 1:16-20

# என் பின்னே வாருங்கள்!

'இயேசு அவர்களை நோக்கி: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.' (மாற்கு 1:17)

"என் பின்னே வாருங்கள்" என்ற இந்தக் கூற்றை, உலகத்திலே இன்று அநேகர் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் கூறுவது என்ன? என் பின்னே வாருங்கள், உங்களைச் செல்வந்தர் ஆக்கிவிடுகிறேன்; என் பின்னே வாருங்கள் உங்கள் கஷ்டங்களெல்லாம் தீர்ந்துவிடுகிறேன். இவைகள்தான் அவர்களின் அழைப்பு. ஆனால் ஆண்டவரின் அழைப்போ சற்றே வித்தியாசமானது. அது இவ்வுலக வாழ்வுக்குரியதான அழைப்பல்ல; அது நித்திய ராஜ்யத்துக்குரியதான அழைப்பு. சாதாரண மீனவர்களை, தம்மைப் பின் செல்லும் சீடராக அழைத்த ஆண்டவர் உலகக் காரியங்களை அவர்களுக்கு வாக்களிக்கவில்லை. மாறாக, 'உங்களை நான் மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்' என்கிறார். எதற்காக மனுஷரைப் பிடிக்கவேண்டும்? தேவனைவிட்டு தொலைந்துபோன மனுஷரை மீண்டுமாக ஆண்டவருக்காகவே பிடித்து, நித்திய ராஜ்யத்தின் பிரஜைகளாக மாற்றுவதற்காகவே. இந்த உன்னதமான பணியை நிறைவேற்றவே ஆண்டவர் சீடரை அழைத்தார். எனவே சீடத்துவத்தின் மிக முக்கிய பணியானது, மனுஷரைத் தேவனுக்காகப் பிடிப்பதாகும்.

இன்று, "ஆண்டவரின் சீடன் நான்" என்று சொல்லிக்கொள்ளும் நாம், அவருக்காகச் செய்யும் பணிதான் என்ன? ஊழியம் என்ற போர்வையின் கீழ் நாம் பணம் சம்பாதிக்கிறோமா? அல்லது வெளிநாட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்ள ஊழியத்தை ஒரு கருவியாகப் பாவிக்கிறோமா? ஊழியக்காரன் என்ற ரீதியில் ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார் என்று சொல்லிக்கொண்டு சகல வசதிகளோடும் உலகத்து ஆசீர்வாதங்களை அனுபவித்து மகிழ்கிறோமா? ஆண்டவரின் அழைப்பை மறந்து, எமது ஆசைகளை நிறைவேற்ற எத்தனிக்கிறோமா? நாம் எங்கே இருக்கிறோம் என்பது, எமக்கும் ஆண்டவருக்கும் மட்டும் தெரிந்த உண்மை. ஆண்டவர் எம்மை எதற்காக அழைத்திருக்கிறார் என்பதை சற்றே சிந்தித்துப் பார்த்து மனந்திரும்புவோமாக.

"வசதியைத் தேடி ஓடாதே, அது தொடுவானம்" என்று பாடிவைத்தார் ஒரு பக்தர். 'என் பின்னே வாருங்கள்' என்று அழைத்த ஆண்டவரின் அந்த உன்னதமான அழைப்பை மறந்து, எங்கேயோ நாம் ஓடிக்கொண்டிருந்தால், எமது பாதையை மாற்றி, இன்றே ஆண்டவரின் அழைப்புக்குக் கட்டுப்படுவோம். அவரது அழைப்புக்கு நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தால், அவர் எமது காரியங்களைப் பார்த்துக்கொள்வார். இன்று நாம் யார் பின்னே ஓடிக்கொண்டிருக்கிறோம்? உண்மையுள்ளவர்களாய் இயேசுவின் பின் நடப்போமா!

"உமது அழைப்புக்குச் செவிகொடுத்து, உண்மையாய் வாழ, உமக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ள எனக்குப் பெலன் தாரும் என் அன்பின் ஆண்டவரே, ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: யோவான் 21:14-22

செப்
14
திங்கள்

# நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?

'அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.'
(யோவான் 21:16)

மிகவும் அகோரமாகக் காட்சியளித்த தனது தாயின் முகத்தைப் பார்த்து துக்கப்பட்ட மகன், ஒருநாள், 'அம்மா இவ்வளவு அழகான முகத்தோடு என்னைப் பெற்றெடுத்த உங்களின் முகம் இப்படி அலங்கோலமாகவும், அகோர மாகவும் இருக்கக் காரணம் என்ன' என்று கேட்டான். அதற்கு அவள், 'மகனே, நீ நெருப்பிலே சிக்கியபோது உனது அழகிய முகத்தைக் காப்பாற்றுவதற்காக, எனது அழகிய முகத்தைப் பாராமல் அந்நெருப்பிலே பாய்ந்து உன்னை எனது மார்போடு அணைத்துக்கொண்டேன். உன்னை தீண்டவேண்டிய அந்த அக்கினி ஜுவாலை எனது அழகிய முகத்தை எரித்துவிட்டது' என்றாள். 'அம்மா உங்க ளுக்கு என்னில் அத்தனை அன்பா' என்று கதறி அழுதான் மகன். ஆம், எம்மீது விழவேண்டிய பாவத்தின் விளைவுகளை, எம்மைக் காப்பாற்றுவதற்காக தம்மீது சுமந்து மரித்தாரே ஆண்டவர்; எதற்காக? அவர் எம்மீது கொண்ட ஆழமான அன்பின் நிமித்தமல்லாமல் வேறு எதற்காக? அதை எப்போதாவது நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

வழிதப்பிப்போன ஆடுகளைப்போல ஆண்டவரைவிட்டு வழிவிலகி, எல்லாத் தகுதியையும் இழந்துவிட்டிருந்த எம்மில், அளவிடமுடியாத பாசங் கொண்டதால், பிதாவானவர் தமது சொந்தக் குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பி எம்மை மீட்டிடச் சித்தங்கொண்டார். அவரது திருச்சித்தத்திற்கு முழுவதுமாக கீழ்ப்படிந்த குமாரனாகிய இயேசுவும் எம்மீது கொண்ட அன்பினால் தமது உயிரைச் சிலுவையிலே மாய்த்தார். அதுபோலவே நாமும் எந்தவித எதிர்பார்ப் பும் இல்லாமல் தேவன்மீதுகொண்ட அன்பினாலே அவருக்கு ஊழியம்செய்யக் கடமைப்பட்டுள்ளோம். பேதுருவிடம் ஆண்டவர் கேட்ட மூன்று கேள்வியுமே, 'என்மீது அன்பாயிருக்கிறாயா' என்பதே. அதே கேள்வியை இன்று ஆண்டவர் எம் ஒவ்வொருவர் முன்பாகவும் வைக்கிறார். நாம் என்ன பதில் சொல்வோம்? ஆண்டவருக்கு உண்மையாய் ஊழியம் செய்ய, அவருக்கு உண்மையான சீடனாய் வாழ, எமக்கு முதல் தேவையானது, அவர் மீது நாம் கொண்டிருக்கும் அன்புதான். ஆண்டவருக்காய் பணியாற்றும் சகோதரனே, சகோதரியே, முதலா வது உன்னை நீயே கேட்டுக்கொள். ஆண்டவரை உண்மையாகவே நீ நேசிக்கி றாயா? அந்த நேசத்தின் அடிப்படையில்தான் உனது பணிகளைச் செய்கிறாயா? அவரது சீடனாக, அவரது ஆடுகளை மேய்ப்பதற்காக அழைக்கப்பட்டிருக்கும் நாம், முழுமனதோடு அவரை நேசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். எம்மை நேசித்து, எம்மையே தேடிவந்த ஆண்டவருக்கு, நாம் நன்றியுள்ளவர்களாக எமது நேசத்தால் பணியாற்றுவோமா.

"முழுமனதோடு உம்மை நேசித்து, அவ்வன்பினால் உமக்குப் பணியாற்ற என்னை அர்ப்பணிக்கிறேன் என் அன்பின் ஆண்டவரே. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்**
**15**
**செவ்வாய்**

வாசிப்பு: அப்போஸ்தலர் 4:1-21

# தைரியமாய் பேசு!

'பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு...' (அப். 4:13)

அறுகின்ற கயிற்றில் தொங்கிக்கொண்டிருப்பவனுக்கும், அலையிலே அடிபட்டுப் போகிறவனுக்கும் தைரியம் என்பது இருக்குமா! இருக்காது. காரணம் அது ஒரு நம்பிக்கையிழந்த நிலை. பாடசாலை விட்டதும் ஒரு இடத்தில் ஏக்கத்துடன் எதிர்பார்ப்புடன் உட்கார்ந்திருந்த பிள்ளை திடீரென எழுந்து, சுட்டித்தனம் பண்ணினால், பிள்ளையை அழைத்துச் செல்ல அப்பாவோ, அம்மாவோ வந்து விட்டார்கள் என்பதுதானே அர்த்தம். நடந்தது என்ன? தனக்கு ஆதரவாக ஒருவர் உண்டென்று அப்பிள்ளைக்கு ஒரு நம்பிக்கை தைரியம் ஏற்பட்டு விடுகின்றது. அதுபோலவே, இயேசுவையே நம்பி, தனது மீன்பிடித் தொழிலைவிட்டு அவருக்குப் பின்சென்ற பேதுரு, இயேசுவைப் பிடிக்கப் போகிறார்கள் என்றதும் தனது வாளை வீசிய பேதுரு, இயேசுவைப் பிடித்தே விட்டார்கள் என்று கண்டதும், நம்பிக்கை இழந்தவராக எங்கே தன்னையும் பிடித்துவிடுவார்களோ என்ற பயத்தினால், இயேசுவையே தெரியாது என்று மறுதலித்த பேதுரு, இப்போது மிகவும் தைரியமாய் நின்று பேசுவதற்கு என்ன காரணம்? இயேசுவின் உயிர்த்தெழுதல் கொடுத்த நம்பிக்கைதான் அது. தன்னோடு ஒருவர் கூடவே இருக்கிறார் என்ற ஒரு தைரியம்தானே அது.

ஒரு சீடனைத் தைரியப்படுத்துபவர் அவனது குருவே. தனது குருவிடமிருந்து கற்றுக்கொண்டவைகளையும், குருவினுடைய போதனைகளையும், தைரியமாக எல்லார் முன்னிலையிலும் பேச சீடனானவன் ஆயத்தமுள்ளவனாயிருக்கவேண்டும். அவன் சோர்ந்துபோகிற வேளைகளிலெல்லாம் அவனுக்கு தைரியம் கொடுப்பவரும், தளர்ந்துபோகிற வேளைகளிலெல்லாம் அவனுக்கு உற்சாகம் கொடுத்து அவனைத் தாங்குகிற சுமைதாங்கியும் அவனது குருவே. அதுபோலவே பேதுரு முற்றிலுமாக இயேசுவில் சார்ந்து நின்றார். உமக்காக உயிரையும் கொடுப்பேன் என்றார். ஆனால் இயேசு, 'சாத்தான் கோதுமையைச் சுளகினால் புடைப்பதுபோல் உங்களைப் புடைக்க உத்தரவு வாங்கிக்கொண்டான், நீ ஸ்திரப்பட்ட பின்பு உன் சகோதரர்களையும் ஸ்திரப்படுத்து' என்றார். தனது சொந்தப் பெலத்தில் நின்று காரியங்களைச் சாதித்துவிடலாம் என்று எண்ணிய பேதுருவுக்கு ஆண்டவர் கொடுத்த ஆலோசனை, முதலாவது தேவனுக்குள்ளாக நீ தைரியப்படு என்பதே.

இன்று நாம் யாரை அல்லது எதனைச் சார்ந்து நிற்கிறோம்? திறமைகளா? பணமா? ஊழியங்களா? அல்லாவிட்டால், என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்றுசொல்லி, தேவபெலத்தில் தங்கி, அவர் தரும் தைரியத்தில், அவரைப் பிரசித்தப்படுத்தி, அவருக்கு உண்மையுள்ள சீடனாய் வாழ பிரயத்தனப்படுகிறோமா?

"உம் ஆசிதாரும், உம் பெலன் தாரும், உம்மோடு வாழும் வாழ்வினைத் தாரும். நீர் தரும் தைரியம் என்னைக் கைதாங்க ஆசி பொழிந்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
16
புதன்



# ஜீவனை இழக்க ஆயத்தமா?

'மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக
என்னத்தைக் கொடுப்பான்?' (மாற்கு 8:37)

போர்ச் சூழலில் இருந்து தப்பிவந்த மக்கள், "எல்லாவற்றையுமே இழந்துவிட்டேன். என் குடும்பம், என் உடலுறுப்புக்கள், என் சொத்துக்கள் அனைத்தும் இழந்துவிட்டேன். இனி இழப்பதற்கு என் உயிரைத்தவிர எதுவுமே இல்லை" என்று மனமொடிந்து பலவாறாகக் கூறினார்கள். இவர்களின் இழப்பு எதிர்பாராத ஒரு அனர்த்தம் போன்றதாகும். ஆனால் இயேசுவின் அழைப்புக்குக் கீழ்ப்பட்டவனின் இழப்பானது சற்றே வித்தியாசமான ஒன்றாகும். ஆண்டவர் இயேசு சொன்னார், 'ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'. இந்த உலகத்திலே எமது ஜீவன் நிரந்தரமாய் இருக்கப்போவது கிடையாது. என்றோ ஒருநாள் அது எம்மை விட்டுப் பிரிந்துபோகும். எனவே இந்த உலகத்திலே தன் ஜீவனை எப்படியெல்லாம் காத்துக்கொள்ள முடியுமோ என்று தன் வாழ்நாள் முழுவதும் அதற்காகவே பிரயாசப்படுகிறவன், மறுவாழ்வைக் குறித்து சிந்திக்கத் தவறியவனாக தன் ஜீவனை இழந்துபோவான். ஆனால் இவ்வுலகில் கிறிஸ்துவுக்காய் தன் ஜீவனை இழந்துபோக ஆயத்தமாய் இருப்பவனோ மறுமையிலே தன் ஜீவனை ஆதாயப்படுத்திக் கொள்ளுவான்.

ஆண்டவருக்குச் சீடனாய் அழைக்கப்பட்டவனின் அழைப்பு, இவ்வுலக வாழ்வுக்குரியதல்ல; அது மறுவாழ்வுக்குரியதாகும். இவ்வுலகில் எமது தேவைகளை ஆண்டவர் சந்திக்கிறார். இவ்வுலகில் வாழுவதற்குத் தேவையானவற்றை ஆண்டவர் எமக்கு ஆசீர்வாதமாகத் தருகிறார். ஆனால் உலக ஆசீர்வாதங்களுக்காகவே நாம் தேவனைத் தேடினால், எமது நிலமை பரிதாபத்துக்குரியது. பிரியமானவர்களே, "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாய் இருப்போம்" (1கொரி. 15:19) என்று பவுல் எழுதியதை சற்றே சிந்தித்துப் பார்ப்போமாக.

பேதுரு கூறியதுபோல நாமும், "நான் ஆண்டவருக்காய் ஜீவனையும் கொடுத்துவிட ஆயத்தமாய் இருக்கிறேன்" என்று வாய்ப்பேச்சாகச் சொல்லிவிடலாம். ஒரு மரமானது எவ்வளவாக நிலத்தினுள் வேரூன்றுகிறதோ அந்தளவுக்குத்தான் அது புயலிலும், சூறாவளிக் காற்றிலும் நின்றுபிடிக்கும். அதுபோலவே நாம் ஆண்டவரிலும் அவரது வார்த்தையிலும் எவ்வளவாக வேரூன்றுகிறோமோ அந்தளவுக்குத்தான் உபத்திரவங்களின் மத்தியிலும் ஆண்டவருக்காய் நின்றுபிடிப்போம். அவருக்காய் ஜீவனையும் இழக்க ஆயத்தப்படுவோம். இதுதானே உண்மை. ஆகவே அவருக்குள்ளாய் வேரூன்ற இன்றே பிரயாசப்படுவோம்.

"எனக்காய் ஜீவன் தந்தவரே, உமக்காக நானும் என் ஜீவனை இழக்க ஆயத்தப்பட என்னைப் பெலப்படுத்துவீராக. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
17
வியாழன்

வாசிப்பு: லூக்கா 6:27-35

# கடினமான உபதேசம்

மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (லூக்கா 6:31)

இன்றைய தியானப்பகுதியிலே, ஆண்டவரின் வார்த்தை சற்றுக் கடினமான உபதேசம்போலத் தோன்றலாம். இன்று நாம் நேசிக்கும் எமது சொந்தக் குடும்பத்துக்குள்ளேயே இக்கட்டளைகளை நிறைவேற்ற நாம் பின்நிற்கிறோம் என்று சொன்னால் அதை எவரும் மறுக்கமுடியாது. இன்று பத்திரிகையில் நாம் வாசிக்கும் செய்தி என்ன? "தன்னை அடித்த கணவனுக்கு உணவில் விஷம் வைத்துக்கொடுத்த மனைவி, தன்னை கண்டித்த ஆசிரியரைக் கல்லால் அடித்த மாணவன். வெளிநாடு ஒன்றில், தன்னைக் கண்டித்த தந்தையை பொலீசில் பிடித்து கொடுத்த மகன்." இப்படியான ஒரு காலகட்டத்தில் வாழும் எமக்கு கிறிஸ்துவின் இந்தப் போதனை கடினமான உபதேசமாகவே தோன்றும்.

நாம் யாருக்குச் சீடராய் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்? தன்னைக் காட்டிக்கொடுக்கப்போகிறவன் என்று தெரிந்தும், அவனது கால்களையும் கழுவி தனது மேலாடையால் துடைத்த அந்த ஆண்டவரின் சீடரல்லவா நாங்கள். தன்னைப் பிடிக்க வாளை உருவி வந்த போர்வீரனின் காது வெட்டி வீழ்த்தப்பட்ட போது, அதை எடுத்து முதலாவதாக அவனுக்கு ஒட்டி அவனைச் சொஸ்தப்படுத்தி, வாளை உருவிய சீடனைக் கடிந்துகொண்ட அந்த கருணை ஆண்டவரின் சீடரல்லவா நாங்கள். அப்படியானால் நாம் எம் குருவின் கட்டளைக்கு அமைந்து நடக்கவேண்டியது எமது பணியல்லவா? ஆண்டவர் எல்லாவற்றிலும் எமக்கு முன்மாதிரியை வைத்துப்போனார். எம்மால் செய்ய முடியாத எதையுமே அவர் எம்மை செய்யும்படிக்கு வலியுறுத்தவில்லை. தேவனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய எம்மை நாம் முற்றிலுமாய் விட்டுக்கொடுக்கும்போது, எம்மைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவின் பெலத்தோடுகூட அனைத்தையும் எம்மால் நிச்சயமாகவே செய்யமுடியும்.

மேலே குறிப்பிட்டுள்ள தியானவசனத்தை "பொன்னான வாக்கு" என்பர். அந்தவாக்கை எமது வாழ்வில் நாம் கடைப்பிடிக்கவேண்டும் என்று நாம் எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? எமக்கு மற்றவர்கள் எப்படியெல்லாம் செய்யவேண்டும் என நாம் நினைக்கிறோமோ, அப்படியே நாமும் மற்றவர்களுக்குச் செய்யவேண்டும். ஆனால் நாமோ எமக்கொரு நியாயம் மற்றவர்களுக்கு ஒரு நியாயம் என்ற போக்கில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆண்டவரின் அன்பு எம்மைத் தேடிவந்த அன்பு. அவருக்குச் சீடராய் இருக்கும் நாங்கள், எமக்காக வாழாமல், ஆண்டவருக்காய், அவரது பணிக்காய், மற்றவர்களுக்காய் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். எமது வாழ்வின் எல்லாச் செயல்களும் நடத்தைகளும் ஆண்டவரின் அன்பை மற்றவர்கள் மத்தியில் பிரதிபலிக்கிறதாக இருக்கட்டும்.

"ஆண்டவரே, எனது வாழ்வின் கடினமான சூழ்நிலைகளில், உம் வார்த்தைக்கு உண்மையுள்ளவனாய் நடந்துகொள்ள உமது பெலனைத் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
**18**
வெள்ளி

வாசிப்பு: அப்போஸ்தலர் 22:1-10

# நான் என்ன செய்யவேண்டும்?

'அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, தமஸ்குவுக்குப் போ, நீ செய்யும்படி நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்...' (அப். 22:10)

வாழ்விலே விரக்தியுற்ற ஒரு பெண், தற்கொலை செய்வதற்காக பல தூக்கமாத்திரைகளை வாங்கிக்கொண்டு வீதியால் சென்று கொண்டிருந்தாள். வழியில் ஒரு ஆலயத்தைக் கடக்கும்போது, அதற்குள் போய்விட்டுச் செல்வோம் என்ற ஒரு எண்ணம் தோன்றவே, ஆலயத்தினுள் பிரவேசித்தாள். அங்கு அமர்ந் திருந்த இன்னுமொரு சகோதரி மூலம் தகுந்த ஆறுதலைப் பெற்ற அவள், தூக்க மாத்திரைகளை அச்சகோதரியின் கைகளில் கொடுத்துவிட்டு, ஒரு புதிய பெண்ணாக தேவனால் தொடப்பட்டவளாக, வாழ்வின் ஒரு புதிய அர்த்தத்தைக் கண்டவளாக அவ்விடம் விட்டுக் கடந்து சென்றாள்.

அன்று சவுல் என்ற வாலிபன், வேதப் பிரமாண சட்டதிட்டங்களின்படி தீர்க்கமாய்ப் போதிக்கப்பட்டு, கமாலியேலின் பாதத்தருகில் கற்றுத் தேர்ந்து, தேவனைக்குறித்து மிக பக்திவைராக்கியம் கொண்ட ஒருவனாக விளங்கினான். கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றி சட்டதிட்டங்களை மீறுவோரை அவன் துன்பப்படுத்தி, கொலைசெய்யவும் துணிகரம் கொண்டிருந்தான். அன்று தமஸ்கு பட்டணத்துக்கு இதே பக்திவைராக்கியத்தோடு புறப்பட்ட அவனை, ஆண்டவர் இயேசு வழியிலே சந்திக்கிறார். "நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்" என்று கேட்ட ஆண்டவருக்கு, சவுல் கொடுத்த மாறுத்தரம், "ஆண்டவரே, நான் என்ன செய்யவேண்டும்." ஆண்டவரோ, 'நீ எழுந்து தமஸ்குவுக்கே போ. நீ செய்யும் படிக்கு நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்' என்றார். தமஸ்குவிலே செய்வதற்காக திட்டமிட்ட காரியங்கள் அனைத்தையும் அந்த இடத்திலேயே கைவிட்டுவிட்டு, கர்த்தரின் சித்தம் செய்வதற்காக, பவுலாக, தனது பயணத்தை தமஸ்குவையே நோக்கித் தொடர்ந்தார் சவுல்.

இன்று சட்டதிட்டங்களுக்கும், பாரம்பரியங்களுக்கும் கட்டுப்பட்டவர்க ளாக தேவனின் அன்பை எமது வாழ்வில் ருசிபார்க்காமல் நாம் இருக்கிறோமா? தேவனுடைய காரியங்களில் இந்தளவுக்குத்தான் ஈடுபடுவது, தேவனை இப்படித் தான் ஆராதிப்பது என்று பலவிதமான சட்டங்களை எம்மைச் சுற்றிப் போட்டுக் கொண்டு அதற்குள்ளே ஒரு கிணற்றுத் தவளைபோல வாழ்ந்துகொண்டிருக்கி றோமா? இவற்றையெல்லாம் விட்டுவிட்டு தேவனின் விருப்பத்தை எம் வாழ்வில் செய்ய, "ஆண்டவரே, நான் என்ன செய்யவேண்டும்" என்று சொல்லி அவர் சித்தம்செய்ய எம் வாழ்வை அர்ப்பணிப்போமா.

சீடனானவன், தனது விருப்பம் செய்கிறவன் அல்ல; தனது குருவின் விருப்பத்தைத் தன் விருப்பமாய்க்கொண்டு செயற்படுகிறவனே சீடன். நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை சிந்தித்து நம்மை ஒப்புவிப்போமாக.

"உம் சித்தத்திற்கமைய எனது வாழ்வினை மாற்றி, உமக்குகந்த பாத்திரமாய் என்னையும் வனைந்து கொள்ளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்**

**19**

**சனி**

வாசிப்பு: சங்கீதம் 32:1-5

# உண்மையான உறவு

'நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்...' (சங்கீதம் 32:5)

தனது வாழ்விலே தேவனிடமிருந்து அதிகளவிலே மன்னிப்பை ருசிபார்த்த தாவீதின் போதக சங்கீதம்தான் இந்த 32வது சங்கீதம். திருமணத்தின்போது, எத்தனையோ பாக்கியங்களைப்பெற்று வாழவேண்டும் என்று பெரியவர்கள் மணமக்களை வாழ்த்துவார்கள். ஏதாவது நல்ல காரியங்கள் நடந்துவிட்டால், நீர் பாக்கியம் பெற்றவர் என்று சொல்வார்கள். ஆனால் இங்கே தாவீது சொல்லுவது என்ன? "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்."

இயேசுவோடு அறையப்பட்ட கள்வர்கள், தங்கள் வாழ்நாளில் எத்தனையோ பாவங்களைச் செய்து, சிறைவாசம் அனுபவித்து, கடைசியில் மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் பாவத்தோடேயே மரித்தான். மற்றவனோ கிறிஸ்துவின் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் பாக்கியம் பெற்றவனாக மரித்தான் என்று காண்கிறோம். தேவனின் அந்தத் தூய்மையான பரிசுத்த பிரசன்னத்தின் முன்னால் வரும்போது எமது பாவங்களும், அக்கிரமங்களும் வெளிப்படையான அழுக்குகளாக எம்முன்னே தோன்றும். தேவனுக்கு முன்பாக நாம் எதையுமே மறைத்துவிடமுடியாது. தாவீது பாவத்தில் விழுந்தபோது, மனுஷரின் பார்வைக்கு தன்னை உத்தமனாகக் காட்டிக்கொண்டு, போரிலே மரித்துப்போன உரியாவின் விதவையாக்கப்பட்ட மனைவிக்கு மறுவாழ்வு கொடுப்பதுபோல காட்டிக்கொண்டு, தந்திரமாய் அவளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டார். ஆனால் தேவனுக்கு முன்பாக, அவரால் குற்றத்தோடு நின்று போராட முடியவில்லை. தான் பாவியென்பதை ஒத்துக்கொண்டவராக, மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு, தேவனுடைய பார்வையிலே பாக்கியம் பெற்றவரானார். அதனால்தானோ என்னவோ "துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்" (சங்.19:13) என்று தனது சங்கீதத்தில் எழுதியுள்ளார்.

ஆண்டவரின் உண்மைச் சீடராய் நாம் வாழவேண்டுமானால், அவருக்கும், எமக்கும் இடையில் எந்த ஒளிவுமறைவுகளும் இருக்கக்கூடாது. அவர் சகலத்தையும் அறிந்த தேவன். அவருக்கு முன்பாக நாம் எதையுமே மறைக்க முடியாது. அவருக்கு முன்பாக அனைத்தையும் அறிக்கையிட்டு முதலாவதாக அவர் தரும் தூய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அவருக்கும் எமக்கு இடையில் உண்மையான ஒரு உறவை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உண்மைச் சீடராய் நாம் திகழமுடியும்.

"என் அன்பின் ஆண்டவரே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டித்து நிலைவரமான ஆவி என்னைத் தாங்கும்படி கிருபைசெய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: ரோமர் 6:10-23

செப்
20
ஞாயிறு

# விடுதலையாக்கப்பட்ட அடிமை

"...நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்." (ரோமர் 6:22)

அடிமைகளை விற்பனை செய்யும் ஒரு இடத்துக்கு வந்த பிரபு ஒருவர், அங்கே நின்ற ஒரு அடிமையை அதிக விலைகொடுத்து வாங்கினார். அவனை வெளியே கூட்டிக்கொண்டு வந்து, இப்போது நீ பயப்படாமல் எங்கேயும் செல்லலாம் என்று சொல்லி அவனுக்கு முழு சுதந்திரமும் கொடுத்து அனுப்பினார். ஆனால் அவனோ, 'இல்லை. இவ்வளவு அதிகமான விலைகொடுத்து வாங்கிய எஜமானாகிய உங்களுக்கே இனி நான் அடிமை' என்று சொல்லி மிகவும் சந்தோஷமாக அவருடனேயே தங்கியிருக்கச் சம்மதித்தான்.

அதுபோலவே, பாவத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாயிருந்த எம்மை, தமது விலையேறப்பெற்ற இரத்தத்தையே கிரயமாகக் கொடுத்து, பாவ அடிமைத்தனத்தினின்று நம்மை விடுதலையாக்கிய ஆண்டவராகிய கிறிஸ்து, அவரது பிள்ளைகள் என்ற உன்னதமான நாமத்தை எமக்குத் தந்திருக்கிறார். இப்படிப்பட்ட ஆண்டவருக்கு நம்மை அடிமைகளாக அர்ப்பணித்து வாழுவதில் எமக்கென்ன தடை? நாம் அவருக்கு அடிமைகளாவதினால் எமக்குக் கிடைக்கும் பலன் பரிசுத்தமாகுதல் என்று பவுல் ரோமருக்கு எழுதுகிறார். பரிசுத்தமாகி வருவதினால் அதன் முடிவு நித்தியஜீவன் எனவும் குறிப்பிடுகிறார். இவ்விதமான ஒரு செயல்முறைக்குள் நம்மை அர்ப்பணிக்க நமக்குத் தயக்கம் ஏன்?

ஆண்டவரின் சீடராய் அழைக்கப்பட்ட நாம் இவ்விதமான ஒரு செயல்முறைக்குள் எம்மை அர்ப்பணித்தால்தான் நாம் அவருக்கு உகந்த நல்ல சீடர்களாக இருக்கமுடியும். அவரின் பரிசுத்தமாகுதல் எமது வாழ்வில் நடைபெறும். அவருக்குச் சீடராகப் பணியாற்றத் தொடங்கும் முன்பு அவரால் மீட்கப்பட்ட பிள்ளைகள் என்ற நிலை எமக்கு வேண்டும். அவருக்கே அடிமையாக வாழ நாம் எம்மை விரும்பி அர்ப்பணிக்கவேண்டும். அன்று மரியாள் ஆண்டவருக்கு "தான் அடிமை" என்று தன்னை அர்ப்பணித்தாள். அந்த அர்ப்பணிப்பு, தேவ திட்டம் இவ்வுலகில் நிறைவேற ஊடகமாயிற்று. மரியாளும் கிருபை பெற்றவளானாள்.

பிரியமானவர்களே, நமது வாழ்வு, நமது அர்ப்பணிப்பு, நமது செயல்கள் நமது சீடத்துவம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? நாம் எங்கே நின்றுகொண்டிருக்கிறோம்? சற்றே சிந்தித்துப் பார்ப்போம். இரட்சிக்கப்பட்ட புதிதில் ஆண்டவருக்காக தீவிரமாக செயற்பட்ட நாம், இப்போது ஓய்ந்துவிட்டோமா? நம்மை விடுவித்தவருடைய விருப்பப்படி ஜீவிப்பதில் நமக்கு ஏன் தயக்கம்? இக்கடைசிக் காலத்தில்தான் கர்த்தருக்காய் தீவிரமாகச் செயற்படவேண்டும்.

"அன்பின் தேவனே, என்னை மீட்டுக்கொண்ட உமது அன்புக்கே என்னை அடிமையாகத் தருகிறேன். உமக்காக தினமும் என் வாழ்நாளெல்லாம் வாழ வாஞ்சிக்கிறேன். என்னை வழிநடத்துவீராக. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
21
திங்கள்

வாசிப்பு: மத்தேயு 16:24-28

# கிரியைக்குத் தக்க பலன்

மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார். அப்பொழுது. அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். (மத்.16:27)

இயேசுவானவர் கூறிய ஒரு விடயத்தை நினைத்துப் பார்ப்போம். ஒருவன் தனது களஞ்சியங்களைப் பெருப்பித்துக் கட்டி, அதிக தானியங்களைச் சேர்த்து வைத்து, 'ஆத்துமாவே, அநேக நாட்களுக்குத் தேவையானவைகள் உனக்கு வைக்கப்பட்டுள்ளது. சந்தோஷமாகக் களிகூரு' என்று கூறினான். தேவன் அவனைப் பார்த்து, 'மதிகேடனே, இன்றைக்கு உன் ஜீவன் எடுத்துக் கொள்ளப்படுமானால், நீ சேர்த்து வைத்தவைகள் யாருடையவையாகும்' என்று கேட்டார். நாமும் பல தடவைகளிலும் எமது அழைப்பை மறந்தவர்களாக, இந்த உலகம்தான் எமக்கு நிரந்தரம் என்ற எண்ணத்தில், உலகத்தின் இன்பங்களுக்குள் பிடிபட்டு எமது வாழ்நாட்களை வீணடித்து விடுவதுண்டு. இவ்வுலகில் நாம் ஒரு கூடாரவாசியைப்போல இருக்கிறோம் என்பதை எப்போதும் ஞாபகத்தில் நாம் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

மனுஷகுமாரன் மகிமையோடே வரும்போது, கிரியைகளுக்குத்தக்க பலனை அளிப்பார் என்று இயேசு கூறியுள்ளார். அந்தச் சிந்தனையோடு நாம் வாழுகிறோமா? அல்லது எமது வாழ்நாட்கள் வெறுமனே பிரயோஜனமற்றதாக கழிந்துகொண்டு போகிறதா? இன்று உலகத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்குமே ஒரு நாளைக்கு இருபத்திநான்கு மணிநேரம்தான் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் பயனுள்ளதாக்குவதும் பயனற்றதாக்குவதும் எமது கைகளிலேயே சுதந்திரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் என்ன செய்கிறோம்?

இயேசுவின் சீடராக அழைக்கப்பட்ட நாம், எமது சீடத்துவப் பணியை மறந்து தூங்கிக்கொண்டிருக்கும் காலமல்ல இது. எழுந்து கிறிஸ்துவுக்காய் பிரகாசிக்கவேண்டிய காலமாகும். மடிந்துபோகும் ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்காய் ஆதாயப்படுத்திக்கொள்ள வேண்டிய காலம் இது. எமது கிரியைகளுக்குத்தக்க பலனை அளிக்க கிறிஸ்து வரும்வேளையில் நாம் வெட்கத்தோடே அவர் முன்பாக நிற்கவேண்டியது என்ன? எமது கையில் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களையும், ஊழியங்களையும் குறித்துக் கரிசனையற்றவர்களாய் இருப்பின் தேவனுக்கு என்ன பதில் சொல்லுவோம். பலன் அளிக்கப்படும் நாளிலே நாம் வெட்கப்படாதபடிக்கு இன்றே பணிசெய்வோமாக.

அன்பான சகோதரனே, சகோதரியே உனது வாழ்நாட்களை சற்றே திரும்பிப் பார். நீ வீணடித்த காலங்கள் கடந்து போய்விட்டிருக்கலாம். போனது போகட்டும்; இனிவரும் நாட்களையாவது சரியான முறையில் வாழக் கற்றுக் கொள். காலங்கள் போனால் திரும்பாது; ஆகவே கிருபையின் நாட்களைத் தள்ளாமல், உலகத்தின் இன்பங்களைவிட்டு, தேவனுக்காக உழைப்போமாக.

"அன்பின் தேவனே, நான் வீணடித்த காலங்களை எனக்கு மன்னித்து, வரும் நாட்களை பிரயோஜனப்படுத்திக்கொள்ள அருள் செய்வீராக, ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: யோவான் 16:19-33

செப்
22
செவ்வாய்

# உபத்திரவம் உண்டு!

'உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்.' (யோவான் 16:33)

எங்கே உபத்திரவமும், பிரச்சனையும், துன்பமும் இருக்கின்றதோ, அவ்விடத்தைவிட்டு விலக்கி நடக்கவே நாம் எப்போதும் யோசிப்போம். அதே சமயம் எங்கே நன்மைகளும் ஆசீர்வாதங்களும் வருவாயும் கிடைக்கின்றதோ, அதையே நாம் தேடி ஓடுவோம். ஒரு பெரியவரைப் பார்த்து, 'ஐயா, இப்பொழுது நீங்கள் எந்தச் சபைக்குப் போகிறீர்கள்' என்று கேட்டபோது, 'இப்பொழுது இந்தக் குறிப்பிட்ட சபைக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறேன், அங்கேதான் வாராவாரம் அரிசி, மா, சீனி தவறாமல் கொடுக்கிறார்கள்' என்று பதிலளித்தார். அன்று, எல்லா உபத்திரவங்கள் மத்தியிலும் உறுதியாக நின்று ஆண்டவரை ஏற்றுக்கொண்ட இரட்சிக்கப்பட்ட மக்களை கர்த்தர் சபையிலே சேர்த்தார். ஆனால் இன்று அரிசிக்கும் மாவுக்கும் அலைபவர்களைத்தான் நாம் சபையிலே சேர்த்துக்கொள்ளுகிறோம். சரியானமுறையில் 'தேவனுடைய வார்த்தையால் தொடப்பட்டு சபையிலே சேருவோரைப் பார்க்கிலும், சீனிக்கும் மாவுக்கும் அலைந்து திரிந்து சபையில் சேருவோர்தான் அதிகம் எனலாம்.

கிறிஸ்தவ வாழ்வென்பது ஒரு சுகபோக வாழ்வல்ல. 'உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு' என்று ஆண்டவர் தமது சீஷர்களுக்கு உறுதியாகக் கூறியுள்ளார். 'ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்' என்றும் சொன்னார். இதுதான் ஆண்டவர் தமது சீடருக்குக் கொடுத்த உறுதியான வார்த்தை. இது இன்று நமக்கும் உரியதாகும். எவ்வளவு தான் உபத்திரவங்களும், பாடுகளும் வந்தாலும் எம்மை அழைத்த தேவனும் பாடுகளுக்கூடாக சென்றவர் என்பதால் நமக்கு திடநம்பிக்கை உண்டு.

"இவ்வுலக பாடு என்னை, என்ன செய்திடும்? அவ்வுலக வாழ்வைக் காணக் காத்திருக்கிறேன்." என்று பாடிவைத்தார் ஒரு பக்தர். ஆம், சீடராகிய எமக்கு வரும் பாடுகளும், உபத்திரவங்களும் இவ்வுலகத்துக்குரியதுதான். அதை நாம் தேவபெலனோடு வென்றுவிட எத்தனிக்கவேண்டும். பாவம் நிறைந்த இவ்வுலகில் வாழும் நாம், பாவத்தோடு சேர்ந்து ஜீவிக்காமல், அதற்கு எதிர்த்து ஜீவிக்கும்போது, உலகத்தோடு ஒவ்வாத எமது வாழ்வுக்கு உலகத்திலும், உலகத்தாரிடமும் இருந்து பலவிதமான பிரச்சினைகளும், போராட்டங்களும், துன்பங்களும் வரலாம். அவற்றை எதிர்த்துப் போராட தேவபெலனை நாம் நாடுவோமாக. உன்னதமானவரின் அந்த உன்னதமான பெலன் எம்மைத்தாங்க வேண்டுமானால். எமக்கு ஒத்தாசைவரும் அவருடைய பர்வதங்களை தினமும் நோக்குவோமாக. அப்போது நமக்கு வெற்றி நிச்சயம்.

"தீங்குநாளில் என்னையவர் தம் கூடார மறைவில் காத்திடுவார். தகுந்தவேளை தம் கரத்தால், கன்மலை மேலாய் உயர்த்திடுவார். ஆம் ஆண்டவரே, உம் கூடார மறைவில் என்னைக் காத்துக்கொள்ளும், ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
23
புதன்

வாசிப்பு: எபேசியர் 4:1-16

# அழைப்புக்கு உண்மையாயிரு!

'நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து....' (எபேசியர் 4:1)

சீடர்களின் அழைப்பானது ஒருவருக்கொருவர் வித்தியாசப்படலாம். அழைக்கப்பட்ட விதங்களும் வித்தியாசமானதாக இருக்கலாம். ஆனால், நம்மை அழைத்த தேவன் ஒருவரே: அவர் ஒரே நோக்கத்திற்காகவே அனைவரையும் அழைத்திருக்கிறார். சிலரை அப்போஸ்தலர்களாகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பர்களாகவும், சிலரை போதகராகவும் அழைத்திருக்கிறார். ஆனால் அனைவரும் ஒன்றாக ஒற்றுமையோடு இயங்கவேண்டும் என்றே ஆசிக்கிறார். எபேசியருக்கு பவுல் கூறுகின்ற ஆலோசனையும் இதுவே. 'மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடியபொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்துகொள்ளுங்கள்' என்கிறார்.

இன்று சபையின் மத்தியிலும், கிறிஸ்தவ ஐக்கியங்கள் மத்தியிலும், போட்டிகளும் பொறாமைகளும் ஏற்படக்காரணம் என்ன? ஒவ்வொருவரும் தங்கள் அழைப்பை மறந்து, மற்றவர் அழைப்பினுள் தலையிடுவதேன்? மற்றவரைப்போல என்னால் செயற்பட முடியவில்லையே, அவருக்கு இருக்கும் திறமை எனக்குள் இல்லையே என்று தாழ்வு மனப்பான்மைக்குள்ளும், விரக்தியின் விளிம்புக்கும் தள்ளப்படுவது ஏன்? இவ்விதமான மனநிலையில் இருக்கும் எவரையும், பிசாசானவனும் இலகுவாக தன் வலைக்குள் சிக்கவைத்து விடுவான். நாமும் இவ்விதமான நிலைக்குள் தற்போது பிடிபட்டிருக்கிறோமா?

முதலாவது, எமது அழைப்பு என்ன என்பதை அமர்ந்திருந்து, நாம் அறிந்துகொள்ளவேண்டும். அறிந்துவிட்டால் அந்த அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க பிரயாசப்படவேண்டும். யூதாஸை சீடனாக அழைத்தார் நமது ஆண்டவர். அவன் தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பான காசுப்பையை வைத்துக்கொண்டு, பொறுப்பானவனாகவும் இருந்திருக்கலாம். ஆனால் காலப்போக்கில் அவன் அக் காசுக்கே அடிமையாகி, பதவி மோகத்தினால் 30 வெள்ளிக்காசுக்கு தனது குருவாகிய இயேசுவைக் காட்டிக்கொடுத்து விட்டான். அவனது அழைப்புக்கு அவன் உண்மையுள்ளவனாக இருக்கவில்லை. எமது அழைப்புகளில் நாம் எப்படியாக நடந்துகொள்ளுகிறோம்? நாம் பெற்ற அழைப்பின் மேன்மையை மறந்து, சுய நோக்கங்களுக்காக அந்த மேன்மையை நாம் உபயோகப்படுத்துகிறோமா? வேண்டாம். நமது அழைப்புக்கு பாத்திரவான்களாக இனி நடந்துகொள்ள பிரயாசப்படுவோமாக.

"என்னை அழைத்த நீர் உண்மையுள்ளவராய் இருப்பதுபோல, நானும் உமது அழைப்புக்கு பாத்திரவானாய் நடந்துகொள்ள கிருபை தாரும், ஐயா. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்**
**24**
*வியாழன்*

# தேவ வழிநடத்துதல்

'நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.' (சங்கீதம் 32:8)

சீடத்துவ வாழ்வு தேவ வழிநடத்துதலோடு கூடியதான ஒரு வாழ்வு. ஆண்டவராகிய இயேசு தனக்கு சீடர்களை தெரிந்தெடுத்து அவர்களுக்குப் பலவற்றைக் கற்றுக்கொடுத்தார். பின்னர் தான் எடுத்துக்கொள்ளப்படும் காலம் நெருங்கியபோது, 'நான் போகிறேன்; ஆனால் சத்தியஆவியாகிய தேற்றரவாளனை உங்களுக்கு அனுப்புகிறேன். அவர் வந்து சகல சத்தியத்துக்குள்ளும் உங்களை வழிநடத்துவார்' என்று சொன்னார். ஆம், ஒரு சீடனின் வாழ்வுக்கு தேவ வழிநடத்துதல் அவசியமாகின்றது.

தேவனுடைய சித்தப்படியாக மனுக்குலத்தை மீட்க வந்த குழந்தை இயேசுவை, ஏரோதின் கைக்குத் தப்புவிப்பதற்காக, தேவனுடைய வழிநடத்தல் அவரோடுகூட இருந்ததை இன்றைய வாசிப்புப் பகுதியிலே நாம் காண்கிறோம். அதனால்தான் சாஸ்திரிகள் திரும்பவும் ஏரோதைச் சந்திக்காமல் வேறுவழியாக திரும்பிப்போகும்படிக்கு சொப்பனத்தில் எச்சரிப்பு பெற்றனர். பின்னர் பிள்ளையைக் காக்கும்படிக்கு எகிப்துக்கு ஓடிப்போகும்படிக்கு யோசேப்புக்கும் எச்சரிப்பு கிடைத்தது. எமது வாழ்விலே ஆண்டவர் எம்மோடு இடைப்படுவதையும், அவரது வழிநடத்துதலையும் நாம் எவ்வளவுக்கு உணர்ந்திருக்கிறோம்?

ஆண்டவரோடு எவ்வளவுக்கு எமக்கு உறவு உள்ளதோ அந்தளவுக்குத்தான் வழிநடத்துதலையும் நாம் உணர்ந்துகொள்ளலாம். இன்று தங்கள் சொந்த வாழ்வில், ஜெப வேளைகளையும் வார்த்தைகளைத் தியானித்தலையும் மறந்து, மற்றவர்களின் ஜெபங்களில் வாழ்ந்துகொண்டிருப்போர் எத்தனைபேர்? இவ்வுலகில் இருக்கும் வரைக்கும் போராட்டங்களும், பிரச்சினைகளும் இருக்கத்தான் செய்யும். காலையிலிருந்து மாலைவரைக்கும் செய்யவேண்டிய காரியங்களும் அதிகம் இருக்கும். இப்படியான ஒரு சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம், தேவ சமுகத்தில் சற்று நேரமெனினும் அமர்ந்திருந்து ஜெபித்து வார்த்தைகளைத் தியானிக்காவிடில், தேவன் எம்மோடு பேசுவதையும், அவரது வழிநடத்துதலையும் எப்படி நம்மால் உணர்ந்துகொள்ளமுடியும் என்பதை சற்றே சிந்தித்துப் பாருங்கள். "பூவுலக சத்தமும் என் மாம்ச சத்தமும் இணைந்து ஒலிக்குதே, ஆனால் மெல்லிய உம் சத்தம் தெளிவாகக்கேட்டிட என் செவியை திறந்திடுமே" என பாடிவைத்தார் ஒரு பக்தன். பலமாகக் கேட்டிடும் உலகத்தின் சத்தங்கள் மத்தியில், தேவசத்தத்தையும் அவர் வழிநடத்துதலையும் உணர்ந்து கொள்ள அவர் பாதம் அமர்ந்திருந்து எம்மை ஆயத்தப்படுத்துவோம்.

"அன்பின் தேவனே, உமது வழிநடத்துதலை என் வாழ்வில் நான் உணர்ந்து வாழும்படி, எப்போதும் உம்மோடு நல்லுறவில் வளர உமது கிருபை தந்து எனக்கு அருள்செய்யும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
25
வெள்ளி



# எமது முக்கியத்துவங்கள்

...உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான். (லூக்கா 14:33)

ஒரு கணவனும் மனைவியும் தூரப்பயணமாகப் புறப்பட்டார்கள். தனது மனைவிக்கு மறதி அதிகம் என்பதனால், சில பொருட்களைக் குறிப்பிட்டு, அதை எடுத்தீரா? இதை எடுத்தீரா? என்று வழிநெடுகவே கணவன் கேட்டுக்கொண்டு வந்தார். எல்லாவற்றிற்கும் மனைவி, ஆம் என்று பதில் அளிப்பதைக் கவனித்த கணவன் தன் மனைவியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை எண்ணி உள்ளம் பூரித்துக் கொண்டார். போய்ச் சேரவேண்டிய இடம் வந்ததும், அவர்கள் வாகனத்தைவிட்டு இறங்கி பெட்டிகளை இறக்கும்போது, முக்கியமான பெட்டியைக் காணவில்லை என்பதை அவதானித்தனர். அப்பொழுது மனைவி "அதை எடுத்தீரா? இதை எடுத்தீரா? என்று கேட்ட நீங்கள், பெட்டியை எடுத்தீரா என்று கேட்கவில்லையே" என்றாள். முக்கியமான பொருட்களை எடுத்த மனைவி, அதிமுக்கியமான பெட்டியை மறந்துவிட்டாள். எமது முக்கியத்துவங்களை நாமும் சரியாக வரிசைப்படுத்தாவிட்டால் எமது நிலையும் இதுவே.

ஆவிக்குரிய வாழ்வானாலும், நாளாந்த வாழ்வானாலும், அலுவலக கடமைகளானாலும், பாடசாலைப் படிப்பானாலும், எதுவாக இருந்தாலும்சரி, அவற்றில் எமது முக்கியத்துவங்கள் சரியாக வரிசைப்படுத்தப்பட வேண்டியது மிக மிக அவசியம். இல்லாவிட்டால் முக்கியமானதை நாம் தவறவிட்டுவிட்டு, முக்கியமற்றதைச் செய்துகொண்டிருப்போம். தனக்கு சீஷனாய் இருக்கவேண்டிய வனின் மூன்று முக்கியத்துவங்களைக் குறித்து ஆண்டவர் இன்றைய தியானப் பகுதியில் வலியுறுத்துகிறார். முதலாவது, தன் குடும்பத்தையும், தன் ஜீவனை யும் வெறுக்கவேண்டும். இரண்டாவது, தன் சிலுவையைச் சுமந்துகொண்டு இயேசுவைப் பின்செல்லவேண்டும். மூன்றாவது, தனக்குண்டானவைகளை வெறுத்துவிடவேண்டும். அப்படியானால் ஆண்டவர் எம்மை ஒரு துறவிபோல வாழச்சொல்லுகிறாரா? இல்லவே இல்லை. எமக்குக் குடும்பத்தைத் தந்தவரும், ஜீவனைத் தந்தவரும், எமக்குண்டான யாவற்றையும் தந்தவரும் ஆண்டவரே. ஆனாலும் ஆண்டவருக்கு சீஷனாய் இருக்க விரும்புகிறவன் இவையெல்லாவற் றிற்கும் மேலாக முதலாவது முக்கியத்துவத்தை அவருக்கே கொடுக்கவேண்டும் என்பதையே ஆண்டவர் இங்கே வலியுறுத்துகிறார்.

எமது வாழ்வின் முக்கியத்துவங்களில், ஆண்டவருக்கும் அவரது விடயங்களுக்கும் எந்த இடத்தைக் கொடுத்திருக்கிறோம்? ஜிக்சோ (Jigsaw) விளையாட்டில் சரியாக துண்டுகளைப் பொருத்தினால் எப்படியாக நேர்த்தியான படம் வருகிறதோ, அதுபோலவே, தேவனுடனான உறவிலும் முக்கியத்துவங் களை சரியாகப்போடுவோமானால் எமது வாழ்வும் நேர்த்தியாக அமைந்துவிடும்.

"அனைத்தையும் நேர்த்தியாக உருவாக்கிய ஆண்டவரே, எனது வாழ்வையும் நேர்த்தியாக்கும். உமக்கே என்றென்றும் முக்கியத்துவம் கொடுக்க எனக்கு உதவிசெய்தருளும், ஆமென்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
**26**
சனி

வாசிப்பு: யோவான் 10:14-30

# அன்பின் உச்சக்கட்டம்

'ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.' (யோவான் 10:28)

சில ஆண்டுகளுக்கு முன்பு போர் சூழலில் ஷெல் வீச்சுக்கள் மத்தியில் ஒரு கட்டிடத்தில் இருந்து ஒரு பெண்ணின் சடலத்தைத் தூக்கியபோது அச் சடலத்தின்கீழ் ஒரு பத்துமாதக்குழந்தை கண்டெடுக்கப்பட்ட உண்மை சம்பவத்தை பத்திரிகை வாயிலாகக் அறிந்துகொண்டேன். தான் மரிக்கும் தருவாயிலும் தனது குழந்தையைக் காக்க எண்ணிய அத்தாயின் அன்புக்கும் மேலாக "ஸ்திரீயான வள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை" (ஏசா.49:15) என்றுரைத்த ஆண்டவரின் அன்பின் ஆழம் இத்தியானப் பகுதியில் அழகாகச் சித்தரிக்கப்பட் டுள்ளது. 'நானே நல்ல மேய்ப்பன். ஆடுகளுக்காக என் ஜீவனையும் நான் கொடுக்கிறேன்' என்று ஆண்டவர் கூறும்போது அவரது அன்பின் உச்சக்கட்டம் எமக்கு மிகவும் தெளிவாக வெளிப்படுகிறது.

இந்த தொழுவத்தில் இல்லாத வேறே ஆடுகளும் எனக்குண்டு, அவைக ளையும் நான் கொண்டுவரவேண்டும் என்று ஆண்டவர் சொல்லும்போது, அவரது பணியின் முக்கியத்துவத்தைக் குறித்து ஆண்டவர் இங்கே வலியுறுத்துகிறார். அதேபோல், எமது சீடத்துவப் பணியிலும் இது காணப்படவேண்டும். முதலாவது, அழிந்துபோகும் ஆத்துமாக்களைக் குறித்ததான பாரம், அவர்கள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பு. பின்னர், அந்த அன்பின் அடிப்படையில் நாம் அவர்கள் மத்தியில் செய்யும் பணியும், அவர்களையும் நாம் தேவ அன்புக்குள் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வமும் நமக்கு அவசியம்.

நான் வயிறார சாப்பிட்டுக்கொண்டு, பசியோடு இருக்கும் ஒருவருக்கு, தேவ அன்பைச் சொல்லிவிட முடியாது. அவரது பசியை நான் தீர்க்கும்படியான அன்பு முதலாவது என்னிடம் காணப்படவேண்டும். அதேவேளை தங்கள் தேவை களை மட்டும் நிறைவுசெய்யும் நோக்குடன் தேவனைத் தேடுவோரைக் குறித்தும் நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். எமது பணியில் நாம் கண்மூடித்தனமாக செயற்படமுடியாது. சரியான வழிநடத்துதலைத் தேவனிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளவேண்டும்.

என்னுடையவர்களை ஒருவனும் என் கையிலிருந்து பறித்துக்கொள்வ தில்லை என்று கூறும்போது, தன்னுடைய மக்கள்மீது ஆண்டவர் கொண்டுள்ள ஆழமான அன்பின் உச்சக்கட்டம் புரிகிறதல்லவா? அவரது சீடராக அழைக்கப் பட்ட நாமும் அதே அன்பைக் கொண்டவர்களாக இருக்கவேண்டியது முக்கியம். சீடத்துவப்பணி செய்வதற்கு அன்பு அடிப்படையான குணாதிசயமாகும். பாவிக ளான நாம் எப்படியாக அவர் பிள்ளைகளானோம்? அவர் எம்மீதுகொண்ட அளவுக்கடந்த அன்பினால் அல்லவா?

"நீர் என்னில் காட்டிய அன்பை, நானும் பிறரில் காட்டவும், நீர் கற்றுத்தந்த பணியை நானும் தொடர்ந்திடவும், உம் அருள்தாரும் ஆண்டவரே. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
27
ஞாயிறு

வாசிப்பு: யோவான் 17:1-8

# நிறைவான சீடத்துவம்

'பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்.' (யோவான் 17:4)

ஒருசிலர் பொறுப்பை எடுப்பார்கள், ஆனால் அதைச் செய்து முடிக்கும் முன்பே அதை விட்டுவிட்டு இன்னுமொரு காரியத்துக்காக ஓடுவார்கள். பின்னர் அதையும் நிறைவுசெய்ய மாட்டார்கள். இவ்விதமாக மாறி மாறி ஓடுவதில் அவர்களுக்கொரு சந்தோஷம்போலும். ஆனால் ஒரு பொறுப்பை எடுத்து அதை முழுவதுமாக திருப்தியாகச் செய்து முடிப்பதில் இருக்கும் சந்தோஷத்தை வேறு எதிலும் நாம் பெற்றுவிடமுடியாது. ஆண்டவருக்குச் சீடராக அழைக்கப்பட்ட நாம், எமக்குக் கொடுக்கப்பட்ட சீடத்துவப் பணியை திருப்தியாக நிறைவேற்றி முடிக்கவேண்டியது எமக்குரிய பாரிய பொறுப்பு என்பதனை நாம் முதலாவது உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

ஆண்டவராகிய இயேசு ஒரு பெரிய பணியை ஏற்றவராக, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவேண்டிய ஒரு பாரிய பொறுப்புடனேயே உலகிற்கு வந்தார். ஊழியக் காலத்தில் அவரது முழுநோக்கமும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதாகவே இருந்தது. அவரையும் பிசாசானவன் சோதிக்க வந்தான், அவருக்கும் சோர்வுகள் வந்தது, பசி வந்தது, நித்திரை செய்தார். ஆனாலும், தேவனோடு நேரம் செலவிட அவர் தவறவில்லை. பிதாவோடு அவர் கொண்டிருந்த நெருக்கமான உறவுதான், அவரது பணியை முற்றிலுமாக நிறைவேற்றும் வல்லமையைத் தேடித்தந்தது. கடைசியில் "நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியைகளைச் செய்து முடித்தேன்" என உறுதியாக அவரால் சொல்ல முடிந்தது.

இன்று எமக்களிக்கப்பட்டிருக்கும் சீடத்துவப் பணிகள் என்ன? எமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்கள் என்ன? அவற்றை நாம் கரிசனையோடு செய்கிறோமா? எமது வாழ்வின் இறுதியில் ஆண்டவர் தந்த பொறுப்புக்களை நிறைவாக செய்து முடித்தேன் என்று தைரியமாக எம்மால் கூறமுடியுமா? எமது பொறுப்புக்களில் நாம் அசதியாக இருப்பதற்குக் காரணம், தேவனோடுள்ள நமது உறவில் நாம் அசட்டையாக இருப்பதேயாகும். தேவனோடு எவ்வளவுக்கு எமது உறவைக் காத்துக்கொள்ளுகிறோமோ அந்தளவுக்கு அவர் எமக்குத் தந்துள்ள பணிக்கும் நாம் முக்கியத்துவம் கொடுப்போம். எனவே தேவனோடுள்ள எமது உறவைக் கட்டியெழுப்புவோமாக. அவர் தந்த பணியை நிறைவாகச் செய்து முடிப்போம். பிதா தன்னிடம் தந்த பணியை நிறைவாக்கிய ஆண்டவராகிய இயேசுவின் சீடராக அழைக்கப்பட்ட நாமும் அவரைப்போலவே நமக்குக் கொடுக்கப்பட்ட பணியையும் நிறைவாக்குவோம். அது நமக்கு ஒரு மன நிறைவான வாழ்வைத் தரும்.

"அன்பின் தேவனே, எனக்குக் கொடுக்கப்பட்ட பணியை விருப்பத்தோடும், திருப்தியோடும், நிறைவாக செய்து முடிக்க உமது பெலன் தாரும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்**
**28**
**திங்கள்**

# ஜாக்கிரதையாயிரு

'நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும்... உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.' (2தீமோத்தேயு 2:15)

வாலிபனாகிய தீமோத்தேயுவை நல்ல ஒரு சீடனாகப் பலதடவைகளிலும் பவுல் பயிற்றுவிப்பதை நாம் காணலாம். பரிசுத்த வாழ்வை ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்வதிலும், கள்ளப் போதனைகளுக்கு விலகி இருப்பதைக் குறித்தும், வாலிபப் பிரயாயத்து பாலியல் இச்சைகளுக்கு விலகி ஓடுவதைக் குறித்தும், இப்படியாக பலவிதமான ஆலோசனைகளையும் தீமோத்தேயுவுக்கு பவுல் கொடுத்திருந்தார். இங்கே சீடத்துவத்துக்குத் தேவையான மூன்று முக்கிய காரியங்களைக் காத்துக்கொள்வதில் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கும்படிக்கு வலியுறுத்துவதைக் காண்கிறோம்.

முதலாவதாக, வெட்கப்படாத ஊழியக்காரன். அதாவது, தேவனுடைய காரியங்களைக் குறித்து அறிவிப்பதற்கும், அவருக்கு சாட்சியாய் ஜீவிப்பதற்கும் வெட்கப்படாமல் செயற்பட சீடனானவன் அழைக்கப்பட்டிருக்கிறான். ஆனால், இன்று வேதாகமத்தை தூக்கிச்செல்லவே வெட்கப்படும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நாம் தேவனுக்காக வெட்கப்படாத சீடனாய் எப்படியெல்லாம் வாழவேண்டும் என்பதைக் குறித்து சற்று சிந்திப்போமா?

இரண்டாவதாக, சத்தியவசனத்தை நிதானமாய்ப் போதிக்கிறவன். இன்று தேவனுடைய வார்த்தையைப் போதிக்கும்போது நிதானம் இழந்துபோவோர் அநேகர். வார்த்தை சொல்லப்பட்ட சூழ்நிலைகளை மறந்துவிட்டு வசனங்களை அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தெரிந்தெடுத்து பேசுகிறவர்கள் பலர். தேவனுடைய சத்தியத்தை சத்தியமாய்ப் போதிப்பதற்குப் பதிலாக தங்கள் சுயமான காரியங்களைப் பேசி தமக்கு பேரையும் புகழையும் எடுத்துக்கொள்வோர் அநேகர். தேவன் ஒழுங்காக அனைத்தையும் நேர்த்தியாக செய்துமுடிக்கும் தேவன். அவரது காரியங்கள் எல்லாமே நிதானமானவைகள். அப்படிப்பட்ட தேவனுக்கு சீடரான நாங்கள், நிதானம் இழந்து போகலாமா? அவர் பாதத்தில் அமர்ந்திருந்து நிதானமாய் தியானிக்கவேண்டிய வார்த்தைகளை, கண்களை மூடி தலையைத் தொட்டுவிட்டு, ஆண்டவர் பேசினார் என்று சொல்லி, இஷ்டம் போல் நாம் வாழலாமா? உண்மைச் சீடன் நிதானம் இழக்கமாட்டான்.

மூன்றாவதாக, தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிலைநிற்பவன். மனுஷருக்கு முன்பாக நாம் உத்தமனாய் நடிக்கமுடியும். ஆனால் தேவனுக்கு முன்பாக நடிப்பு செல்லுபடியாகாது. தேவனுக்கு முன்பாக எப்போதுமே உத்தமனாய் இருக்கவேண்டும் என்று நாம் எம்மைக்குறித்து சிந்திப்பதுண்டா? எம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர். அவரது சீடராக அழைக்கப்பட்ட நாம், எப்படி உண்மைக்குப் புறம்பாக நடந்துகொள்ளமுடியும். சீடத்துவத்துக்கு இம்மூன்றும் முக்கியமானவை. நமது நடைகளைக் கர்த்தருக்குள் காத்துக்கொள்வோமாக.

"என் அன்பின் ஆண்டவரே, வெட்கப்படாத, நிதானமாய்ப் போதிக்கிற, உண்மை உள்ள சீடனாய் வாழ அருள்புரியும்.. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்
29
செவ்வாய்

வாசிப்பு: லூக்கா 11:38-42

# வெளிவேஷம்

"உங்கள் உள்ளமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்கிறது." (லூக்கா 11:39)

பொதுவாக நாம் ஆலயத்துக்கு அதாவது தேவனின் சந்நிதிக்குச் செல்லும்போது, சுத்தமாகச் செல்ல விரும்புவதுண்டு. முதல்நாள் நீர்வெட்டு என்றால் மறுநாள் ஆலயத்தில் எண்ணிக்கையும் குறைந்துவிடும். காரணம், குளிக்காமல் எப்படி ஆலயம் செல்வது என்போம். குளித்து வெண்ணிற ஆடை களை அணிந்து ஆலயம் செல்லும்போது பார்ப்பதற்கு மிகவும் அழகாகத்தான் இருக்கும். எம்மைப் பார்த்தாலே பரிசுத்தம் முகத்தில் ஜொலிப்பதுபோலிருக்கும். ஆனால் அந்த வெளிப் பரிசுத்தத்தை ஆண்டவர் பார்க்கவில்லையே. முதலாவது எமது உள்ளான ஜீவியம் தேவசந்நிதியில் நறுமணம் வீசவேண்டும்.

தேநீர் அருந்தும் கோப்பைகளின் உட்புறத்தைக் அடிக்கடி கழுவாவிட் டால் அதில் கறைபடிந்து கிடக்கும். வெளிக்கோப்பையோ எப்போதுமே சுத்தமாக இருக்கும். அதில் தேநீரைவிட்டு வைத்தால் பார்க்க அழகாகத் தோன்றும். ஆனால், தேநீர் குடித்துவிட்டு உட்புறக்கோப்பையைப் பார்த்தால். இதில்தானா தேநீர் குடித்தோம் என்று வயிற்றைக் குமட்டும். அதுபோலவே எமது உள்ளங் களும் ஆண்டவரின் சமுகத்தில் நாற்றம் எடுக்கும்படியாக வைத்துக்கொண்டு எமது வெளித்தோற்றத்தை மட்டும் பரிசுத்தமாய்க் காட்டிக்கொள்ளுகிறோமா? பரிசுத்தமான தேவனின் சீடராய் அழைக்கப்பட்ட நாம் உள்ளும் புறமும் அதே பரிசுத்தத்தை நாடவேண்டும்.

பரிசேயரின் வாழ்வும் வேதபாரகரின் வாழ்வும், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்குச் சமம் என்றார் இயேசு. வெள்ளைச் சாந்து பூசப்பட்டு அழகாக காட்சியளிக்கும் கல்லறைகளுக்குள்ளே கிடக்கும் நாற்றமானது வெளியில் தெரி யாது. அது வெள்ளைச் சாந்தினாலும், சீமெந்தினாலும் மறைக்கப்பட்டுள்ளது. அதுபோல எமது பாவங்களையும், உள்ளத்து அழுக்குகளையும் எமது வெளித் தோற்றத்தினால் நாம் தேவனுக்கு மறைத்துவிடமுடியாது. அவருக்கு முன்பாக அனைத்துமே வெளியரங்கமாய் இருக்கிறது. பரிசுத்த தேவனுக்கு சீடனாயிருக்க விரும்புகிறவன், அவரது இரத்தத்தால் கழுவப்பட்டு, ஜீவியகால முடிவுபரியந்த மும் அவருக்கு உண்மையுள்ளவனாய் பரிசுத்த வாழ்வு வாழவேண்டும். எமது வாழ்வை சற்றே தேவசமுகத்தில் ஆராய்ந்து பார்ப்போம். எமது உள்ளார்ந்த ஜீவியம் தேவனுக்கு முன்பாகப் பரிசுத்தமாய் இருக்கிறதா? மாய்மாலமான, வேஷம்போடுகின்ற இரட்டைவாழ்வு நமக்கு வேண்டாம். எமது ஆடைகளில் மாத்திரமல்ல, தேவனுக்கு முன்பாக எமது உள்ளார்ந்த ஜீவியங்களிலும் தூய்மையைக் கடைப்பிடிப்போமாக.

"பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை, யாரும் காணா உள்அலங்கோலத்தை. மனம்நொந்து மருளுகிறேன், பரிசுத்தம் கெஞ்சுகிறேன். பரிசுத்தத்தில் வாழ அருள்தாரும் இயேசுவே. ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு: 1பேதுரு 5:5-14

செப்
30
புதன்

# கைக்குள் அடங்கியிருத்தல்

"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1பேதுரு 5:6)

"இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்." (ஏசா. 49:16) என்ற வாக்குத்தத்தம் எம் அனைவருக்குமே மிகவும் பிடிக்கும். ஒருமுறை தனது ஐம்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடிய ஒரு சகோதரிக்கு இவ்வசனத்தைக் குறித்ததான ஒரு படத்தைப் பரிசுப்பொருளாகக் கொடுத்தபோது, தனக்கு வந்த பரிசுப்பொருட்களில் தனக்கு மிகவும் பிடித்துக்கொண்ட ஒரு பரிசு எனக் கூறி மகிழ்ந்தார்கள். இவ் வசனம் எம்மைக் கவர்ந்துகொள்வதற்குக் காரணம் என்ன? தேவன் எம்மை தனது உள்ளங்கைகளில் வைத்துத் தாங்குகிறார்; எம்மைப் பாதுகாக்கிறார் என்ற உன்னதமான நம்பிக்கைதான். ஆனால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள எமது தியான வாக்கியமோ, தேவனின் பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் என்று எமக்கு ஆலோசனை வழங்குகிறது. அது எமக்கு ஏற்றுக்கொள்ளச் சற்றுக் கடினமானது. எனது இஷ்டம்போல் நான் விரும்பியது போல் அல்லாமல் தேவனின் காலநேரம்வரைக்கும் அவரது கைக்குள் அடங்கியிருப்பதும், எமது சுயத்தைக் கட்டுப்படுத்தி வாழ்வதும் எமக்குச் சற்றுக் கடினமாகத் தோன்றினும் அதை நாம் செய்யவேண்டியது எமது சீடத்துவப் பணியின் முக்கியமான ஒன்றாகும்.

இயேசுவோடு வாழ்ந்த காலங்களில் பேதுரு, எல்லாவற்றிற்கும் முந்திக்கொண்டு முன்னே ஓடிச்செல்வதும், தனக்குத்தான் அனைத்தும் தெரியும் என்ற தோரணையில் இயேசுவையே கடிந்துகொள்ள எத்தனிப்பதும், அவரது ஆரம்ப கால அனுபவமாய் இருந்தது. ஆனால் தனது வாழ்க்கையில் உயிர்த்தெழுந்த இயேசுவைச் சந்தித்து அவரது அன்புக்குக் கட்டுப்பட்ட பின்னர், பரிசுத்தாவியானவரின் பெலனோடு எழுந்து நின்று பிரசங்கித்த பேதுரு வித்தியாசமானவர். ஆம், ஏற்றகாலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவரது பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் என்று இந்த பேதுருவே எழுதினார்.

சீடனானவன் குருவின் வார்த்தைக்கும், அவரது தகுந்தவேளைக்கும் கட்டுப்பட்டவனாய் இருப்பது முக்கியம். குருவின் கட்டளையை கைவிட்டுவிட்டு, தனது விருப்பம்போல சீடனானவன் வாழ முற்படக்கூடாது. ஆண்டவரின் சீடராய் அழைக்கப்பட்ட நாமும் தேவனின் கட்டளைக்குக் கீழ்ப்பட்டவர்களாய், அவரது வேளைக்குக் காத்திருப்பவர்களாய் இருக்கவே பிரயாசப்படவேண்டும். தேவனின் கைக்குள் அடங்கியிருந்து ஏற்றகாலத்திலே அவர் நம்மை உயர்த்தும்போதும், தமது நாமத்தின் மகிமைக்கென அவர் நம்மை உபயோகிக்கும்போதும் அந்த மகிழ்ச்சி அளப்பெரிது. அவ்வண்ணமாய் தேவசித்தத்திற்குள் அடங்கியிருக்க நாம் வாஞ்சிப்போமானால் அது எமக்கு பாக்கியமே.

"அன்பின் தேவனே, உமது சித்தத்திற்குள் அடங்கியிருந்து, உமக்குப் பிரியமானபடி நடக்க எனக்கு கிருபை செய்தருளும். ஆமென்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *நினைவுபடுத்துகிறோம்*



எமது வெளியீடுகளை புதிதாக பெற விரும்புகிறவர்கள் மற்றும் எமது வெளியீடுகளை தொடர்ந்து பெற்றுவரும் சந்தாதாரர்களுக்காக எமது சந்தா கட்டண விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## *ஒரு வருடத்திற்கான சந்தா*

| | |
|---|---|
| இலங்கையில் உள்ளவர்களுக்கு | - ரூ. 500.00 |
| தென்னாசிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 1,000.00 |
| மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 1,000.00 |
| ஐரோப்பிய நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,000.00 |
| அமெரிக்க நாடுகளில் உள்ளவர்களுக்கு | - ரூ. 2,000.00 |

## *உங்கள் சந்தா பணத்தை*

**மணியோடர் மூலம் பணம் அனுப்புவதாயின்:** "கொடுபட வேண்டிய இடம்" என்ற இடத்தில் சினமன் கார்டின்ஸ் **(CINNAMON GARDENS POST OFFICE)** என்றும், பணம் பெறுபவரின் பெயர் என்ற இடத்தில் **(BACK TO THE BIBLE)** என்றும் குறிப்பிட்டு அனுப்பவும்.

**காசோலை மூலம் அனுப்புவதாயின்: (BACK TO THE BIBLE)** என்ற பெயருக்கு காசோலை எழுதவும்.

*மேலே குறிப்பிடப்பட்ட விதங்களில் பணம் அனுப்புவதில் உங்களுக்கு சிரமம் அல்லது சிக்கல்கள் ஏதும் இருக்குமானால் எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்.*

***இங்கிலாந்து மற்றும் கனடாவில் உள்ளவர்களுக்கு***
பணம் அனுப்பிவைக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விபரங்களுக்கு எம்மோடு தொடர்புகொண்டு விசாரிக்கவும்.

*(சந்தாதாரருக்கான படிவம் மறுபக்கத்தில் உள்ளது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா படிவம்



எமது வெளியீடுகளை புதிதாக பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், அல்லது உங்களுக்குத் தெரிந்த புதியவர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்த விரும்பினால் இந்த படிவத்தை தெளிவாக நிரப்பி அனுப்பவும்.

நீங்கள் ஏற்கனவே எமது வெளியீடுகளைப் பெற்றுவரும் சந்தாதாரராயின் **உங்கள் பெயர்**, முகவரியுடன் உங்கள் **கணனி இலக்கத்தையும்** குறிப்பிட்டு எழுதியனுப்புங்கள். உங்கள் முகவரியில் மாற்றம் ஏதும் இருக்குமானால் உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட மறவாதீர்கள்.

(முடிந்தால் ஆங்கிலத்தில் நிரப்பவும்)

பெயர் :............................................ கணனி இல.: ...................

முகவரி :..................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

எந்த மாதத்திலிருந்து எமது வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள்? [ ]

நீங்கள் புதிய சந்தாதாரரா, பழைய சந்தாதாரரா? [ ]

இப் படிவத்துடன் ரூபா..............................ஐ காசோலை / மணி ஓடர் மூலம் அனுப்பி வைத்துள்ளேன்.

அனுப்பியவர் பெயர்: ..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள் வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| ஆகஸ்ட் காலை | ஆகஸ்ட் மாலை | திகதி | செப்டெம்பர் காலை | செப்டெம்பர் மாலை |
|---|---|---|---|---|
| யோபு 32,33,34 | அப் 27:21-44 | 01 | சங். 139-144 | 1கொரி 11 |
| யோபு 35 - 38 | அப் 28 | 02 | சங். 145-150 | 1கொரி 12 |
| யோபு 39 - 42 | ரோமர் 1 | 03 | நீதி. 1,2,3 | 1கொரி 13 |
| சங் 1 - 7 | ரோமர் 2 | 04 | நீதி. 4-7 | 1கொரி 14:1-22 |
| சங் 8 - 14 | ரோமர் 3 | 05 | நீதி. 8-10 | 1கொரி 4:23-40 |
| சங் 15 - 18 | ரோமர் 4 | 06 | நீதி. 11-13 | 1கொரி 15:1-19 |
| சங் 19 - 24 | ரோமர் 5 | 07 | நீதி. 14-16 | 1கொரி 15:20-34 |
| சங் 25 - 30 | ரோமர் 6 | 08 | நீதி. 17-19 | 1கொரி 15:35-58 |
| சங் 31 - 34 | ரோமர் 7 | 09 | நீதி. 20-22 | 1கொரி 16 |
| சங் 35 - 37 | ரோமர் 8:01-17 | 10 | நீதி. 23-25 | 2கொரி 1 |
| சங் 38 - 42 | ரோமர் 8:18-39 | 11 | நீதி. 26-28 | 2கொரி 2 |
| சங் 43 - 48 | ரோமர் 9 | 12 | நீதி. 29-31 | 2கொரி 3 |
| சங் 49 - 52 | ரோமர் 10 | 13 | பிரச. 1,2,3 | 2கொரி 4 |
| சங் 53 - 58 | ரோமர் 11:01-12 | 14 | பிரச. 4,5,6 | 2கொரி 5 |
| சங் 59 - 65 | ரோமர் 11:13-36 | 15 | பிரச. 7,8,9 | 2கொரி 6 |
| சங் 66 - 69 | ரோமர் 12 | 16 | பிரச. 10,11,12 | 2கொரி 7 |
| சங் 70 - 73 | ரோமர் 13 | 17 | உன்னத. 1-5 | 2கொரி 8 |
| சங் 74 - 77 | ரோமர் 14 | 18 | உன்னத. 6,7,8 | 2கொரி 9 |
| சங் 78,79 | ரோமர் 15 | 19 | ஏசாயா 1,2 | 2கொரி 10 |
| சங் 80 - 85 | ரோமர் 16 | 20 | ஏசாயா 3,4,5 | 2கொரி 11 |
| சங் 86 - 89 | 1கொரி 1 | 21 | ஏசாயா 6,7,8 | 2கொரி 12 |
| சங் 90 - 94 | 1கொரி 2 | 22 | ஏசாயா 9-10 | 2கொரி 13 |
| சங் 95 - 101 | 1கொரி 3 | 23 | ஏசாயா 11,12,13 | கலாத். 1 |
| சங் 102 - 104 | 1கொரி 4 | 24 | ஏசாயா 14,15,16 | கலாத். 2 |
| சங் 105,106 | 1கொரி 5 | 25 | ஏசாயா 17-20 | கலாத். 3 |
| சங் 107 - 110 | 1கொரி 6 | 26 | ஏசாயா 21-23 | கலாத். 4 |
| சங் 111 - 117 | 1கொரி 7:01-24 | 27 | ஏசாயா 24-26 | கலாத். 5 |
| சங் 118-119:1-72 | 1கொரி 7:25-40 | 28 | ஏசாயா 27-29 | கலாத். 6 |
| சங் 119:73-176 | 1கொரி 8 | 29 | ஏசாயா 30-31 | எபேசியர் 1 |
| சங் 120 - 131 | 1கொரி 9 | 30 | ஏசாயா 32-34 | எபேசியர் 2 |
| சங் 132 - 138 | 1கொரி 10 | 31 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Sathiya Vasanam" - Supplementary

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/44/News/2009

இந்நூலை புதிதாக வாசிப்பவர்கள் தொடர்ந்தும் இந்நூலைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நீங்கள் எமது வெளியீடுகளை பெற்றுவரும் சந்தாதாரரானால் நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும் ஒவ்வொருமுறையும் உங்கள் கணனி (கம்பியூட்டர்) பதிவு இலக்கத்தையும் குறிப்பிட்டுத் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். உங்கள் கணனி பதிவு இலக்கம், உங்களுக்கு எமது வெளியீடுகள் அனுப்பப்படும் உறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது வெளியீடுகள் ஏதாவது தவறுதலாக இரண்டு பிரதிகள் உங்களுக்கு கிடைத்தால் தயவுசெய்து உங்களுடைய கணனி பதிவு இலக்கத்துடன் எமக்கு அறியத்தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

நீங்கள் வீடு மாறும்போது உங்கள் புதிய முகவரியுடன் உங்கள் பழைய முகவரியையும் குறிப்பிட்டு அறியத்தாருங்கள்.

எமது வெளியீடுகள் உரிய காலத்தில் உங்களுக்கு வந்து சேராவிடில் அது குறித்து உடனடியாக அறியத்தாருங்கள்.


எமது தபால் முகவரி
***SATHIYAVASANAM***
***P.O.Box 1012***
***Colombo - Sri Lanka***

நேரில் எமது முகவரி
***120A, Dharmapala Mawatte***
***Colombo 7***
***Sri Lanka***

BACK TO THE BIBLE

**சத்தியவசனம்**
த பெ 1012, கொழும்பு, இலங்கை

T - 011 2695441, 011 2698843
E - svsl@backtothebible.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org